கல்கி

KALKI 23-4-1972 45 காசு





My My!
My choice for the MAN

Century's *Cosy-Cot* COTTON SHIRTING with rich woollen

CENTURY for 100% cotton textiles

CENTURIZED
PRESHRUNK FABRIC

THE CENTURY SPG. & MFG. CO. LTD., BOMBAY 25 DD

For Fashion Fabrics choose *Century Shirtings*

NPS-CM 15

கல்கி



பொருளடக்கம்

பரிதாபி சித்திரை 11 - ஏப்ரல் 23, 1972

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	27-00	ரூ. 13-50

கல்கி

மலர் 31

இதழ் 39

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

மகா சாஸனத்துக்கொரு காப்புக் குழு

“ஏமாறாத பழம் பெரு வீரர்கள் இன்னும் சிலர் இருக்கிறார்கள். அதில் ஒருவர் ஸ்ரீ முரார்ஜி தேசாய். அவர் இந்திய மகாசாஸனத்தைக் கிழித்தழிக்க விடமாட்டார்'' என்று ராஜாஜி எழுதுகிறார். இதைப் படிக்கும்போது யதேச்சாதிகாரிகளின் கையில் நமது மூல அரசியல் சாஸனம் குரங்கு கைப் பூமாலையாகக் கசக்கப்படுவது கண்டு மனம் சோர்ந்தவர்களுக் கெல்லாம் புதிய தெம்பு உண்டாகும். ராஜாஜி மேலும் எழுதுகிறார்:

''இந்திய மூல அரசியல் சாஸனத்தைத் தகர்த்து நொறுக்கும் கொள்கையை ஸ்தாபன காங்கிரஸின் காரியக் குழுவும் ஏற்றுக் கொண்டு விட்டதை அனைவரும் அறிவர். இவ்விஷயத்தில் ஆள்கிற காங்கிரஸின் கொள்கையையும் திட்டத்தையுமே ஸ்தாபன காங்கிரஸும் ஒப்புக் கொண்டு விட்டது என்பது நாடறிந்த விஷயம். ஆனாலும் அநேகருக்குத் தெரியாத ஒரு விஷயம் உண்டு. ஆள்கிற காங்கிரஸுடன் போட்டியிடுவதாக எண்ணிக் கொண்டு அதன் கொள்கைக்கே ஸ்தாபன காங்கிரஸும் தலைவணங்கிய இந்தக் காரியத்துக்கு ஸ்ரீ முரார்ஜி தேசாய் அவர்கள் உடந்தையாக இருக்கவில்லை. அவர் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வோட்டுக் கொடுக்கவில்லை. நமது அரசியல் சட்ட சாஸனத்தின் தகர்ப்புக்குத் தங்களைச் 'சமாதான'ப்படுத்திக் கொள்ள முடியாத ஐந்தாறு பழங் காவலர்களில் அவர் ஒருவர்.

''ஸ்ரீ முரார்ஜி தேசாய் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். தேசத்தில் இன்று நடப்பவற்றைக் கண்டு—குறிப்பாகத் தரும நெறிகள் வேகமாக மறைந்து வருவது கண்டு — நான் மிகுந்த மன வருத்தம் கொண்டிருப்பதை இந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டு எழுதுகிறார்: 'இதே ரீதியில் சென்றால், இந்நாட்டில் சமயம் என்பது எதிர்காலத்தில் உயிர் பிழைத்திருக்குமா என்கிற ஐயம் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆயினும் எதிர்காலம் நன்றாக மலரும் என்ற நம்பிக்கைச் சித்தாந்த வாதியாக நான் இதுவரை இருந்து வந்திருப்பது போலவே இப்போதும் நம்பிக்கை தளராமல் இருக்கிறேன். விமோசனத்துக்கு ஒரு வழி ஏற்படும் என்று நம்புகிறேன். இன்று நாம் எதிர்முகம் கொடுக்க வேண்டியுள்ள தீமையைச் சமாளிக்க நீங்கள் சொல்வது போல், அஹிம்சா மார்க்கத்தில் அமைந்த நேரடி நடவடிக்கையே உபாயம் எனக் கருதுகிறேன். அஹிம்சா மார்க்கத்தில் நேரடி நடவடிக்கை எடுப்பதற்கான சூழ்நிலையை முதலில் தோற்றுவிக்க வேண்டும். உண்மையாகவே அஹிம்சையைப் பூரணமாகப் பற்றி ஒழுகக் கூடியவர்களுக்கு மட்டும் இந்த இயக்கம் கட்டுப்படுத்தப்பெற வேண்டும். இது குறித்த காரியக் கிரமங்களைப் பொறுமையுடன், தைரியத்துடன் வகுத்தாக வேண்டும். இது வரையில் இது குறித்து எனக்குத் திட்டவட்டமான யோசனை ஏதும் புலனாகவில்லை. ஆயினும் முறையானதோர் உபாயத்தைக் கண்டு கொள்ள முடியும் என்று நிச்சயமாக நம்புகிறேன்...' இவ்வாறு எழுதியிருக்கிறார் முரார்ஜி தேசாய்.

''ஆங்கில மக்கள் அயராத முனைப்புடன் பாடுபட்டு ஜான் மன்னரிடமிருந்து தங்களது உரிமைச் சாஸனத்தைப் பெற்றனர். அதை மகா சாஸனம் என்று பெயரிட்டுப் புனிதமானதாகப் போற்றிக் காத்தனர். மக்களுக்கு அடிப்படைச் சுதந்திரங்களை வழங்கும் இந்திய அரசியல் சாஸனத்தின் மூன்றாம் பகுதியும் இதே போல் பாரத மக்களின் மகா சாஸனமாகும். பிரிட்டிஷ் மக்களைப் போல் நாமும் அதன் புனிதத்துவத்தை உணர்ந்து காக்க வேண்டும். இப்போது மகா சாஸனப் பாதுகாப்புக் குழு ஒன்றினைத் தொடங்க வேண்டியது அவசியம். சுதந்திரக் கட்சியானது இக் குழுவை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்வது சாலப் பொருத்தமாகும். மூல சாஸன உரிமைகளைக் காக்க விரும்புகிற அனைவரும் இந்தச் சாஸனக் காப்பு முன்னணியில் சேர வேண்டும். இதில் அரசியல் கட்சிப் பற்றுதல்களைக் கவனிக்கவேண்டியதில்லை. ஆள்கிற காங்கிரஸ் போல் கட்சி அங்கத்தினர் அனைவரும் சாஸனத்

தகர்ப்பைக் கடமையாகக் கொள்ள வேண்டும் என்று விதிக்காத எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும், அந்தந்தக் கட்சியில் இருந்து கொண்டே, சாஸனக் காப்பு முன்னணியில் சேரலாம். தங்கள் ஒத்துழைப்பை அதற்கு அளிக்கலாம். என் உத்தேசப்படி மகாசாஸனப் பாதுகாப்பு முன்னணியானது ஒரு தனியான அரசியல் கட்சியாக இராது. பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும், எவ்விதக் கட்சிப் பற்றும் அற்றவர்களும் ஒன்று சேர்ந்த கூட்டுறவு இயக்கமாகவே அது இருக்கும்.

''மகா சாஸனக் காப்புக் குழு ஒன்று நம் தேசத்தில் நிரந்தரமாக இருக்க வேண்டும்.''

ராஜாஜியின் கருத்துக்கள்

சுயாட்சி: இன்று கூடாது!

லஞ்சம் என்கிற எண்ணெயைப் போடுவதால்தான் சர்வாதிகார இயந்திரம் ஓடுகிறது என்பது யாவரும் ஒப்புக்கொள்கிற விஷயம். இது ஜனநாயகத்துக்கு விரோதமானது என்பதும் அனைவருக்கும் சம்மதமாகும். ஆனால் இதற்குப் பரிகாரமாக ராஜ்ய சுயாட்சி கேட்பது சரியல்ல. ராஜ்யங்களின் சுயாட்சி என்பது பிச்சைக்காரர்கள் சுயாட்சி கேட்பது போலவே! அதில் சாரம் ஏதுமில்லை. லஞ்ச ஊழலை மேலும் பரவலாக விஸ்தரிப்பது, சர்வாதிகார அபாயத்துக்குப் பரிகாரமாகாது. சித்தாந்த ரீதியில் ராஜ்யங்கள் நிறைய அதிகாரங்கள் பெற்றுள்ள சமஷ்டி அமைப்பை வகுத்துவிடலாம். ஆனால் இவ்விதம் அதிகாரம் பங்கீடு செய்யப்படும்போது அது நாட்டுக்கு நடைமுறையில் நன்மை பயக்க வேண்டுமாயின் அதிகாரப் பொறுப்புப் பெறுகிறவர்கள் தேசத்துக்காகத் தங்களையே அர்ப்பணித்துக் கொள்ளும் உணர்வு பெற்றிருக்க வேண்டும்; அவர்கள் அப்பழுக்கற்ற நடத்தை படைத்திருக்க வேண்டும். இன்று இவற்றை நாம் காண முடியவில்லை. எனவே நிகழ்காலத்தில் ராஜ்ய சுயாட்சிக்கு இடமே யில்லை என்று முடிவாகத் தீர்மானிக்க வேண்டியதுதான்.



சிகரெட்டும் மதுவும்

சிகரெட்டுப் பாக்கெட்டுகளின் மீதே புகை பிடிப்பதில் உள்ள தீமை குறித்து எச்சரிக்கையும் அச்சிட வேண்டும் என்று கூறப்படுகிறது. சிகரெட் பாக்கெட்டில் எச்சரிக்கை வாசகம் இருந்தாலும் சரி, அல்லது புகைப் பிடிப்பவர்கள் படிக்கும் சஞ்சிகைகளில் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் சரி, புகைப்பவர்கள் இவற்றைக் கண்டு அந்த வழக்கத்தை விடுவதில்லை. இவற்றைக் கண்டவுடனே அபத்தமான சவால் எண்ணமே அவர்களுக்கு உண்டாகிறது. ஆபத்து இருந்தாலும் அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற போலி சாகஸ உணர்வு அவர்களுக்கு ஏற்படுகிறது. ''மதுவைத் தொடாதீர், புகையிலையைத் தீண்டாதீர்'' என்று மனைவியும், உலக வைத்திய நிபுணர்களும் கூறினாலும் — இச்சரக்குகளைக் கொண்ட பாக்கெட் அல்லது புட்டி மீது அரசாங்கத்தினர் செலவிலேயே அது தீமை பயக்கும் என அச்சிட்டாலும்—மதுபானத்தையும் புகையிலையையும் பழகிக் கொண்டவர்கள் நாம் விரும்பும் விளைவுக்கு நேர்மாறாகத் தங்களது 'தீர பராக்கிரம'த்தையே காட்டுவார்கள். அதோடு கூட, ஏற்கெனவே உள்ளே புகுந்துள்ள புகையும் பானமும் அவர்களை இந்தப் போக்கிலேயே பலப்படுத்தும். இதனால்தான் இன்று இத்தனை எச்சரிக்கைகளுக்குப் பின்னரும் புகைப்பதும், மது அருந்துவதும் குறையவே இல்லை.

எனவே இதுவரையில் சிலந்தியின் அழைப்பைக் கேட்டு வலையில் விழாதவர்களுக்கே நம் எச்சரிக்கையை ஒருமுகப்படுத்த வேண்டும். ஆனால் துரதிருஷ்ட வசமாக இப்படிச் செய்யக்காணோம். கவர்ச்சிகரமான விளம்பரங்கள் அநுமதிக்கப்பட்டு வருகின்றன — அவை வருமானம் கொண்டு வருவதால். விளம்பரங்களுக்கு வாரி வழங்குவதற்கு உற்பத்தியாளர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதிலிருந்து அவர்களுக்கும் நிகரமாக நிறைய வருமானம் கிடைக்கிறது எனத் தெரிகிறது.

கும்பகோணம் மகாநாடு

கும்பகோணச் செய்தி கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அங்கு தமிழரசுக் கட்சியின் ஆதரவில் நடைபெற்ற மகாநாடு, தி. மு. க. சர்க்காரின் கொள்கைகளை ஃபாஸிஸக் கொள்கைகள் எனக் கூறிக் கண்டனம் தெரிவித்திருக்

கிறது. இந்த ஃபாசிஸத்தை முறியடிக்கத் தமிழ் நாட்டில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்று மகாநாடு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

வேண்டாம் இந்த மனப்பான்மை!

தன்னைச் சார்ந்துள்ள பலமற்ற நாடுகளை ஆதரிப்பதா, கைவிடுவதா என்பது குறித்துத் தன் விருப்பப்படி கொள்கை வகுத்துக் கொள்ள அமெரிக்க சர்க்கார் உரிமை பெற்றிருக்கிறது. அமெரிக்க சர்க்காரிடம், ''ஸைகோனைக் கை விடுக; கம்யூனிஸ்ட் ஹனோய்க்கு அது அடிபணியுமாறு விட்டு விடுக'' என்று உலக வல்லரசுகளின் பாணியில் பேசுவது இந்திய சர்க்காருக்குப் பொருந்தாது. தென் கிழக்காசியாவிலிருந்து அந்நியர்கள் வெளியேற வேண்டும் என்று இந்திய சர்க்கார் கூறுவதன் பொருள் இதுவே. எந்த நாட்டையும் குறிப்பிடாமல் பொதுப்படையாகவே இப்படிச் சொல்லப்பட்டிருந்தாலும் இந்திய சர்க்கார் அமெரிக்காவை வியட்நாம் போரிலிருந்து வாபஸ் பெற வேண்டும் என்று சொல்வதாகவே ஏற்படும். நாம் மகத்தான ஒரு நாட்டின் மக்கள் என்பது உண்மையாகவே இருக்கலாம். ஆயினும் உலக வல்லரசுகளின் மொழியில் பேசுகிற ஹோதாவை நாம் அடையவில்லை.

என்ன சேதி?

கால்நடை மருத்துவரின் கோரிக்கை

சமீபத்தில் சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்கள், அமைதியான வேலைநிறுத்தம் செய்தும், உண்ணாவிரதமிருந்தும், சட்டசபையில் கேள்விகள் எழுப்பச் செய்தும், மந்திரிகளைப் பேட்டி கண்டும் பொதுமக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கிறார்கள்.

கால்நடை வைத்தியக் கல்லூரியில் படிக்கும் மாணவரும், இதர மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் மாணவரும் ஏறத்தாழ ஒரே அளவு காலம் — சுமார் ஐந்தாண்டுகள் பயிற்சி பெறுகிறார்கள். ஏறத்தாழ ஒரே அளவு கேள்வித் தாள்களுக்கு விடை எழுத வேண்டியிருக்கிறது. எனினும் பயிற்சி முடிந்து வெளியில் வந்தால் கால்நடை மருத்துவருக்கு அரசு மொத்தம் 430 ரூபாய் அளிக்கிறது. அதுவே மனிதர்களுக்கு மருத்துவம் செய்யும் எம். பி. பி. எஸ். டாக்டருக்கு மொத்தம் 750 ரூபாய் சம்பளம் அளிக்கிறது. இது முறையல்ல என்பது கால்நடை மருத்துவ மாணவர்களின் வாதம். பார்க்கப் போனால் மக்களுக்கு வைத்தியம் செய்வதை விடத் தனக்கு உள்ள உபாதை பற்றிக் கூற முடியாத வாயில்லாப் பிராணிகளுக்கு வைத்தியம் செய்வது மிகவும் சிரமம். பரிவுடனும், அநுதாபத்துடனும் கால்நடைகளை நெருங்கி, அவற்றின் நோயைக் கண்டுபிடித்து வைத்தியம் செய்ய வேண்டியிருக்கிறது.


கால்நடைச் செல்வம் நாட்டின் மிக முக்கியமான செல்வம். அதனைப் போஷித்து வளர்க்கும் பொறுப்பு கால்நடை மருத்துவர்களுக்கும் உள்ளது. அவர்களை இரண்டாந்தர மக்களைப் போல் நடத்துவது அரசாங்கத்துக்கு முறையல்ல. விரைவில் அவர்கள் கோரிக்கையை அநுதாபத்துடன் கவனிக்கும் என்று நம்புகிறோம்.

நந்தவனக்கலை விற்பன்னர் மறைவு

நந்தவனக் கலையில் வல்லுநரான சௌந்தர்யா நர்ஸரியின் ஸ்தாபகர் திரு பி. எஸ். சுவாமிநாதன் தமது இளம் வயதிலேயே மலர்களின் வண்ணங்களிலே மனத்தைப் பறிகொடுத்தவர். அவரது தந்தை நீதிபதி பி. ஆர். சுந்தரேச அய்யர் நீதித் துறையில் புகழ் பெற்றவர். செல்வக் குடும்பத்தில் திரு பி. எஸ். சுவாமிநாதன் பிறந்தாலும், ஆரோக்கியச் செல்வத்தை அவ்வளவாகப் பெற்றிருக்கவில்லை. ஆனால் அவரது தோட்டக்கலை ஆசை உடல் தேற ஓர் ஔஷதமாயிற்று. பிரிட்டனிலுள்ள 'ராயல் ஹார்டிகல்சரல் ஸொஸைட்டி' (தோட்டக்கலை நிபுணர் சங்கம்) இவரைக் கௌரவ அங்கத்தினராக்கிக் கொண்டது இவர் பெருமைக்குச் சான்று. ஸ்ரீ சுவாமிநாதய்யர் 1931ம் ஆண்டில் தேனாம்பேட்டையில் சில செடி கொடிகளுடனும், பூந்தொட்டிகளுடனும் சௌந்தரியா நர்சரியைத் தொடங்கினார். இன்று அது வளர்ந்து சென்னையில் நந்தவனக் கலைக்கு ஒரு சிறந்த ஸ்தாபனமாகப் புகழ் பெற்றுள்ளது. புதிதாகப் பலரகச் செடிகளை சௌந்தர்யா நர்சரி உருவாக்கியுள்ளது அதன் தனிச் சிறப்பு. அவற்றில் சௌந்தர்யா கனகாம்பரம் ரொம்பப் பிரசித்தி.

சென்னை நகரை அழகுபடுத்தும் பணியில் சௌந்தர்யா நர்ஸரிக்கும் பெரும் பங்கு உண்டு. இம்மாநகரில் உள்ள பல பெரிய பூந்தோட்டங்களின் அமைப்பில் சுவாமிநாத அய்யர் அருமையான யோசனைகள் வழங்கியுள்ளார். இந்த அரிய சேவையில் ஈடுபட்டிருந்த அவர் இவ்வுலகை விட்டு இறைவன் மலரடியைச் சேர்ந்து விட்டார். அவரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும் சௌந்தர்யா நர்ஸரி ஊழியர்களுக்கும் நமது ஆழ்ந்த அநுதாபங்கள்.

திரு பி. எஸ். சுவாமிநாத அய்யர்





காந்தர்வ வேதம்

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

"அவன் என்ன புரட்டி விட்டானோ?" என்று சாதாரணமாக ஒரு வழக்கு இருக்கிறது. புரட்டுவதற்கு என்ன இவ்வளவு முக்கியத்துவம்? யோசித்துப் பார்த்தால், முறைப்படி புரட்டுவது ரொம்பவும் முக்கியமான விஷயம் என்று தெரிகிறது. எத்தனையோ கலைகள் புரட்டுவதினாலேயே பிறந்திருக்கின்றன!

இத்தனை புத்தகங்கள் நம்மிடம் இருக்கின்றன. ஒருசில எழுத்துக்களைப் புரட்டிப் புரட்டி வைத்து, வார்த்தைகளாக்கியதால்தானே, இத்தனை புத்தகங்களும் வந்திருக்கின்றன? நம்மைவிட இங்லீஷ்காரர்களுக்கு எழுத்து இன்னும் குறைவு, இருபத்தியாறே எழுத்தைப் புரட்டி வைத்து ஏராளமாக எழுதி விட்டார்கள்! அந்தப் புரட்டலில் ஒரு முறை, ஒரு அழகு இருந்துவிட்டால் கலையாகிறது. நமக்கும் வார்த்தைகள் தெரிகின்றன. கவியும் அதே வார்த்தைகளைத்தான் புரட்டி வைக்கிறான் — உடனே அதில் ரஸம் பிறக்கிறது. கவியைக் கொண்டாடுகிறார்கள்! நாம் வார்த்தையைப் புரட்டி எழுதினால் அதை யார் மதிக்கிறார்? டாகூர் மாதிரி ஒருவர் புரட்டுகிறபடி புரட்டினால் அதற்கு ஏக மதிப்பு உண்டாகிறது.

சித்திரக் கலையும் இப்படியேதான். வர்ண பாட்டிலையும் பிரஷ்ஷையும் வைத்துக் கொண்டு நாம் 'புரட்டுவது' ரஞ்சகமாக இல்லை. ஆனால் சைத்திரிகன் அதே வர்ணங்களைப் புரட்டுகிறபடி புரட்டினால் அது ஆனந்தம் தருகிறது.


சங்கீதமும் புரட்டல்தான். நாம் எல்லோரும் சத்தம் போடுகிறோம். அந்தச் சப்தத்தை ஸ்வரங்களாகப் பாகுபடுத்தி, இதற்கப்புறம் இது என்று அழகாகப் புரட்டி வைத்தால் இன்பம் உண்டாகிறது. நன்றாகப் புரட்டினால் நிறைய இன்பம்! புரட்டலில் நிபுணனாக இருப்பவனுக்கு ஒரு மணிக்கு முந்நூறு ரூபாய் தருகிறோம்! நாம் சத்தம் செய்தால் அதைக் கேட்க முடிகிறதா? புரட்டல் இன்பம் இப்படிப்பட்டது!

நமது தொண்டை என்கிற மாமிச வாத்தியத்தில் காற்றைப் புரட்டுவதோடு, சங்கீத வாத்தியங்கள் பல இருக்கின்றன. தவில், மிருதங்கம், கஞ்சிரா போன்ற சர்ம வாத்தியங்களில் தோலில் புரட்டுகிறார்கள். வீணை, தம்பூர், பிடில் போன்ற தந்தி வாத்தியங்களில் தந்தியில் புரட்டுகிறார்கள் — இந்த வாத்தியங்களில் புரட்டுகளுக்கு நடுவே இழைந்து வரும் 'அநுரணனம்' என்ற இழைப்பு ஒலி இன்பம் தருகிறது. ஒரு தரம் மீட்டினால் உண்டாகும் ஒலி இழுத்துக் கொண்டே நிற்கிறது. முதல் மீட்டில் உண்டான ஒலி நீடித்து, இரண்டாவது மீட்டில் எழும்பும் ஒலியோடு கலந்து நிற்கிறது. இதுவே அநுரணனம். புல்லாங்குழல், நாயனம் போன்ற துவாரமுள்ள ரந்திர வாத்தியங்களில் காற்றைப் புரட்டுகிறார்கள். ஹார்மோனியமும் ஒரு விதத்தில் ரந்திர வாத்தியம்தான். அதில் வாய்க்குப் பதில் துருத்தி இருக்கிறது. புல்லாங்குழலிலும் நாயனத்திலும் துவாரங்களை விரலால் மாற்றி மாற்றி அடைத்துத் திறக்கிறார்கள் என்றால், ஹார்மோனியத்தில் பில்லைகளை மாற்றி மாற்றி அழுத்தி எடுக்கிறார்கள்.

சப்தத்தைப் புரட்டுவதோடு, அங்கங்களையும் புரட்டிவிட்டால் நாட்டியக் கலை உண்டாகிறது. சங்கீதத்தில் காதால் கேட்டு அர்த்த ஆனந்தமும், ஸ்வர ஆனந்தமும் பெறுகிறோம். நாட்டியத்தில் இவற்றோடு கண்களால் பார்த்து, 'அங்கசர்ய ஆனந்த'மும் (அங்கங்களை முறைப்படி அசைப்பதால், புரட்டுவதால் ஏற்படுகிற இன்பமும்) பெறுகிறோம்.

உணர்ச்சிகளை விளக்குகிற அங்க அசைவான அபிநயம் இல்லாமல், வெறும் அங்க சரியை (அங்கப் புரட்டு) மட்டுமே ஆனந்தம் தருவது உண்டு என்பதால்தான் 'நிருத்தம்' என்ற கலை ஏற்பட்டிருக்கிறது. ஈசுவரனுக்குச் செய்கிற அறுபத்துநாலு உபசாரங்களில் சங்கீதத்தோடுகூட, நிருத்தமும் உபசாரமாகச் சொல்லப்படுகிறது. கீர்த்தனத்தில் சப்தம், அர்த்தம், லயம் யாவும் சேர்ந்து இன்பம் தருகின்றன. ஸ்வரம் பாடும்போது சப்தமும் லயமும் மட்டும் இன்பம் தருகின்றன. ராக ஆலாபனத்திலும், தாளத்திலும் வெறும் சப்தம் மாத்திரம் ஆனந்தம் தருகிறது அல்லவா? நிருத்தத்தில் வெறும் அங்க சரியை மட்டும் ஆனந்தம் தருகிறது.

இந்தக் கலைகள் யாவும் காந்தர்வ வேதம் எனப்படும். கந்தர்வர்கள் உற்சாகப் பிறவிகள். அவர்கள் எப்போதும் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் இருப்பார்கள். மனத்துக்கு உற்சாகம் தரும் கலைகளுக்கு இதனாலேயே காந்தர்வ வேதம் எனப் பெயர் ஏற்பட்டிருக்கிறது.


குணத்திலும் பகட்டிலும் மேம்பட்டது
ORIENT
உங்களுடைய ஓரியண்ட் ஸீலிங் மின்விசிறியைப்போட்டு குளுமையான சுகத்தின் புத்துணர்ச்சியை அடையுங்கள். இந்தியாவின் நீண்ட அனுபவமிக்க மின்விசிறி தயாரிப்பாளர்களால் தேர்ந்து அளிக்கப்படும் உன்னதமான ஓரியண்ட் ஸீலிங் மின்விசிறி உங்களுக்கு பல வருடங்களுக்கு மென்மையான, அடக்கமான உழைப்பைத் தருகிறது.
ஓரியண்ட்— இன்றைய மின்விசிறிகளில் மிக நம்பிக்கை வாய்ந்த பெயர்.
இரண்டு வருடங்களுக்கு உத்தரவாதம்.
ஓரியண்ட்
விசிறிகள்
ஓரியண்ட் விசிறிகள்
ஓரியண்ட் ஜெனரல் இன்டஸ்ட்ரீஸ் லிட்
கல்கத்தா-54
உலக முழுவதும் தேர்ந்தெடுக்கப்படுபவை
CC/O-1/1/72



அலை ஓசை

அமரர் கல்கி

28. நிச்சயதார்த்தம்

கிட்டாவய்யரின் அதட்டலுக்குச் சிறிது பயன் ஏற்பட்டது. வீட்டுக்குள்ளே கூச்சல் கொஞ்சம் அடங்கியது. பிறகு விஷயம் இன்னது என்பதும் வெளியாயிற்று.

சீமாச்சுவய்யரின் மனைவி அன்னம்மாளின் காதில் மதராஸிலிருந்து வந்திருந்தவர்கள் பேசிக் கொண்டிருந்தது அரைகுறையாக விழுந்தது. அதிலிருந்து மாப்பிள்ளைப் பையன் லலிதாவைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டப்படவில்லை என்றும், சீதாவைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான் என்றும் தெரிந்தன. பையனுடைய தாயாரும் தகப்பனாரும் முதலில் அவனுடைய மனத்தை மாற்றப் பார்த்தார்கள். பையன் பிடிவாதமாயிருந்தபடியால் கடைசியில் அவர்களும் சரியென்று சொல்லிவிட்டார்கள். ஆனால் இந்த விஷயத்தைக் கிட்டாவய்யரிடம் எப்படிப் பிரஸ்தாபம் செய்வது என்று அவர்களுக்குக் கொஞ்சம் தயக்கம். இன்ஷியூரன்ஸ் சுப்பய்யரிடம் அபிப்பிராயம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போதே விஷயத்தைச் சொல்லி, 'உண்டு இல்லை' என்று நிச்சயப்படுத்திக் கொண்டு போகிறதா அல்லது ஊருக்குப் போய்க் கடிதம் எழுதுகிறோம் என்று சொல்லிவிட்டுப் போய் விவரமாகக் கடிதத்தில் எழுதுவதா என்பதைப் பற்றி அவர்களுக்குள் விவாதம் நடந்துகொண்டிருக்கிறது.

இதையெல்லாம் கேட்டவுடன் சாதுவான கிட்டாவய்யருக்குக்கூட ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆனால் ஆத்திரத்தை யாரிடம் காட்டுவது என்று தெரியாமல் சீமாச்சுவய்யரைப் பார்த்து, "என்ன ஓய்! நான் அப்போதே சொன்னேனே. பார்த்தீரா! மதராஸ்காரர்களுடைய யோக்கியதை தெரிந்ததா?" என்றார்.

"தெரியாமல் என்ன, ஓய்? நானுந்தான் அப்போதே சொன்னேனே? ஆனாலும் இந்தப் பிரம்மஹத்தி சொல்கிறதை வைத்துக் கொண்டு ஒன்றும் நாம் தீர்மானித்துவிடக் கூடாது. இந்தச் சோழன் பிரம்மஹத்திக்கு ஏதாவது கலகம் பண்ணி வைப்பதே தொழில். அவர்கள் ஒன்று சொல்லியிருப்பார்கள்; இவளுடைய செவிட்டுக் காதில் வேறு ஒன்று விழுந்திருக்கும்! எல்லாவற்றுக்கும் நான் போய் விஷயம் இன்னதென்று ஸ்பஷ்டமாகத் தெரிந்துகொண்டு வந்து விடுகிறேன். ஏ சோழன் பிரம்மஹத்தி! இப்படி வந்து தொலை! இருக்கிற பிராரப்தங்கள் போதாது என்று நீ ஒருத்தி வந்து சேர்ந்தாயே! ஏ, ஏழரை நாட்டுச் சனியனே! வருகிறாயா? இல்லையா?" என்று இம்மாதிரி சீமாச்சுவய்யர் தம்முடைய தர்மபத்தினியை அருமையாக அழைக்க அம்மாளும், "என்னை எதற்காக இப்படிப் பிடுங்கி எடுக்கிறீர்கள்?" என்று வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டே புறப்பட்டாள். இருவரும் வீதியில் போகும்போதுகூட, சீமாச்சுவய்யர் தம்முடைய தர்மபத்தினியை வாழ்த்திய குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

சீமாச்சு அய்யர் மேற்கண்டவாறு தமது மனைவியைத் திட்டியதானது அங்கேயிருந்த மற்றவர்கள் எல்லாருக்கும் ஓரளவு மனத் தெளிவை உண்டாக்கியது.

''அந்தப் பெண் உள்ளே விசித்து விசித்து அழுது கொண்டிருக்கிறது! சீதா என்ன செய்வாள்? வந்திருந்தவர்களின் முன்னால் வரமாட்டேன் என்று தான் அவள் சொன்னாள். லலிதா தான் 'நீ வராவிட்டால் நானும் போக மாட்டேன்' என்று பிடிவாதம் பிடித்தாள். மன்னியாவது தடுத்தாளா? அதுவும் இல்லை!'' என்றாள் பெரியம்மாள் அபயாம்பாள்.

''நான் ஒரு அசடு, என் பெண் பெரிய அசடு — என்பதுதான் தெரிந்த விஷயமாச்சே! நீங்கள், எல்லாம் தெரிந்த பெரியவர்கள் இருந்தீர்களே! சொல்கிறது தானே!'' என்று சரஸ்வதி அம்மாள் சீறினாள்.





''இந்தப் பிராமணர் எதற்காக அம்மாளை இப்படி வைகிறார்? அவள் என்ன செய்வாள்?'' என்றாள் சரஸ்வதி அம்மாள்.

''பின்னே, யார்தான் என்ன செய்வார்கள்? எந்தக் காரியமும் பிராப்தம் போலத்தானே நடக்கும்?'' என்றார் கிட்டாவய்யர்.

''இவர்கள் வேண்டாம் என்றால் லலிதாவுக்குக் கல்யாணம் ஆகாமல் போய்விடுமோ? எனக்கு மட்டும் உத்தரவு கொடுங்கள். நாளைக்கே ஆயிரம் வரன் கொண்டு வருகிறேன்!'' என்றார் அப்பாத்துரை சாஸ்திரிகள்.

''போதும்; போதும்! இனிமேல் இந்த வருஷம் என் பெண்ணுக்குக் கல்யாணம் என்கிற பேச்சே வேண்டாம். முதலில், இந்தவர்கள் எல்லாரும் ஊருக்குப் போகட்டும்!'' என்றாள் சரஸ்வதி அம்மாள்.

இந்தச் சமயத்தில் ராஜம்மாள், ''அம்மா! குற்றம் என் பேரில். நான் துரதிர்ஷ்டக்காரி. எங்கே போனாலும் என்னுடைய துரதிர்ஷ்டம் என்னைத் தொடர்ந்து வருகிறது!'' என்றாள்.

''ஏதாவது உளறாதே! உன்னை யார் இப்போது என்ன சொன்னார்கள்?'' என்றார் கிட்டாவய்யர்.

''போதும் வாக்குவாதம்! நிறுத்துங்கள்! அழுகிற குழந்தையைப் போய் யாராவது சமாதானம் செய்யுங்கள்!'' என்றார் கிட்டாவய்யர்.

''அழுகை என்ன அழுகை! எதற்காக அழ வேண்டும்? செய்கிறதையும் செய்துவிட்டு ஜாலம் வேறே!'' என்றாள் சரஸ்வதி அம்மாள்.

உள்ளே, சீதாவைச் சமாதானப் படுத்த முயன்று கொண்டிருந்த லலிதாவின் காதில் இதெல்லாம் விழுந்தது. அம்மா சொன்ன கடைசி வார்த்தையைக் கேட்டதும் லலிதா ஆங்காரத்துடன் வெளியில் வந்தாள்.

''அப்பா! நான் சொல்கிறதைத் தயவுசெய்து கேளுங்கள். இன்றைக்கு வந்த பிள்ளையை நான் ஒருநாளும் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன். என்னை வெட்டிப் போட்டாலும் மாட்டேன். முன்னாலிருந்தே எனக்கு இதெல்லாம் பிடிக்கவில்லையென்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் ஒருவரும் கேட்கவில்லை. அம்மா அநாவசியமாகச் சீதாவைக் கோபித்துக் கொள்கிறாள். இது தெய்வத்துக்கே பொறுக்காது. சீதா முகத்தை அலம்பிக் கொள்ளக்கூட மாட்டேன் என்றாள்; என்னுடன் வருவதற்கும் அவள் இஷ்டப்படவில்லை. நான்தான் வலுக் கட்டாயப்படுத்தி அழைத்துக் கொண்டு வந்தேன். அப்படியிருக்க அவளைக் கோபித்துக் கொண்டு என்ன பயன்? இப்படியெல்லாம் நீங்கள் அநியாயமாய்ச் சீதாவின் பேரில் பழி சொல்வதாயிருந்தால் நான் இந்த வீட்டை விட்டுப் போய் விடுகிறேன்;



இல்லாவிட்டால் கிணற்றில் விழுந்து செத்துப் போகிறேன்!'' என்று லலிதா ஆத்திரமும் அழுகையுமாய்ப் பேசினாள்.

இவ்விதம் லலிதா தன் தோழிக்காகப் பரிந்து பேசியது எல்லாருடைய மனத்தையும் இளகச் செய்தது. ஆனால், சரஸ்வதியின் கோபத்தை மட்டும் அதிகப்படுத்தியது. ''போ இப்போதே போய்க் கிணற்றில் விழு! எனக்குப் பெண்ணே பிறக்கவில்லை என்று நினைத்துக் கொள்கிறேன்!'' என்று சொன்னாள்.

''அடாடாடா! இதெல்லாம் என்ன பேச்சு? இப்போது ஒன்றும் தீர்மானமாகிவிட வில்லையே? சீமாச்சுதான் போயிருக்கிறானே? விஷயத்தைத் தெரிந்து கொண்டு அவன் வரட்டுமே?'' என்றார் அப்பாத்துரை சாஸ்திரிகள்.

''சீமா மாமா என்னத்தை வேண்டுமானாலும் தெரிந்து கொண்டு வரட்டும்! அந்தப் பிள்ளை என்னைப் பிடித்திருக்கிறது என்று சொன்னாலும் நான் பண்ணிக் கொள்ளப் போவதில்லை! சத்தியமாய்ப் பண்ணிக் கொள்ளப் போவதில்லை!'' என்று லலிதா சபதம் செய்தாள்.

''லலிதா! இதென்ன நீகூட இப்படியெல்லாம் பேசுகிறாய்?'' என்றார் கிட்டாவய்யர்.

''அவள் சுயமாகவா பேசுகிறாள்? சொல்லிக் கொடுத்தல்லவா பேசுகிறாள்?'' என்றாள் சரஸ்வதி அம்மாள்.

''மன்னி! என்னைப் பற்றிச் சொல்கிறாயா? நான் ஒரு பாவமும் அறியேனே! லலிதாவுடன் நான் அரை நிமிஷம்கூடப் பேச வில்லையே!'' என்றாள் ராஜம்மாள்.

''நான் உங்களையொன்றும் சொல்லவில்லை. என் பிள்ளையைத்தான் சொல்கிறேன். சூரியாவின் துர்ப்போதனைதான் இப்படி லலிதாவைப் பைத்தியமாக அடித்து விட்டது. அவனுடைய புத்தியையும் யாரோ கெடுத்திருக்கிறார்கள்!''

இத்தனை நேரமாகச் சும்மா கேட்டுக் கொண்டு நின்ற சூரியா இப்போது சம்பாஷணையில் தலையிட்டான்.

''என்னுடைய புத்தி சரியாகத்தான் இருக்கிறது. இந்த முட்டாள்தனமெல்லாம் வேண்டாம் என்று நான் அப்போதே சொன்னேன். யாரும் கேட்கவில்லை. அம்மா! உங்கள் காலத்தில் நீங்கள் எல்லாரும் கல்யாணம் பண்ணிக் கொண்டு திண்டாடுகிறது போதும். எங்களை எங்கள் இஷ்டப்படி விட்டு விடுங்கள். லலிதாவுக்குப் பிடித்திருந்தால் கல்யாணம் பண்ணிக் கொள்வாள்; இல்லாவிட்டால் பிரம்மதேவன் வந்து சொன்னாலும் பண்ணிக் கொள்ள மாட்டாள். லலிதாவுக்குச் சொன்னது தான் சீதாவுக்கும்! மதராஸிலிருந்து வந்திருக்கும் மகாபிரகஸ்பதியைச் சீதாவுக்கும் பிடிக்காவிட்டால், பிடிக்கவில்லை என்று தைரியமாகச் சொல்லி விடட்டும். இதற்காக அவள் விம்மி அழ வேண்டிய அவசியம் எதுவும் இல்லை!'' என்று சொன்னான் சூரியா.

சூரியாவின் உள்ளம் அப்போது உண்மையில் கொந்தளித்துக் கொண்டிருந்தது. மதராஸிலிருந்து பெண் பார்க்க வந்த மகாபிரகஸ்பதியை அவனுக்கு ஏற்கனவே பிடிக்கவில்லை. அந்தப் பிரகஸ்பதி லலிதாவுக்குப் பதிலாகச் சீதாவை மணந்துகொள்ள விரும்புகிறான் என்ற செய்தி கேட்டதும் அந்தக் கொந்தளிப்புத் தீயில் எண்ணெய்விட்டது போல் ஜுவாலை விட்டுப் பொங்கியது.


* * *

காமரா உள்ளின் தரையில் குப்புறப் படுத்துக் கொண்டு சீதா இன்னமும் விம்மிக் கொண்டிருந்தாள். லலிதா அவளுக்கு ஆறுதல் கூறிச் சமாதானப் படுத்த முயன்றாள். ஆனால், கபடமற்ற லலிதாவுக்குச் சீதாவின் மனநிலை என்ன தெரியும்? உள்ளத்தில் பொங்கிய ஆனந்தத்தை மறைத்துக் கொள்வதற்காகவே சீதா விம்மினாள். அவளுடைய மனக் கண் முன்னால் உலகமே ஓர் ஆனந்த நந்தவனமாகத் தோன்றியது. அந்த நந்தவனத்திலிருந்த மரங்களும் செடிகளும் பல வர்ணப் புஷ்பங்களுடன் குலுங்கின. அந்த நந்தவனத்தில் குயில்கள் பாடின; மயில்கள் ஆடின; மான்கள் துள்ளி ஓடின; கிளிகள் மழலை பேசின; புறாக்கள் கொஞ்சி முத்தமிட்டன; சந்தன மரங்களின் சுகந்தத்துடன் மந்தமாருதம் வீசியது. இத்தகைய ஆனந்த நந்தவனத்தில் சீதாவின் உள்ளம் சஞ்சரித்துக் கொண்டிருந்த போது தூரத்தில் எங்கேயோ கடல் பொங்கி மலை போல் அலைகள் கிளம்பி மோதி விழும் சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தது.

* * *

சற்று நேரத்துக்கெல்லாம் சீமாச்சுவய்யர் கிட்டாவய்யருக்கு ஆள்விட்டு அனுப்பினார். கிட்டாவய்யர் போனார். அவரிடம் சப் ஜட்ஜ் சாஸ்திரியாரும் அவருடைய சகதர்மிணியும் விஷயத்தைத் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். ''உங்கள் குமாரிக்கு ஒரு குறைவும் இல்லை. கிளி மாதிரிதான் இருக்கிறாள். ஆனால் இந்தக் காலத்துப் பிள்ளைகளின் போக்கே தனியாயிருக்கிறது. 'முதலிலே சீதாவைப் பார்த்தேன்; பார்த்தவுடனே






புதிய முச்செயல் புரியும் டெட்

- புதிய டெட் அதிக வெண்மையான சலவைப் பவுடர். துணிகளை அதிக வெண்மையாக சலவை செய்ய, அதில் உன்னதமான வெண்மைச் சாதனம் சேர்க்கப்பட்டுள்ளது.
- புதிய டெட் அதிக சக்தி கொண்டது. மறைந்துள்ள அழுக்கைக் கூட அகற்றி, வண்ணத் துணிகளை அதிக பிரகாசமாக சலவை செய்கிறது.
- புதிய டெட் அளிக்கும் வளமான நுரையில் துணிகளை மிருதுவாக்கும் விசேஷ பொருள் அடங்கியுள்ளது. அது உங்கள் துணிகளை அதிக பாதுகாப்புடன் சலவை செய்கிறது; உங்கள் கைகளை மிருதுவாக வைக்கிறது.

5 புதிய சைஸ்களில் கிடைக்கிறது :
200, 400, 600, 800, 1000

Shilpi-HPMA 61F/71 Tam

புதிய
ரேம்கோ ஜுகல்பந்தி



க்ராஸ்
ஓவர்
சவுண்ட்

வேறு எந்த ரேடியோவும் ஈடு செய்ய முடியாத அம்சங்களுடன்!

மிக உயர்ந்த வெளிப்படுத்திறன்: 10 வாட்
மிகக் குறைந்த தொனிச்சிதைவு: 75%
வெளிப்படுத்திறனில் சிதைவு 1%.
3 ஸ்பீக்கர்களுடன் "க்ராஸ்-ஓவர் ஸிஸ்டம்"

5 பாண்ட், 7 வால்வுகள், ஃபைன்
ட்யூனிங்குடன். விலை ரூ.1050/-(வரிகள் தனி).

ரேம்கோ

ரேடியோ & எலெக்ட்ரிகல்ஸ்
மேன்யுஃபேக்சரிங் கோ. லிட்.,
மைசூர் ரோடு, பெங்களூர்-26.

மைசூர், கோவா, தமிழ்நாடு, காரைக்கால்
மற்றும் பாண்டிச்சேரிக்கு விநியோகஸ்தர்கள்:

ஹெகடே அண்ட் கோ.,
குப்தா மார்க்கெட், கெம்பகவுடா ரோடு,
பெங்களூர்-9 மற்றும் 11, அசர்சந்த்
மேன்ஷன், 35, மவுண்ட் ரோடு, சென்னை-2.

SISTA'S-RR 306 TAM

அவளைப் பிடித்து விட்டது. கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவளைத்தான் பண்ணிக் கொள்வேன்' என்று பிள்ளையாண்டான் சொல்லுகிறான். நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பார்த்தோம்; கேட்கவில்லை. உங்களுக்கு இஷ்டமாயிருந்தால் நாளைக்கே நிச்சயதார்த்தம் செய்து விடலாம். பெண்ணுக்காவது பெண்ணின் தாயாருக்காவது பிடிக்கா விட்டால் அதையும் சொல்லி விடுங்கள்; இதில் வலுக்கட்டாயம் ஒன்றுமில்லை'' என்றார்கள்.

கிட்டாவய்யர் திகைத்துப் போனார். ஒன்றும் பதில் சொல்லத் தோன்றவில்லை. ''அதற்கென்ன? பெண்ணின் தாயாரைக் கேட்டுவிட்டுச் சொல்கிறேன்'' என்று புறப்பட்டார். புறப்பட்டவர் நேரே வீட்டுக்கு வரவில்லை. சீமாச்சுவய்யரையும் சுப்பய்யரையும் குளத்தங்கரைப் பங்களாவுக்கு அழைத்துப் போய் யோசனை செய்தார். அவர்கள் இருவரும், ''பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று! உங்கள் பெண்ணுக்கு என்ன? நூறு வரன் நாங்கள் பார்த்துச் சொல்கிறோம். அந்த பம்பாய்ப் பெண்ணுக்கு வரன் கிடைப்பதுதான் கஷ்டம். பணம், காசு இல்லாமல் பண்ணிக் கொள்கிறேன்' என்கிறார்கள். வேண்டாம் என்று எதற்காகச் சொல்ல வேண்டும்? அதனால் யாருக்கு என்ன லாபம்? நாளைக்கே 'பாக்கு வெற்றிலையைப் பிடி' என்று நிச்சயதார்த்தம் செய்துவிடுவது தான் சரி!'' என்றார்கள். ஆரம்பத்தில் ஏற்பட்டிருந்த ஆத்திரம் தணிந்து விட்டபடியால் கிட்டாவய்யருக்கு அது தான் நியாயம் என்று தோன்றியது. ஆனால் இதைத் தமது பாரியாளிடம் எப்படிச் சொல்லிச் சரிக்கட்டுவது என்று யோசித்துக் கொண்டு இரவு ஒரு மணிக்கு வீடு திரும்பினார். அதற்கு வழி அவருடைய புதல்வன் சூரியா சொல்லிக் கொடுத்தான்.

தூக்கம் பிடியாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்த சூரியாவுக்கு அதற்குள் மனம் தெளிவடைந்திருந்தது. யார் கண்டது? ஒரு வேளை கடவுளுடைய விருப்பம் இவ்விதம் இருக்கலாம். தில்லியில் எழுநூற்றைம்பது ரூபாய் சம்பளம் உள்ள உத்தியோகம் பார்க்கும் சௌந்தர ராகவன் தன்னைக் காட்டிலும் சீதாவுக்குத் தக்க வரன் என்பதில் சந்தேகம் என்ன? அத்தங்காளின் அதிர்ஷ்டம் இந்தவிதமாக அவளைக் கொண்டு விட்டிருக்கிறதோ என்னமோ? சீதாவின் வாழ்க்கை இன்பத்துக்குக் குறுக்கே நிற்கத் தனக்கு என்ன உரிமை? அன்றிரவு தாமோதரம் பிள்ளை வீட்டு மேல் மாடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தபோது அவனுடைய நண்பன் பட்டாபிராமன் சொன்னது சூரியாவுக்கு நினைவு வந்தது. ''செடியில் உள்ள புஷ்பத்தைத் தூரத்தில் இருந்து பார்த்தே நான் சந்தோஷப்படுவேன். அதைப் பறித்துக் கசக்கி முகர வேண்டும் என்ற ஆசை எனக்குக் கிடையாது'' என்று பட்டாபி சொன்னான் அல்லவா? அடடா! எவ்வளவு தாராளமான உள்ளம் அவனுக்கு! அந்தக் கொள்கையைத் தானும் ஏன் பின்பற்றக் கூடாது?

• • • •

கிட்டாவய்யர் இரவு ஒரு மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வந்ததும் சூரியா, ''அப்பா! அவர்கள் என்ன சொன்னார்கள்? என்ன முடிவு ஆயிற்று?'' என்று கேட்டான்.

''இன்னும் நீ தூங்கவில்லையா, சூரியா? உன்னிடம்தான் யோசனை கேட்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டு வந்தேன்'' என்ற கிட்டாவய்யர் நடந்ததை விவரித்து விட்டு, ''உன் அபிப்பிராயத்தைச் சொல்!'' என்றார்.

''அப்பா! இவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டபடியால் இப்போது ஒரு விஷயம் சொல்கிறேன். நம்முடைய வக்கீல் ஆத்மநாத அய்யரின் பிள்ளை பட்டாபிராமனுக்கு லலிதாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. போன வருஷம் நீங்கள் எல்லோரும் தேவபட்டணத்துக்கு வந்து வக்கீல் வீட்டில் சில நாட்கள் இருந்தீர்கள் அல்லவா? அப்போது பட்டாபி லலிதாவைப் பார்த்திருக்கிறான். லலிதாவை அவனுக்குப் பிடித்திருக்கிறது. வேறு வரன் பார்ப்பது பற்றி அவனுக்கு வருத்தம். அவன் மட்டும் என்ன? வக்கீல் அய்யர்வாளுக்குக்கூடக் கொஞ்சம் வருத்தம் தான். 'நாங்கள் எல்லாம் உங்க அப்பாவுக்கு இலட்சியமா? பெரிய இடமாய்ப் பார்ப்பார்! தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி!' என்று ஜாடைமாடையாகச் சொன்னார்!'' என்றான் சூரியா.

''வாஸ்தவந்தான்! வக்கீல் ஆத்மநாதய்யரின் பிள்ளை நல்ல வரன்; எனக்கு அது ஞாபகம் இல்லாமற் போகவில்லை. ஆனால், உன் அம்மா 'இன்னும் பெரிய இடமாகப் பார்க்க வேண்டும்' என்று புலம்பிக் கொண்டிருந்தாள். எனக்கென்னமோ பட்டாபிராமனுக்கு லலிதாவைக் கொடுப்பதற்குப் பூரண சம்மதம். அதைப் பற்றி யோசித்து

முடிவு செய்வோம். சீதா விஷயம் என்ன சொல்கிறாய்?''

''சீதா விஷயம் நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவளுக்கும் அத்தைக்கும் சம்மதமாயிருந்தால் சரிதான். பணங்காசு அதிகம் செலவில்லாமல் இவ்வளவு நல்ல இடம் கிடைத்தால் சந்தோஷப்பட வேண்டியது தானே? அதனால் நமக்கும் நல்ல பெயர் ஏற்படும்!'' என்றான் சூரியா.

''அப்படியானால், சூரியா, நீதான் உன் அம்மாவிடம் விஷயத்தை எடுத்துச் சொல்லி அவளைச் சம்மதிக்கப் பண்ண வேண்டும். அவள் பத்ரகாளி அவதாரம் எடுத்திருக்கிறாள். நான் சொன்னால் தங்கையின் பெண்ணுக்குப் பரிந்து கொண்டு சொல்லுகிறேன் என்று நினைத்து இன்னும் ஆத்திரப்படுவாள்!''

''அதற்கென்ன, அப்பா! கட்டாயம் நான் அம்மாவைச் சரிக்கட்டிவிடுகிறேன்'' என்றான் சூரியா.

சூரியா ஏற்றுக் கொண்ட காரியம் அவ்வளவு சுலபமாக இல்லை. ஆயினும் கடைசியில் வெற்றி பெற்றான். முக்கியமாக, மதராஸ் பையனுக்கு லலிதாவைக் கொடுத்தால் அவள் தில்லி எங்கே, லாகூர் எங்கே என்று தூர தேசங்களுக்குப் போய்க் கொண்டிருக்க வேண்டும் என்றும், வக்கீல் பிள்ளைக்குக் கொடுத்தால், பக்கத்தில் இருப்பாள், 'அடிக்கடி பார்த்துக் கொள்ளலாம் என்றும் சூரியா கூறியது சரஸ்வதி அம்மாளின் மனசை மாற்றி விட்டது.

* * *

மறு நாள் சாயங்காலம் எல்லோருடைய சம்மதத்தின் பேரில் மதராஸ் மாஜி சப் ஜட்ஜ் பத்மலோசன சாஸ்திரிகளின் புதல்வன் சிரஞ்சீவி சௌந்தர ராகவனுக்கு பம்பாய் துரைசாமி அய்யர் குமாரி சீதாவைப் பாணிக்கிரகணம் செய்து கொடுப்பதாய் நிச்சயதார்த்தம் ஆயிற்று. பம்பாய் துரைசாமி அய்யர் இதற்கு ஆட்சேபம் ஒன்றும் சொல்ல மாட்டார் என்று ராஜம்மாள் சம்பந்திகளுக்கு உறுதி கூறியதின் பேரில் நிச்சயதார்த்தம் நடந்தது. இந்த நிச்சயதார்த்த வைபவத்தில் லலிதா தான் எல்லாரிலும் அதிகக் குதூகலமாக இருந்தாள். ராகவனை 'மாப்பிள்ளை' என்று கூப்பிட்டு அவனிடம் பேசக்கூட ஆரம்பித்து விட்டாள்.

சீதாவின் மன நிலை எப்படி இருந்தது என்பதைப் பற்றி நாம் தற்போது ஒன்றும் சொல்லாமல் நேயர்களின் கற்பனா சக்திக்கே விட்டு விடுகிறோம்.

29. பீஹார்க் கடிதம்

கல்யாணம் நிச்சயம் பண்ணிக் கொண்டு சௌந்தரராகவன் சென்னைக்குத் திரும்பியபோது மிக உற்சாகமாயிருந்தான். தன்னுடைய வாழ்க்கையில் ஒரு புதிய ஆனந்த அத்தியாயம் ஆரம்பமாகியிருக்கிறது என்ற எண்ணம் அவன் மனத்தில் குடிகொண்டிருந்தது. தாரிணிக்கும் தனக்கும் ஏற்பட்ட சிநேக சம்பந்தத்தை ஒரு மாயக் கனவு என்று தீர்மானித்து அதை மறக்கப் பிரயத்தனப்பட்டதுடன் அநேகமாக மறந்தும் விட்டான். ஆனால் அந்தச் சம்பந்தத்தை மறுபடியும் ஞாபகப்படுத்தும் இரண்டு கடிதங்கள் ராகவன் சென்னை திரும்பிய மூன்றாவது நாள் வந்தன. முதற் கடிதத்தின் மேல் உறையில் எழுதியிருந்த விலாசக் கையெழுத்தைப் பார்த்தவுடனே ராகவனுக்கு அதை எழுதியது யார் என்று தெரிந்து விட்டது. முத்து முத்தான அந்த வட்ட வடிவக் கையெழுத்து தாரிணியின் கையெழுத்துத்தான். ஒரு பக்கம் அந்தக் கடிதத்தைப் பிரிக்க ஆர்வமும் இன்னொரு பக்கம் அதில் என்ன எழுதியிருக்குமோ என்ற தயக்கமும் அவன் மனத்தைக் கலக்கின. கடைசியில் பிரித்தான்.

முஸபர்பூர், (பீஹார்)
9-2-34

அன்பரே !

ரயிலிலிருந்து தங்களுக்கு நான் எழுதிய கடிதம் கிடைத்திருக்கலாம். அதுவே தங்களுக்கு நான் எழுதும் கடைசிக் கடிதம் என்று எண்ணியிருந்தேன். இங்கு வந்து நிலைமையைப் பார்த்த பிறகு எதனாலோ மறுபடியும் தங்களுக்கு எழுத வேண்டும் என்று தோன்றுகிறது. எவ்வளவுதான் தங்களை நான் மறக்க முயன்றாலும் அது கைகூடவில்லை. இப்போது நான் இயற்றி வரும் தொண்டில் தங்களையும் ஈடுபடுத்த வேண்டும் என்ற ஆசை என் மனத்தில் பொங்கிக் கொண்டிருக்கிறது. இக்காரணங்களினாலேயே தங்களுக்குக் கடிதம் எழுதத் துணிந்தேன். இங்கே பூகம்ப நிவாரணத் தொண்டர்களின் முகாமில் எல்லோரும் தூங்கிய பிறகு நான் மட்டும் மங்கலான கிரோஸின் எண்ணெய் விளக்கின் அருகில் உட்கார்ந்து இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

பீஹாருக்கு நான் வந்து பத்து தினங்கள் ஆகின்றன. இந்தப் பத்து நாட்களும் நான் கண்ட காட்சிகள், அம்மம்மா,— ஆயிரம் வருஷங்கள் உயிரோடு இருந்தாலும் மறக்க முடியாதவை. பகலில் பார்த்த காட்சிகளை இரவில் மறு

படியும் என் கனவில் காண்கிறேன். சில சமயம் பயங்கரத்தினால் அலறிக் கொண்டும் சில சமயம் பரிதாபத்தினால் தேம்பி அழுது கொண்டும் தூக்கத்தி லிருந்து எழுந்திருக்கிறேன்.

திருஷ்டாந்தமாகச் சில சம்பவங்களைச் சொன்னால் என்னுடைய மன நிலையைத் தாங்களும் அறிந்து கொள்வீர்கள். முஸபர்பூரில் பாபு லக்ஷ்மி நாராயண பிரஸாத் என்று ஒரு பிரமுகர். பீஹார் மாகாணத்தில் நடக்கும் கதர்த் தொண்டின் தலைவர் இவர். ஒரு மாதத்துக்கு முன்பு இம்மாகாணத்தில் உள்ள சர்க்கா சங்கக் கிளை ஸ்தாபனங்களைப் பார்வையிடுவதற்காகப் புறப்பட்டார். ஒரு மாதம் ஆனதும் மனைவி மக்களின் நினைவு வந்தது. ஊருக்குப் போய்ப் பார்க்க வேண்டும் என்று கிளம்பினார். வரும் வழியில் உலகம் தலை கீழாகத் திரும்புவது போன்ற அதிர்ச்சி ஏற்பட்டது. அது பூகம்ப அதிர்ச்சி என்று தெரிந்துகொண்டதும், ''ஐயோ! வீட்டில் தனியாக மனைவி மக்களை விட்டு வந்தோமே! அவர்களுடைய கதி என்ன வாயிற்றோ?'' என்று திடுக்கிட்டார். பதை பதைப்புடன் வீடு திரும்பினார். அவருடைய பதை பதைப்புக்குக் காரணம் இருந்தது. அவருடைய வீடு இருந்த இடத்தில் ஒரு பெரிய கும்பலாக மண்ணும் கல்லும் மரத் துண்டங்களும் உடைந்த ஓடுகளும் கிடைத்தன. ஆகா! அவருடைய மனைவி மக்கள் எங்கே? அலறினார்; பதறினார். மண்ணையும் கல்லையும் அப்புறப்படுத்தத் தொடங்கினார். மற்றும் பல தொண்டர்கள் அவருக்கு உதவி செய்தார்கள். ஐயோ! என்ன கோரம்! என்ன பரிதாபம்! அந்தக் கும்பலுக்கு அடியில் அவருடைய மனைவியும் குழந்தைகளும் மடிந்து நசுங்கி உருத் தெரியாத பிணங்களாகக் கிடந்தார்கள். பாபு லக்ஷ்மி நாராயண பிரஸாத் இப்போது பைத்தியம் பிடித்தவராக, ''என் பெண் எங்கே? பிள்ளை எங்கே?'' என்று கேட்டுக் கொண்டு அங்குமிங்கும் சுற்றி அலைந்து கொண்டிருக்கிறார்.

மாங்கீர் என்னும் பட்டணத்தில் பிரபாவதி தேவி என்று ஒரு ஸ்திரீ இருந்தாள். பாவம்! அவள் கைம் பெண்! கணவர் விட்டுப் போன சொற்ப சொத்தைக் கொண்டு குழந்தைகளைத் தைரியமாகக் காப்பாற்றி வந்தாள். கைக் குழந்தை தொட்டிலில் தூங்கியது. இன்னொரு குழந்தை கூடத்தில் விளையாடியது. பிரபாவதி சமையலறையில் சமையல் செய்து கொண்டிருந்தாள். திடீரென்று ஒரு குலுக்கல். வீடு சுழன்றது; சமையல் பாத்திரம் கவிழ்ந்தது. கொல்லைப்புறத்தில் தடதட என்று சத்தம் கேட்டது. கொல்லைத் தாழ்வாரத்தில் கன்றுக்குட்டி கட்டியிருந்ததை எண்ணிக் கொண்டு ஓடினாள். அவள் கொல்லைப்புறம் செல்வதற்குள் கன்றுக்குட்டி இருந்த இடத்தில் கூரை இடிந்து விழுந்து மேடு போட்டிருந்தது. இதற்குள் வீட்டின் முன்கட்டிலும் அதே மாதிரி சத்தம் கேட்டு ஓடினாள். இரண்டு குழந்தைகள் மேலும் வீடு இடிந்து விழுந்து அடியோடு மூடி மேடிட்டுவிட்டது! ''ஐயோ!'' என்று அலறிக் கொண்டு பிரபாவதி வாசல் பக்கம் ஓடி வந்தாள். ''என் குழந்தைகளை இழந்தேனே! பூமி வெடித்து என்னையும் விழுங்கி விடாதோ?'' என்று கதறினாள். அந்தப் பதிவிரதையின் வாக்கு உடனே பலித்தது. அவள் நின்ற இடத்தில் பூமி விரிந்து பிளந்தது. அதற்குள் விழுந்து பிரபாவதி மறைந்தாள். சீதாதேவி பிறந்த மிதிலை ராஜ்யந்தான் இப்போதைய பீஹார் என்பதை அறிந்திருப்பீர்கள். சீதையைத் தன்னிடத்தே ஏற்றுக் கொண்ட பூமாதேவி இன்று பீஹார் மாகாணத்தில் எத்தனையோ உத்தமபத்தினிகளை விழுங்கிவிட்டாள்.

அன்பரே! இத்தகைய பூமிப் பிளவு ஒன்றை நான் அருகில் நெருங்கிப் பார்த்தேன். பக்கத்திலிருந்தவர்கள் தடுத்தும் என் மனம் கேட்கவில்லை. பள்ளத்தின் ஓரமாகச் சென்று குனிந்து பார்த்தேன். பள்ளம் கீழே ஆழம் கணக்கிட முடியாதபடி அதல பாதாளம் வரையில் போகிறது. கொஞ்ச தூரத்துக்குக் கீழே ஒரே கன்னங்கரிய இருள். அதற்குக் கீழே எவ்வளவு தூரம் போகிறது என்று சொல்ல முடியாது. அதிக நேரம் உற்றுப் பார்த்தால் தலை சுற்றுகிறது.

பூகம்பம் இன்னும் எத்தனையோ விசித்திரங்களையெல்லாம் இங்கே உண்டாக்கியிருக்கிறது. மேட்டுப் பிரதேசங்கள் திடீரென்று பள்ளமாகிப் பெரிய ஏரிகளைப்போல் தண்ணீர்



இப்பொழுதெல்லாம் பணக்காரர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பதை விட, முப்பது ரூபாயைக் கணக்குக் காட்டாமல் மறைப்பது லாபகரமானது.

ஸ்டேட்ஸ்மன் - பாலி

ததும்பி நிற்கின்றன. ஏரி இருந்த இடம் வற்றிக் கட்டாந்தரை ஆகியிருக்கிறது.

குடிசைகளும் வீடுகளும் பிரம் மாண்டமான மாளிகைகளும் கம்பெனிக் கட்டடங்களும் ரயில்வே ஸ்டேஷன்களும் இடிந்தும் எரிந்தும் கிடக்கின்றன.

மொத்தமாக 25,000 ஜனங்கள் பூகம்பத்தில் மாண்டிருக்கலாம் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். மாண்டவர்கள் அதிர்ஷ்டசாலிகள். தப்பிப் பிழைத்தவர்களில் லட்சக்கணக்கான ஜனங்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, தலைக்கு மேலே கூரையின்றித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அன்பரே! இதையெல்லாம் தாங்கள் வந்து பார்த்தீர்களானால் இப்படிப்பட்ட மகத்தான துரதிர்ஷ்டத்தை அடைந்த ஜனங்களுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் வாழ்க்கையில் வேறு என்ன பெரிய காரியம் இருக்க முடியும் என்ற முடிவுக்குத்தான் வருவீர்கள்.

பூகம்பத்தினால் ஏற்பட்ட கஷ்ட நிவாரணத் தொண்டுக்காக இந்தியாவின் நாலா பக்கங்களிலிருந்தும் தொண்டர்கள் வந்திருக்கிறார்கள். எல்லோரும் பாபு ராஜேந்திர பிரஸாத்தின் தலைமையில் வேலை செய்கிறார்கள். பாபு ராஜேந்திர பிரஸாத் ஓர் அற்புத மனிதர். அவருடைய சாந்தம், அடக்கம், அன்பு, தொண்டு செய்யும் ஆர்வம் — இவற்றுக்கு நிகரேயில்லை.

ஒரு வாரத்துக்கு முன்னால் பண்டித ஜவாஹர்லால் நேரு இங்கே வந்தார். நாம் இருவரும் முதன் முதலில் சந்தித்தோமே, கராச்சி நகரில்; அங்கே நடந்த காங்கிரஸில் பண்டித ஜவாஹர்லால் நேருவை நான் பார்த்தேன். அதற்கு முன்பும் பார்த்திருக்கிறேன். ஆனால் அவர் ஒரு மகாபுருஷர் என்று அறிந்து கொள்ளவில்லை. மாபெரும் தலைவர் தாம் என்கிற உணர்ச்சியேயில்லாமல் தொண்டர்களோடு தொண்டனாகப் பணியாற்றுகிறார். ஆகா! என்ன ஆர்வம்? என்ன அவசரம்? எத்தனை சுறுசுறுப்பு? அவர் நடப்பதேகிடையாது; ஒரே ஓட்டந்தான்!

நேற்று ஓர் அபூர்வ சம்பவம் நடந்தது. பூகம்பத்தினால் இடிந்து விழுந்து நாசமான ஒரு தெருவின் வழியாக நேருஜி போய்க் கொண்டிருந்தார். திடீரென்று ஒரு தீனமான சத்தம் கேட்டது. நாய்க் குட்டி குரைக்கும் குரல் போலிருந்தது. நேருஜி அங்கே நின்று உற்றுக் கேட்டார். மறுபடியும் அதே குரல் கேட்டது. உடனே நேருஜி சத்தம் வந்த திசையை நோக்கி ஓடினார். இடிந்து விழுந்து மேடிட்டுக் கிடந்த கல்லையும் மண்ணையும் அப்புறப்படுத்தத் தொடங்கினார். அவரைப் பின்பற்றி மற்றத் தொண்டர்களும் சுறுசுறுப்பாக வேலை செய்தார்கள். அரை மணி நேர வேலைக்குப் பிறகு அவர்கள் தேடிய காட்சி தென்பட்டது. மரவிட்டங்கள் ஒன்றன்மேல் ஒன்றாக விழுந்து ஒரு சிறு கூரையைப் போலாகிக் கீழே காலி இடம் உண்டுபண்ணி யிருந்தது. அந்த இடத்தில் பாவம் ஒரு சிறுவன் இறந்து கிடந்தான்! இறந்த குழந்தையைக் காத்துக் கொண்டு அந்த நாய் இருந்தது. இத்தனை நாட்களும் அது எப்படித்தான் உயிர் வைத்திருந்ததோ தெரியாது! மேலே மூடியிருந்தவற்றை எடுத்தவுடனே நாய் வெளியே ஓடி வர வேண்டுமே! கிடையாது! செத்துக் கிடந்த சிறுவனை முகர்ந்து பார்த்துக் கொண்டு அங்கேயே நின்றது.

கடவுளே! இந்த மாதிரி எத்தனையோ பயங்கரச் சம்பவங்கள். இவற்றையெல்லாம் பார்த்தபிறகு உலகத்து நாடோடி வாழ்க்கையில் யாருக்குத்தான் மனம் செல்லும்! மனித வாழ்க்கை எடுத்ததின் பயன் இம்மாதிரி கஷ்டப்படுகிறவர்களுக்குச் சேவை புரிவதைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? தாங்களும் இங்கு வந்து பார்த்தால் என்னைப் போலவேதான் எண்ணுவீர்கள். ஏற்கனவே எத்தனையோ விஷயங்களில் நம்முடைய அபிப்பிராயங்கள் ஒத்திருந்தன அல்லவா? சர்க்கார் உத்தியோகம், பெரிய சம்பளம், சௌக்கியமான பங்களா வாழ்வு, மோட்டார்கள், டீ பார்ட்டிகள் — இவற்றில் எல்லாம் என்ன சுகம் இருக்கிறது? இங்ஙனம்,

தாரிணி

(தொடரும்)

விருதுபெறும் வித்தகர்கள்

பத்மவிபூஷண்: 1. டாக்டர் ஜீவராஜ் நாராயண் மேத்தா 2. டாக்டர் பி. பி. கஜேந்திர கட்கர். 3. டாக்டர் விக்ரம் சாராபாய்.

பத்மபூஷண்: 1. பேராசிரியர் கே. சுவாமிநாதன், 2. டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன், 3. ஸ்ரீ பாபநாசம் சிவன், 4. ஸ்ரீ வி. பட்டவர்த்தன், 5. டாக்டர் பரத்ராம், 6. டி. ஏ. பை.

பத்மஸ்ரீ: 1. ஸ்ரீ வேதபிரகாஷ் அக்னிஹோத்ரி, 2. ஸ்ரீ வி. எஸ். கிருஷ்ணன், 3. டாக்டர் பி. ராமமூர்த்தி, 4. டாக்டர் பாலு சங்கரன், 5. ஸ்ரீமதி கிரிஜாதேவி, 6. ஸ்ரீ பீம்சேன் ஜோஷி 7. லால்குடி ஸ்ரீ ஜெயராமன், 8. வழுவூர் ஸ்ரீ ராமையாபிள்ளை, 9. ஸ்ரீ எம். கே. ராதா. 10. ஸ்ரீ ம. பொ. சிவஞானம்.


குடியரசு தினத்தையொட்டி விருது பெற்ற அறிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் நமது இதய பூர்வமான நல்வாழ்த்துக்கள்.





விருது பெறும் வித்தகர்கள்



















FANCY

பீகன் விசிறியை ஒருமுறை பார்த்தாலே நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள், அது ஒரு '':.பான்ஸி''யான தயாரிப்பென்று.




இது வெறும் பேச்சல்ல. பீகன் விசிறியின் நவீன பாணி உருவமும், மேலமைப்பும் பார்த்தவுடனே உங்கள் மனதைக்கவரும்.

பீகன் விசிறியின் மற்ற சிறப்பான அம்சங்களைப்பாருங்கள் :

- புதிய, அழகான, சீரான உருவம்
- உச்ச வேகத்திலும், ஓசையின்றி; தடையில்லாத ஓட்டம்
- அதிக பட்ச காற்று வீச்சு தரும் அமைப்பு
- நேர்த்தியான பிளாஸ்டிக் ரெகுலேட்டர்
- குறைந்த மின் செலவு
- ஒரு ஆண்டு உத்திரவாதம்; தேவைப்படும் போது விற்பனைக்குப்பின் சேவை
- 1200 மிமீ (48") அளவில் கிடைக்கிறது; விரைவிலேயே, 900 மிமீ (36"), தவிர மற்ற அளவுகளிலும் கிடைக்கும்.

"அற்புதம்" எனக்கூறுவீர்கள் நீங்கள்: அதை நாங்கள் "பீகன்" என் அழைக்கிறோம்.



b

உங்கள் நம்பிக்கைக்குரிய சின்னம்

பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.


13/15, வடக்கு பீச் ரோடு, சென்னை-1.

தமிழ்நாட்டில் கிளைகள்: கோயம்புத்தூர், திருச்சி.

Focus.BC.426(b) TAM

இன்றைய பிரச்னை

கல்வியின் தரம் உயருமா?





(சென்னை கிறிஸ்தவக் கல்லூரி முதல்வர் டாக்டர் சந்திரன் டி. எஸ். தேவநேசன். தெய்வ பக்தி மிகுந்தவரும், கல்வித் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றவரும் மாணவ-மாணவியரின் அன்புக்குப் பாத்திரமாகத் திகழ்பவருமான டாக்டர் சந்திரன் தேவநேசன் கூறும் கருத்துக்கள் கல்வித்துறையின் முன்னேற்றத்தை விரும்பும் அனைவருமே சிந்திக்கத் தக்கவை.)

முன்னைக்கிப்போது கல்வியின் தரம் குறைந்து விட்டது என்று பரவலாகக் கருத்து நிலவுகிறது. அது உண்மையாயின் காரணம் என்ன?

மாணவர்களின் தரம் குறைந்துவிடவில்லை என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். பார்க்கப் போனால், பழைய காலத்து மாணவர்களைவிட இந்தக் காலத்து மாணவர்களின் ஆற்றலும், பொது அறிவும் கூடுதலாகவே உள்ளன என்றுதான் கூறுவேன். மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகியுள்ளது. கல்விப் பசி பெருகியுள்ளது என்றே கூற வேண்டும். கல்வித் துறை விரிவடைந்து வருகிறது. விரிவடையும் வேகம் (Over-rapid expansion) சற்றுக் குறைந்தால் நல்லது. அடிமட்டத்தில் அதிகக் கவனம் செலுத்தினால் நல்ல முறையில் கல்வி வளர்ச்சி அடையும். உதாரணமாக, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் நல்ல நூல்களை, இலக்கியங்களைப் படிப்பதில் போதிய ஆர்வம் காட்டுவதில்லை. என்னைப் பற்றியே கூறுவதாயின், நான் படித்த இலக்கியங்களில் பெருமளவு உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போதே வாசித்தவை. பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக்கூடம் எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்கு நல்ல நூலகம் இன்றியமையாதது.

பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள் பற்றித் தங்கள் கருத்து என்ன?

பள்ளிகளுக்கான பாடப் புத்தகங்களை, குறிப்பாக மேல் வகுப்புக்களுக்கான நூல்களைக் கல்லூரி ஆசிரியர்கள் எழுதுவது நற்பயன் அளிக்கும். மேலை நாடுகளில் பல இடங்களில் இம்முறை அனுஷ்டிக்கப்படுகிறது. கல்லூரியில் அடியெடுத்து வைக்கும் மாணவர்களின் தேவையைக் கல்லூரி ஆசிரியர்களே நன்கு அறிவார்கள். குறிப்பிட்ட பாடத்தில் எந்த அளவுக்குப் பள்ளி மாணவன் தேர்ச்சி அடைந்திருக்க வேண்டும், எந்தக் கட்டத்திலிருந்து கல்லூரியில் அதனைத் தொடரலாம் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள்.

மாணவர்கள் பயில வேண்டிய மொழிகள் பற்றிய குழப்பம் நீடித்து வருகிறதே, இதற்கு விமோசனமே இல்லையா?

மாணவர்களின் ஆங்கில மொழித் தேர்ச்சி குறைவதையும், கல்வித் தரம் குறைவதையும் பலர் ஒன்றெனக் கருதுகின்றனர். இது தவறு. ஆங்கிலம் பயில்வதா, தமிழ் பயில்வதா என்று மாணவர்களிடையே நிலவும் குழப்பம் நீங்க வேண்டும். ஆங்கிலம், தாய்மொழி இரண்டிலுமே நல்ல தேர்ச்சி பெற்றாக வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துவிட்டால் அவர்கள் குழப்பம் நீங்கி விடும். சிலர் ஆங்கில மொழியைத் தாக்கிப் பேசியவண்ணம் இருக்கிறார்கள். 'நான் தமிழ் நாட்டில்தான் இருக்கிறேனா?' என்று ஐயுறும்படி இருக்கிறது என்று ஓர் அரசியல்வாதி சாடியிருக்கிறார் — மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டது குறித்து! மாணவர்களுக்கு ஆங்கில, அறிவு, மொழிப் புலமை அவசியமாகிறது. அதை அரசியல் வாதிகள் குறை கூறுவானேன்?

பி. எஸ்ஸி. வகுப்பில் ரசாயனமும், பௌதிகமும் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலம் தவிரத் தமிழ் அல்லது சம்ஸ்கிருதமும், மலையாளம், பிரஞ்சு என்று ஏதாவது ஒரு மொழியும் பயில வேண்டியுள்ளது. இரசாயனம் பயில்வோருக்கு இது ஓர் அநாவசியச் சுமைதானே? பி. ஏ. எம். ஏ. மாணவர்களுக்கு இது தேவை. ஆனால் பி. எஸ்ஸி. மாணவர்களுக்கு இப்படி ஒரு மொழி பயில வேண்டிய கட்டாயம் இல்லாமலிருந்தால் விஞ்ஞான பாடத்தை இன்னும் தீவிரமாகக் கற்கலாம் அல்லவா?

உண்மைதான். பி. எஸ்ஸி. மாணவர்களுக்குப் பிராந்திய மொழிப் பாடத்தைக் கணிசமாகக் குறைப்பதை வரவேற்கலாம். மதுரைப் பல்கலைக் கழகம் இதனை நிறைவேற்றியுள்ளது.

முன்னர் வழக்கிலிருந்தது போல் இருவருட இன்டர்மீடியட் படிப்பு இப்போதைய ஓராண்டுப் புதுமுக வகுப்பைவிடச் சிறந்த பலனளிக்கும் என்று பலர் கருதுகின்றனர். அறிஞர் ராஜாஜி அவர்கள்கூட இக்கருத்தினை எடுத்துரைத்துள்ளார். பார்த்திருப்பீர்களே........?

புகுமுக வகுப்பு ஓராண்டு என்று பெயர். நடைமுறையில் விடுமுறைகள் நீங்கலாக, ஏழு எட்டு மாதங்களுக்கும் குறைவாகவே வகுப்புக்கள் நிகழ்கின்றன. பள்ளியில் போதனை முறை வேறு; கல்லூரியில் வேறு. கல்லூரி போதனை முறைக்குப் புகுமுக வகுப்பு மாணவன் பழக்கப்படுத்திக் கொள்வதற்குள் இந்தச் சில மாதங்கள் பறந்தோடி விடும். 'இருவருட இன்டர்மீடியட்' கல்வி முறையில் போதிய அவகாசம் இருப்பதால் மாணவனுக்கு அது அனுகூலமே.''

போதனை முறை வேறு என்று சொல்வதன் கருத்து.......?

பள்ளியில் மாணாக்கர்களின் ஒழுங்கு முறையை ஆசிரியர்கள் நிலைநாட்ட வேண்டி

யுள்ளது. கல்லூரி ஆசிரியர்கள் பிரம்பைக் கையில் எடுக்க முடியாது! கல்லூரியில் ஒழுங்குமுறையை மாணவர்களே உணர்ந்து கடைப்பிடிக்கிறார்கள். இப்படிப் பல வேறுபாடுகள் உள்ளன.

பெண்களைப் பொறுத்தமட்டில் ஓராண்டுப் புகுமுக வகுப்பே நல்லதல்லவா? பட்டம் பெறுமுன் திருமணம் செய்து கொள்ள விரும்பும் பெண்கள் ஈராண்டுகளைக் கல்லூரியில் விரயம் செய்யாமல் ஒரு வருடத்துடன் நிறுத்திக் கொள்ளலாம், இல்லையா?

ஆமாம்; பெண்களுக்கு இப்போதுள்ள புகுமுக வகுப்பு முறை நல்லதே. பெரும்பாலோர் திருமணம் செய்து கொண்டு வீட்டோடு இருந்து விடுவதால், ஆண்களுக்குரிய அதே கல்வி முறையும், பாடத் திட்டமும் அவர்களுக்கு வேண்டியதில்லை. இல்வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய பிரத்தியேகக் கல்வித் திட்டம் வகுப்பது நல்லது. வேலைக்குப் போக விரும்புகிறவர்கள் ஆண்களைப் போன்று பயிலலாம்.

மாணவர்களிடையே அதிருப்தி, அமைதியின்மை, போராட்ட உணர்ச்சி - இவை அடிக்கடி எழக் காரணம் என்ன? உங்கள் கல்லூரியில் இது போன்ற பிரச்னைகளைச் சமாளிக்க என்ன வழி முறைகளைக் கையாள்வது வழக்கம்?

மாணவர்களின் பிரச்னைகளை மனிதாபிமானத்துடன் அணுக வேண்டும். எங்கள் கல்லூரியில் வேலைநிறுத்தம், கட்டுப்பாடின்மை இத்தியாதி பிரச்னைகளே இல்லை. காரணம், கல்லூரி நிர்வாகத்தில் மாணவர்களும் நேரிடையாகப் பங்கு பெறுகிறார்கள். கல்லூரி நிதி நிலைமையைச் சமாளிப்பதில்கூட மாணவர்களுக்குப் பங்கு உண்டு, இங்கே. பரீட்சை வேண்டுமா, வேண்டாமா என்று நிர்ணயம் செய்வதிலும் அவர்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க இடமளிக்கிறோம். கல்லூரியின் நிருவாகத்தில் நமக்கும் கணிசமான பங்கு உண்டு என்று அவர்கள் உணர்ந்து பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளுகிறார்கள். கல்லூரி விடுதியின் அறைகளுக்கு டியூப் லைட் போட முடிவு செய்தோம். ஆனால் நிதி நிலைமையைப் பற்றிய பிரச்னை எழுந்ததும் அதற்கு மாணவர்களே நல்ல முடிவெடுத்தார்கள். மொத்தச் செலவில் 75 சதவிகிதம் மாணவர்களே பங்கேற்றார்கள். மீதி 25 சதவிகிதம் மட்டுமே கல்லூரிக்குச் செலவு. குளிர்ந்த குடிநீர் வசதிக்கான சாதனம் வாங்குவதிலும் இதே முறை கையாளப்பட்டது.

பள்ளி ஆசிரியர்கள் வேலைக்கு முதல் வகுப்புப் பட்டதாரிகள் அதிகம் வருவதில்லை போலிருக்கிறதே? மருத்துவம், பொறி இயல் ஆகிய துறைகளிலெல்லாம் முதலில் முயன்று பார்த்துவிட்டு இடம் கிடைக்காமற் போனால் இறுதியாகத்தானே ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு மனுச் செய்கிறார்கள்?

ஆசிரியர்களின் சம்பளம் இப்போதுதான் சற்றுக் கூடுதலாகியுள்ளது. சமீப காலம் வரை மிகக் குறைவான ஊதியமே பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைத்து வந்ததால், சிறந்த மாணவர்கள் இத்துறைக்கு ஈர்க்கப்படவில்லை என்பது உண்மை. சுதந்திரம் வருவதற்கு முன்பு சிறப்பாகத் தேறிய பட்டதாரிகள் நாட்டுப் பற்றுக் காரணமாக ஆசிரியர் வேலையை மேற்கொண்டார்கள்—குறைந்த சம்பளம் கிடைத்ததையும் பொருட்படுத்தாமல். கல்வித் தொண்டு புனிதமானது என்பதை உணர்ந்து, சிறப்பாகத் தேர்வு பெறும் பட்டதாரிகள் இத்துறையில் நுழைய வேண்டும். அந்த நிலை வந்தால் கல்வித் தரம் மேலும் உயரும்.

கல்லூரி மாணவர்களின் பிரச்னைகளுக்குச் சுமுகமான தீர்வு காண என்ன வழி?

பிரச்னைகளுக்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிந்து, அவற்றை மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் அணுக வேண்டியது அவசியம். மாணவர்கள் இளமைத் துடிப்பும், ஆர்வமும், ஆற்றலும் மிகுதியாயுள்ளவர்கள். அவற்றை நாம் நன்கு புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

ஒன்றிரண்டு உதாரணங்கள் கூற முடியுமா ?

சொல்கிறேன். இங்கு பட்டக் கல்வி பயிலும் ஒரு மாணவி தன்னுடைய ஹாஸ்டல் அறையில் ஒரு தையல் மெஷின் வைத்துக் கொண்டிருக்கிறார். பத்து மாணவிகள் அவரிடம் தையல் கலை பயிலுகிறார்கள். தலா ரூ. 10 வீதம் அந்த மாணவி கட்டணம் வசூலிக்கிறார். தம்முடைய படிப்புக்கான செலவை அந்த மாணவியே சம்பாதித்துக் கொள்வதை நான் ஆதரிக்கிறேன். என் மனைவியின் ரவிக்கை முதலியவற்றையும் அந்த மாணவியிடமே கொடுத்துத் தைக்கச் சொல்கிறேன். 'படிக்க வந்த இடத்தில் இதெல்லாம் கூடாது' என்று அந்த மாணவிக்குத் தடை விதித்தால் எப்படி இருக்கும்? யோசித்துப் பாருங்கள். படிப்புக்கு இடையூறின்றி இப்படி ஒரு தொழிலில் தேர்ச்சி பெறுவதில் தவறென்ன?...

இன்னொரு சம்பவம்: அடிக்கடி ஒரு மாணவர் மாலை வகுப்புகளுக்கு 'மட்டம்' போடத் தொடங்கினார். அழைத்து விசாரித்ததில், அவருடைய தந்தையார் ஒரு தீவிர கிறிஸ்துவர் என்றும் தம்முடைய மகன் சினிமா பார்க்கவே கூடாது என்று தடை விதிப்பதாகவும் தெரிய வந்தது. அதன் காரணமாகவே அவ்வப்போது வகுப்புக்கு 'மட்டம்' போட்டுவிட்டுச் சினிமாவுக்குப் போய் விடுவதாக அம் மாணவர் உண்மையை உள்ளபடி கூறினார். மாணவரின் தகப்பனாரை அழைத்து, 'சினிமா ஆசையை அறவே தவிர்க்க முயல்வது விபரீதமாக முடியும். எனவே நல்ல படங்களாக வந்தால் மகனை அனுப்புவதுதான் உசிதம்' என்று யோசனை கூறினேன். அவரும் ஒப்புக் கொண்டார். அதன் பிறகு அம் மாணவர் வகுப்புக்கு வராமல் இருப்பதேயில்லை!

கடைசியாக ஒரு கேள்வி, டாக்டர் தேவநேசன்! கல்லூரிகளில் இட நெருக்கடி அதிகமாகி வருகிறதே? இதைச் சமாளிக்க என்ன வழி ?

பள்ளிப்படிப்பைப் பூர்த்தி செய்த எல்லா மாணவர்களுமே கல்லூரியில் சேர்ந்து பயிலத்தான் வேண்டும் என்ற அவசியமில்லை. திறமையும் வசதியும் உள்ளவர்கள் உயர் கல்வி பயில முன்வரலாம். இரண்டுமே இல்லாத மற்றவர்கள் தொழிற் பயிற்சி பெறுவது நலம். எவ்வளவோ துறைகளில் தொழிற் பயிற்சி பெற இப்போது வாய்ப்பு உள்ளது; பயன்படுத்திக் கொள்ளலாம்.

பேட்டி: **பாணன்**

"ஸங்கீத ஸாரநாதன்"

கி. ராஜேந்திரன்

9. சுருதி சேர்ந்தது

அம்புஜமும் குழந்தைகளும் படகில் அமர்ந்து விட்டார்கள். பத்மநாபன் மட்டும்தான் பாக்கி. அவரும் ஒரு காலைத் தூக்கிவிட்டார், படகினுள்ளே மெல்ல இறங்கும் நோக்கத்தில். சரியாக அந்த விநாடியில், ''உங்களை எங்கேயோ பார்த்திருக்கேனே?'' என்று பின்னால் ஒரு குரல் கேட்கவே, தடுமாறிப் பின்னர் சமாளித்து நிமிர்ந்து திரும்பினார் பத்மநாபன்.

''ஆச்சு, மறுபடியும் ஓர் அபசகுனம்'' என்று அடங்கிய குரலில் அம்புஜம் அலுத்துக் கொண்டாள். ''கிளம்பற சமயத்தில் ஓர் அசட்டுக் கேள்வி; அதுவும் ஒற்றைப் பிராமணனிடமிருந்து.''

''அம்மா, 'அநாவசியமாத் தாமதமாகிறதே' என்று வேணுமானால் கவலைப்படு. நானும் சேர்ந்துக்கறேன். சகுனமெல்லாம் பார்த்துச் சங்கடப்





படாதே'' என்றாள் மீனா, தண்ணீரை அளைந்து கொண்டே. அவள் மனம் இன்று ரொம்ப உற்சாகமாக இருந்தது. அதற்குக் காரணம் இல்லாமலும் போகவில்லை.

''விழுந்த தெரிஞ்சாரேடி உன் அப்பா!'' என்று அம்புஜம் கூறியதை அவள் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை. நீரையும் வானையும் மலைச் சிகரங்களையும் மதர்ப்புடன் வளர்ந்திருந்த மரங்களையும் ஒன்றுசேரப் பார்த்த போது அந்த ஒரு புலனின் ஆணைக்குட்பட்டு மற்ற நான்கு புலன்களும் செயலற்றுப் போயின போல் அவள் மெய்ம்மறந்து கண் விழிகளை மட்டுமே நாலாபுறமும் சுழல விட்டுக் கொண்டிருந்தாள்.

கரையில் பத்மநாபன் கேட்டார்: ''யாரு, திருச்சேறை பஞ்சாபகேசன் தானே?'' ஒற்றைநாடியான மனிதர், உச்சிக் குடுமி, விசிறி மடிப்புடன் சரிகை அங்கவஸ்திரம், பஞ்சக் கச்சம் வைத்துக் கட்டிய வேஷ்டி, நடுத்தர வயதைக் கடந்துவிட்ட தோற்றம். பார்த்த உடனேயே அடையாளம் கண்டுகொண்டார் பத்மநாபன்.

''ஆமாம்! நீங்க... நீங்க...?''

''பத்மநாபன்.... அன்னம் பத்திரிகை!''

''ஓஹோ! பார்த்தேளா! அதுதான் எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே, இருக்கேன்னு யோசிச்சுண்டு இருக்கேன்.''

''எங்கே, இந்தப் பக்கம்? ஏதாவது கச்சேரியா?''

''ஆமாம். பெரியகுளத்திலே பெரிய மிராசுதார். அவா வீட்டிலே கல்யாணக் கச்சேரி. அது முடிஞ்சதும் கொடைக்கானல் கிட்டத்தில்தான் இருக்குன்னு கேள்விப்படவே பார்த்துட்டுப் போகலாமேன்னு பஸ் ஏறி வந்தேன். இங்கே என்னடான்னு குளிர் நடுக்கி எடுக்கிறது. எலும்பு வரைக்கும் குளிர்றதுங் காணும்!''

''எலும்பு வரைக்கும் என்ன வரைக்கும்? உமக்குத் தோலை விட்டா அடுத்



தது எலும்புதானே? காலமே இங்கே வயலின் சாதகம் பண்ணினீரா? சங்கதியெல்லாம் சுலபமா விழுமே?''

''கிண்டல் பண்ணறேள்!'' என்று நீட்டி முழக்கிக் கூறிக் கண் சிமிட்டினார் பஞ்சாபகேசன்.

''கிடக்கு; படகிலே ஒரு ரவுண்டு சுத்திட்டு வரலாம், வரேளா?''

''அதுக்கென்ன போயிட்டு வந்தாப் போச்சு'' என்று கூறிய அவரைக் கைத் தாங்கலாகப் பற்றி இறக்கி அமரச் செய்துவிட்டுப் பத்மநாபன் தாமும் உட்கார்ந்து கொண்டார். ''அம்புஜம்! லாரைத் தெரியுமில்லையா உனக்கு?'' என்று கேட்டு அறிமுகப்படுத்தி வைத்தார் தம் மனைவிக்கு. ''பின்னேடேயே இருந்தால் பொழுது போறதே தெரியாது நமக்கு. ரொம்பத் தமாஷ் பேர் வழி. ஒரு சமயம் இவர் என்ன பண்ணினார் தெரியுமா? கல்யாணத்திலே முகூர்த்தம் முடிஞ்சதும் எல்லாரோடேயும் பந்தியில் சாப்பிட உட்கார்ந்தார். லாடு பரிமாறினார்கள். இவருக்கு ஸ்வீட்னு ரொம்பப் பிரியம். ஒண்ணுக்கு ரெண்டாகச் சாப்பிட்டார். அப்படியும் ஆசை தீரலே. நாலு லட்டு பொட்டலம் கட்டிக் கொடுங்கோன்னு கேட்டு வாங்கிண்டார். மத்தியானம் ஒரு குட்டித் தூக்கம் போட்டார். சாயங்காலம் அதே கல்யாணத்தில் ரிஸப்ஷன் கச்சேரி. பாடகர், மிருதங்க வித்வான், இவர் எல்லாரும் மேடையில் உட்கார்ந்தாச்சு. வயலின் பெட்டியைத் திறந்து வாத்தியத்தை எடுத்தார். வர்ணம் முடிஞ்சுது. திடீர்னு பாடகர் ஒரு துள்ளுத் துள்ளி எழுந்தார். வேஷ்டியை உதறிண்டு தத்திங்கிணத்தோம் போட்டு மேடையில் குதிச்சார். அப்புறம் எல்லோருமே பரபரப்போடு எழுந்து மேடையை விட்டு இறங்கிட்டா. காரணம் என்ன தெரியுமோ? பந்தியிலே கேட்டு வாங்கிய லாடுப் பொட்ட



லத்தை மனுஷன் வயலின் பெட்டிக்குள் பத்திரப்படுத்தி வைச்சிருக்கார்! மேடை பூரா ஒரே எறும்பு !''

அம்புஜமும் அனசூயாவும் புரிந்து கொண்டு ஒரேயடியாகச் சிரித்தார்கள் ; விசு ஏதோ புரிந்ததுபோல் நடித்துச் சிரித்தான். மீனு மட்டும் சிரிக்கவில்லை.



படகு மெல்ல நகர்ந்து செல்ல ஆரம்பித்ததுமே, மீனுவின் இதயமும் இனிய கற்பனைகளில் மிதக்க ஆரம்பித்துவிட்டது. அந்தக் கற்பனையில் பங்குபெற ரங்கனையும் அவள் கைநீட்டி வரவேற்று விட்டாள்! அவள் உலகமே இப்போது அலாதியான ஒன்ருக இருந்தது!

''இவர் சொல்றது ஒண்ணும் பொய் யில்லே!'' என்று உறுதிப் படுத்திஞர் திருச்சேறை. ''சின்ன வயசிலிருந்தே எனக்கு ஸ்வீட் ரொம்பப் பிடிக்கும். அந்த நாளிலே ஹோட்டலில் பில் போட மாட்டான். 'பஞ்சாமிக்குப் பத்தணு'ன்னு என் பேர் சொல்லிக் கத்துவான். 'ஐயோ! பத்தணுவுக்கா இந்தப் பிள்ளையாண்டான் சாப்பிட்டான்?' என்று யாராவது நினைத்துவிடக் கூடாதே என்பதால், தனித் தனியா நாலு ஹோட்டலிலே நுழைந்து நாலு விதமான ஸ்வீட்களைச் சாப்பிட்டுவிட்டு வருவேன்!''

இந்தச் சமயத்தில் கரையோரமாகச் சில வெள்ளைக்காரக் குழந்தைகள் நீந்திக் கொண்டிருப்பது பத்மநாபன் கண்களில் பட்டது.

"அதோ பார், அம்புஜம்! எத்தனை லாகவமா அந்தக் குழந்தைகள் நீஞ்சறு? அந்த மாதிரி சின்ன வயசிலேயே பழக்கிட்டா கவலேயில்லே" என்ருள்.

"பட்டணத்திலே எங்கே போய் நீஞ்சப் படிக்கிறது? கூவம் தானே இருக்கு?" என்ருள் அம்புஜம்.

"ஆடிப் பெருக்கின்போது ரயில் மேலேயிருந்து காவிரியில் குதிப்போம் அந்த நாளிலே!" என்ருர் திருச்சேறை பஞ்சாமி.

"இன்னிக்கும் இளம் காளேங்க அங்கேயெல்லாம் குதிச்சு நீஞ்சத்தான் செய்யறுங்க" என்ருன் படகோட்டி. "ஆனு இங்கே நல்லா நீஞ்சத் தெரிஞ்சவங்க பாடுகூடத் திண்டாட்டம்தான்! அதோ போர்டு போட்டிருக்கு பாருங்க, என்ன எழுதியிருக்கு?"

பத்மநாபன் தொலேவில் இருந்த அறிவிப்புப் பலகையைச் சிரமப்பட்டுப் படித்தார். "'ஸ்விம் அட் யுவர் ஓன்-ரிஸ்க்!' ஏம்பா, பச்சைப் புள்ளேங்க நீஞ்சுது. 'ஆபத்துலே மாட்டிக்கிட்டா நாங்க பொறுப்பாளி இல்லே'ன்னு போர்டு போட்டுப் பயமுறுத்தருங்களே!"

"அந்தக் குழந்தைங்க வெள்ளேக்காரப் புள்ளேங்க ஸார்! குளிர் தேசத்திலேயிருந்தே வந்தவங்க. பெற்றவங்க பக்கத்தில் இருக்க, பையப் பைய இறங்கிக் கரையோரமாகவே நீஞ்சிப் பழக்கப்படுத்திக்கிடுவாங்க. குளிர் அவங்களுக்கு லட்சியமில்லே. நீங்க தண்ணியைத் தொட்டுப் பாருங்க, எப்படி ஜில்லுன்னு இருக்குன்னு."

"ஐஸ் மாதிரிதான் இருக்கு" என்று ஒப்புக் கொண்டார் பத்மநாபன், அவன் கூறியபடி செய்து பார்த்துவிட்டு.

"இப்படித்தான் ஒரு மனுஷன் விஷயம் தெரியாமே ரெண்டு வருஷங்களுக்குமுன் காலங்கார்த்தாலே வந்து குளிக்கலாம்னு கரையிலேயிருந்து தொப்புன்னு குதிச்சுட்டான்."

"அடடா! அப்புறம்?"

"அப்புறம் என்ன? குளிரிலே கையும் காலும் விரைச்சுப் போச்சு; அசைக்க முடியலே! யாரும் வந்து காப்பாத்தறதுக்கு முன்னடி கைலாசம் போய்ச் சேர்ந்துட்டான்."

"சுச்சுச்சு!"

"அல்லி, ஆம்பல் கொடிகள் வேறே இருக்கு. அவற்றிலே கால் மாட்டிக்கிட்டாலும் ஆபத்துத்தான்!"

"ரொம்ப ஆழமோ?" என்ருர் பத்மநாபன்.

"பத்து ஆள் ஆழம் தாராளமா இருக்கும்" என்ருன் படகோட்டி. விசுவைச் சுற்றியிருந்த அம்புஜத்தின் கரம் இறுகியது. "பழனிக்கு இங்கேயிருந்துதான் தண்ணீர் கொண்டு போருங்க."

பத்மினி என்று பெயர் கொண்ட ஒரு படகு அப்போது அவர்கள் படகருகே எதிர்த் திசையில் சென்றது.

"படகுகளுக்குக் கூட சினிமா நட்சத்திரங்களின் பெயர்களேத்தான் வைக்கிருர்கள்" என்ருர் பத்மநாபன்.

"குலமா குணமா ஷூட்டிங்குக்குப் பத்மினி வந்தபோது அதன் ஞாபகார்த்தமாக அவள் பெயரைப் படகுக்கு வைத்திருப்பார்கள்" என்ருள் அம்புஜம்.

"அவங்க வரவேயில்லே அம்மா!" என்ருன் படகோட்டி. தனக்கு விஷய ஞானம் இதில் மிகுதியாக இருப்பது குறித்து அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. "கதையிலேதான் பத்மினியும் சிவாஜியும்கூட இங்கே வருவதுபோல் இருக்கிறது. ஆனல் ஷூட்டிங்குக்கு இங்கே வந்தது வாணிஸ்ரீயும் ஜெய்சங்கரும் மட்டும்தான். சிவாஜி — பத்மினி காட்சிகளை இன்டோரிலேயே எடுத்துச் சமாளிச்சுட்டாங்க. அவுட்டோரில் ஜெய்—வாணிஸ்ரீ ஜோடியையும் இன்டோரில் சிவாஜி-பத்மினியையும் மாறி மாறிக் காட்டறச்சே, நாலு பேருமே இங்கே வந்திருந்த மாதிரி சினிமாப் பார்க்கிறவங்களுக்கு ஒரு பிரமை ஏற்படுது!"

"ஜெமினி கணேசனுக்குக்கூட இங்கு வீடு இருக்காமே?" என்ருர் திருச்சேறை.

"உம்... பேர் ஷோலா ஃபால்ஸ் போறச்சே நீங்க பார்க்கலாம்."

"கொடைக்கானலில் பார்க்க வேண்டிய காட்சிகள் பட்டியலில் அவசியம் அதையும் சேர்த்துக்கவேண்டியதுதான். மெட்ராஸில் எந்த டூரிஸ்ட் பஸ்ஸும் சினிமா நட்சத்திரத்தின் வீட்டு வாசல்லே நிற்காமல் போவதில்லே."

ஏரிக் கரையோரம் அமைந்திருந்த சாலேயில் ஒரு பெரிய கார் பவனி வந்தது. "அதோ பிரமீளா போருளே! டாட்டா சொல்லுடா விசு!" என்ருள் அம்புஜம். தானும் கையசைத்துப் பிரமீளாவின் கவனத்தைக் கவர்ந்து விட்டாள். பிரமீளா சட்டென்று நிமிர்ந்து ஜன்னல் வழியாகப் பின்புறம் எட்டிப் பார்த்துப் பதிலுக்கு 'டாட்டா' கூறியதும் அம்புஜத்துக்குப் பெருமை பிடிபடவில்லே.

"நீ ஏன் பிறந்த நாளேக்குக் கூப்பிடும்படி கேட்கலே? நவராத்திரியோடு நிறுத்திண்டுட்டே?" என்ருர் பத்மநாபன்.

"இவள் ஒண்ணும் கேக் வெட்டிப் பிறந்த நாள் கொண்டாடறதில்லே. எனக்குத் தெரியும். நளினி சொல்லி



தஞ்சை ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, ஹரிகதாவாணி ஸ்ரீமதி கமலா மூர்த்தியின் புதல்வி சௌபாக்கியவதி **லலிதா** என்கிற **லக்ஷ்மி**க்கும், சேலம் ஸ்ரீ கே. எஸ். நாகராஜ அய்யரின் புதல்வன் சிரஞ்சீவி **என். சுப்ரமணியன்** B. Sc.,க்கும் தஞ்சாவூரில் குஜராத்தி சங்கம் கல்யாண மண்டபத்தில் 17-3-72 அன்று திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. சங்கீத வித்வான்களும், உறவினர்களும், நண்பர்களும் ஏராளமாக வந்திருந்து மணமக்களை வாழ்த்திச் சென்றனர்.

வாழ்க மணமக்கள்

PABV-11

டெட் சலவை செய்யும் கட்டி
டெட்டர்ஜென்ட் சக்தி செறிந்தது





டெட் டெட்டர்ஜென்ட் சலவைக் கட்டி

சோப்பைவிட 50% அதிக துணிகளை, அதிவெண்மை-யாக சலவை செய்கிறது

—மென்னீரிலும், சாதாரணமாக நுரைவிடாத நீரிலும்

Shilpi HPM/Ae5/70 TM

யிருக்கா. நாலு பேரைக் கூப்பிடற துன்னு நவராத்திரிக்கு மட்டும்தானும்!''

''இருக்கும், இப்போதெல்லாம் கேக் வெட்டிப் பிறந்த நாள் கொண்டாடற பழக்கம் அரசியல்வாதிகளுக்குப் படிஞ்சு போச்சு. சினிமா நட்சத்திரங்கள் அதை விட்டுட வேண்டியதுதானே?''

''குழந்தையை உங்களுக்கு ரொம்ப நாளாத் தெரியுமோ?'' என்று கேட்டார் திருச்சேறை பஞ்சாபகேசன்.

''குழந்தையா, எந்தக் குழந்தை ?''

''பிரமீளாவைத்தான் கேட்கிறேன்.''

''இன்றைக்குத்தான்அறிமுகமாச்சு.''

''குழந்தை ரொம்ப நல்ல மாதிரி.''

''என்னய்யா, மடியிலே வைச்சிண்டு சீராட்டினவன் மாதிரி சதா குழந்தை குழந்தைன்னு சொல்லிண்டிருக்கேள்?''

''அப்படிச் செய்திருக்க வேண்டியவன்தான், ஏதோ காலத்தின் கோளாறு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு திசையில் போயிட்டோம்.''

''என்ன சொல்றேள், நீங்க?'' என்றார் பத்மநாபன் திடுக்கிட்டு:

''அந்தக் கனகா நம்ம ஊர் பக்கம் தான் சுவாமி. ரெண்டு கச்சேரிகூடப் பண்ணிக் கேட்டிருக்கேன். அப்புறம் தான் புரிஞ்சுது, இவளுக்கும் சங்கீதக் கலைக்கும் ரொம்பத் தூரம்னு. வேறு ஒரு கலைக்காகவே பிறந்து வளர்ந்தவள்னும் தெரிஞ்சு போச்சு. அதிலே இவளுக்கு நிகர் யாருமில்லே!'' பஞ்சாபகேசன் கண் சிமிட்டினார்.

''ஓகோ, அப்படின்னு பால்யத்திலே கனகாவை நிறைய சந்திச்சிருக்கேள் !''

''சந்திக்கிறதாவது? மாசக் கணக்கில் அவளுடைய மந்தகாசத்தில் மயங்கிக் கிடந்திருக்கிறேன். சுவாமி! அந்தக் காலத்திலே அவள் ரதின்னு அதிலே அணுவளவும் பொய்யில்லே. எங்கிட்டே அவளுக்கு அலாதிப் பிரியம்!'' பஞ்சாபகேசனின் குரல் தணிந்துகொண்டே வந்தது. பத்மநாபனுக்கு மட்டும் கேட்கிற குரலில் மேற்கூறியவற்றைச் சொன்னார்.

''வெளுடா, ராஜா, வெளு!'' என்றார் பத்மநாபன், நண்பர் முதுகைத் தட்டிக் கொடுத்து.

''இன்றைக்குப் படகிலே உங்களோடு சுற்றி வருகிற மாதிரி நேற்று அவர்களோடு ஒரு ரவுண்டு வந்தேன்!''

''பலே! அப்போ பழைய தொந்தம் இன்னும் விடலில்லே ?''

''கனகத்துக்கு விட்டுப் போச்சு. அவளுக்கு உதறல் கண்டுடுத்து. நான் இப்போ அப்பா உரிமை கொண்டாடி பிரமீளாவுக்கு இருக்கிற சொத்திலே பங்கு கேட்க வந்துடுவேன்னு பயம்! அடையாளம் தெரிஞ்சுக்காத மாதிரியே இருந்தாள். ஆனல் அப்போ பாருங்கோ, ஒரு அதிசயம்! குழந்தை ஏதோ ஏக்கத்தோடு என் முகத்தைப் பார்த்தது. தகப்பனார் இல்லாத குறைங்கறேன் ! எழுதி வைச்ச மாதிரி முகம் காட்டிடுத்து.

'' 'அம்மாவும் பொண்ணும் தனியாப் போறேன்.... ஜாக்கிரதையாப் போங்கோ'ன்னு கரையில் நின்றபடி சொன்னேன்.

''பிரமீளா என்ன நினைச்சுண்டாளோ? 'நீங்களும் வாங்களேன்'னுள். முன்னே பின்னே தெரியாத ஒருத்தரை இப்படி அழைக்கணும்னு அதுக்கு என்ன பேரு?''

''அதிகப்பிரசங்கித்தனமா ?''

''கிண்டல் பண்ணறேள்!'' என்று ரப்பர் கயிறாக வார்த்தைகளை இழுத்துச் சொன்னார் திருச்சேறை. ''பாசங்கானும், ரத்த பாசம்! எனக்கு உடம்பு சிலிர்த்துப் போச்சு! 'அம்மா, குழந்தை'ன்னு அழைச்சுக் கட்டிண்டு அழணும்போலே இருந்தது !''

''யாரை? அம்மாவையா? குழந்தையையா ?''

கேலியை லட்சியம் செய்யாமல் திருச்சேறை தொடர்ந்தார்: ''அவளையும் அறியாமல் ஏதோ உள்ளுணர்வு உந்தியிருக்கு சுவாமி, என்னைப் படகில் ஏற அழைக்கும்படி. மூக்கைக் கவனிச்சேரா ? என்னுது மாதிரியே எடுப்பா இல்லையா? அவள் அம்மாவுக்கு ஏது அந்த மாதிரி மூக்கு? வெறும் குடை மிளகாய்! குழந்தை என் முகத்தையே பார்த்துண்டு துடுப்புப் போட்டாள். எத்தனை லாகவம்ங்கறேன்!''

''நீங்க வயலினில் 'போ'போடறதை விடவா ?''

''நீங்க சொல்றதிலே ஒரு பாயிண்ட் இருக்கு. இல்லாட்டா வாய் வார்த்தையாகத்தான் என்றாலும்கூட 'உங்களை அப்பா மாதிரி நினைக்கிறேன்'னு சொல்வாளா ?''

'' ஓ ! அந்த அளவுக்குப் போயிடுத்தா ?''

''அப்புறம் பேச்சு வளர்ந்து, கனகமும் என்னோடு ரெண்டு வார்த்தை பேசினுள். ஆனல் பழைய விஷயங்கள் எதையும் அவள் சொல்லலே. நானும் ஞாபகப்படுத்தலே. பணம், நெஞ்சிலே இருக்க வேண்டிய மனசை உள்ளங்காலுக்கு மாற்றிவிடும். அந்த நாளில் நான் சம்பாதிக்காத பணமா, கனகாவின் மடியில் கொட்டாத பணமா ? பழைய கதை எதுக்கு? சொத்தைப் பறிச்சுண்டுடுவேன்னு இன்றைக்கு அவள் பயப்படறாள்னு தெரிஞ்சுபோச்சு. அவள் மனசைப் புரிஞ்சுண்ட பிறகும் அவளைச் சங்கடத்துக்கு உள்ளாக்குவா

னேன்? நிம்மதியா அவளே அனுபவிச்சுட்டுப் போகட்டும்னு விட்டுட்டேன்.''

''உண்மையிலேயே இது தியாகம் தான்'' என்றார் பத்மநாபன். ''உங்க மனசே தங்கம்; பொன்னுக்கும் பணத்துக்கும் ஆசைப்படலே. இன்னொருத்தனு இருந்தால் பயமுறுத்தி அகப்பட்டதைச் சுருட்டாமல் விடமாட்டான்.''

படகு கரைக்கு வந்து சேர்ந்தது.

''எங்கே ஜாகை?'' என்று கேட்டார் பத்மநாபன்.

''அருணகிரி விலாஸ். ஊர் திரும்ப இன்னும் இரண்டு நாட்களாகும்னு கார்டு போட்டுட்டேன். கனகமும், பிரமீளாவும் ஹில்டனில் தங்கியிருக்கா.''

''நாங்க ஹாப்பி ஹாலிடே. அதோ ஹோட்டல் பஸ் காத்துண்டிருக்கு. வரட்டுமா?''

அவரிடமிருந்து கழற்றிக் கொள்ள அவ்வாறு சொன்னாரே ஒழிய பஸ் கிளம்ப இன்னும் நீண்ட நேரம் இருந்தது. சற்றுத் தூரம் போனதும் விசுவையும் அனசூயாவையும் குதிரைகளின் மேல் ஏற்றிவிட்டார் பத்மநாபன். ''ஜாக்கிரதையாக அழைத்துக்கொண்டு போப்பா'' என்று குதிரைக்காரனிடம் சொன்னார். ''நடந்து போனாலே போதும்.''

அம்புஜமும் மீனாவும் அவருடன் சேர்ந்து காவாற ஏரியைச் சுற்றி நடந்தார்கள்.

''ஆரம்பிச்சான்னா முடிக்கவே தெரியாது பஞ்சாமிக்கு'' என்றார் பத்மநாபன். ''இவன் பிறந்து வளர்ந்ததிலேயிருந்து இன்னும் சாகறதுக்கு முன்னால் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் வரை எல்லாவற்றையும் சொல்லியாகணும்.''

''பஸ் கண்ணிலே தென்பட்டதோ, பிழைச்சோமோ? அது கிளம்பப் போறதுன்னு ஒரு சாக்கு அகப்பட்டது. அப்பாவுக்கு. நல்ல ஐடியா!''

பத்மநாபன் எதையோ நினைத்துச் சிரித்தார். ''மதுவிலக்கை ரத்துப் பண்ணினார்கள் பாரு அன்றைக்கு இந்த மனுஷனுக்கு ஒரு வேடிக்கையான அனுபவம் நேர்ந்தது.''

''என்ன. என்ன?'' என்றாள் மீனா ஆர்வத்துடன்.

''அவரைப் பார்த்தாலே வேடிக்கையாக இருக்கு; மேற்கொண்டு தமாஷான அனுபவம் வேறேயா?'' என்றாள் அம்புஜம்.

''கேளு! கச்சேரிக்கு முன்னாடி, கிரீன் ரூமிலே சுருதி சேர்த்துண்டு இருக்கா. அப்போ ஒருத்தன் வந்து உட்கார்ந்துண்டு, 'ஃபாண்டா கொண்டு வரவா? காப்பி சாப்பிடறேளா'ன்னு உபசாரம் பண்ணினான். பஞ்சாமி, அவன் சங்கீத வித்வானோட வந்திருக்கிறதா நினைச்சுண்டு இருக்கான். சங்கீத வித்வான், மிருதங்கம் மார்க்கபந்துவோட சிஷ்யன் அவன்னு நினைச்சுண்டு இருக்கார். மார்க்கபந்து திருச்சேறை பஞ்சாமியோடு அந்தப் பயல் வந்திருக்கிறதாக எண்ணிண்டிருக்கார்.

''ஆச்சு, சுருதியெல்லாம் சேர்த்துண்டு மேடையிலே போய் உட்கார்ந்தாச்சு. இந்த ஆசாமியும் — யாரு? உபசாரமெல்லாம் பண்ணினானே அவன்- பாடகர் பக்கத்திலே வந்து உட்கார்ந்துண்டான்.

''கல்யாணசுந்தரம் வர்ணம் பாடினார். இவனும் ஜமாவா சேர்ந்துண்டான். அப்புறம் அவர் ராக ஆலாபனை ஆரம்பித்தார். இவன் விடலையே! அதற்கும் பின்பாட்டுப் பாட ஆரம்பிச்சுட்டான்.''

''தொலைஞ்சுது!'' என்றாள் அம்புஜம்.

''கல்யாணசுந்தரத்தால் அதுக்கு மேல் தாங்க முடியலே. மெல்ல நம்ம திருச்சேறை பஞ்சாமிகிட்டே, 'உங்க ஆளை மேடையை விட்டு இறங்கச் சொன்னாத் தேவலையே' என்றார்.

'' 'என் ஆளா? நான் இவர் உங்களோடு வந்திருக்கார் என்று நினைச்சுண்டிருக்கேனே' என்றார் பஞ்சாமி.

''இரண்டு பேரும் மிருதங்கம் மார்க்கபந்துவைப் பார்க்க, அவர் உதட்டைப் பிதுக்கினார்.''

''நல்ல கூத்து'' என்றாள் மீனா.

''பாக்கியையும் கேளு!'' என்று சுவாரசியமாகத் தொடர்ந்தார் பத்மநாபன். ''சபா காரியதரிசி வருகிற பெரிய மனுஷாளை வரவேற்க முதல் கேட்டருகே நின்னுண்டிருக்கார். ஒரு சமயம் மேடையை அவர் பார்த்த போது பஞ்சாமி அவருக்கு ஜாடை காட்டி மேடைக்கு வரவழைச்சார். காதோடு ரகசியமாய்ச் சொன்னார், கச்சேரி செட்டுக்குச் சம்பந்தமில்லாத ஒருவர் மேடையில் உட்கார்ந்துண்டிருக்கிறதை.

''காரியதரிசி கீழே இறங்கிவிட்டார். அவனை எழுப்பறது தமக்குக் கௌரவக் குறைவுன்னு நினைச்சாரோ அல்லது பயந்துதான் போய்விட்டாரோ தெரியாது. வாசல்லே நின்னு கொண்டிருந்த ஸ்கவுட்டிடம் போய் .விஷயத்தைச் சொல்லி விரலால் ஆளைச் சுட்டிக்காட்டி அனுப்பினார்.

''அழகுதான்'' என்றாள் அம்புஜம்.

''கிளைமாக்ஸ் இனிமேல்தான்!'' என்றார் பத்மநாபன். அந்த ஸ்கவுட் என்ன செய்தான் தெரியுமா? நேரே திருச்சேறை பஞ்சாபகேசன் பின்னால்

போய் நின்னுண்டான். 'ஸார், எழுந்திருங்க! கீழே இறங்குங்க!' என்று அதட்டினான். இவர் முகத்தைப் பார்க்கணுமே? உடம்பெல்லாம் வெலவெலத்துப்போய் வியர்த்துக் கொட்டி....''

பத்மநாபன் முடிக்கு முன்னரே அம்புஜமும் மீனுவும் மலைச் சரிவுகளில் எதிரொலிக்கிற மாதிரி பெரிதாகச் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள், அடக்க மாட்டாமல்.

''அடடா! அந்தச் சாரணன்தான் எவ்வளவு ஞானஸ்தன்'' என்றாள் மீனு சிரிப்பு ஓய்ந்ததும்.

''பணம் கொடுப்பார்களா என்பது பற்றிக்கூடக் கவலைப் படாமல் கச்சேரி செட்டில் அழையாத விருந்தாளியாக வந்துசேர்ந்து கொண்டானே, அவனுக்கு நன்னு 'சுருதி' ஏறியிருந்தது! ஆக, மதுவிலக்கு ரத்தானதில் ஃபர்ஸ்ட் காஷுவாலிடி நம்ம பஞ்சாமிதான்!''

தமாஷாகப்பேச்சு தொடர்ந்தது. சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு பஸ்ஸில் ஏறி ஹாப்பி ஹாலிடே ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தது பத்மநாபன் குடும்பம்.

பஸ்ஸை விட்டு இறங்கியதும் பக்கத்தில் ஒரு ஜீப்பில் நடராஜன் ஏறிக் கொள்ள யத்தனிப்பதைப் பார்த்தார் பத்மநாபன். அருகே ஓர் இன்ஸ்பெக்டரும் இரு ஜவான்களும் வேறு நின்றார்கள்.

''என்ன ஸார்? அஃபிஷியல் பிஸினஸ்ஸா? ஹாலிடேன்னு சொல்லிண்டு வந்தேளே, பாவம்!'' என்றார் பத்மநாபன்.

''என்ன செய்யறது, சொல்லுங்க? கால்ஃப் கிளப் பக்கத்திலே ஒரு டிராஜடி. ரொம்பப் பயங்கரம்! திரும்பி வந்த பிறகு விவரமா சொல்றேன்'' என்று கூறிவிட்டு ஜீப்பில் ஏறினார் டி. ஐ. ஜி., ஸி. ஐ. டி. ஜீப் விரைந்தது.

'கால்ஃப் கிளப்' என்றதும் பத்மநாபனுக்கு அமிர்தலிங்கத்தின் நினைவு வந்தது. தமது அறைக்குச் செல்லும் போதே வழியில் அவன் அறை வாசலையும் கவனித்தார். கதவு பூட்டியிருந்தது! (தொடரும்)

தெரிந்த விளையாட்டு: தெரியாத விவரம்



2. கால்பந்தாட்டம்

☐ கால் பந்தாட்டம் 11-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தோன்றியது. 1016லிருந்து 1042 வரை டென்மார்க் நாட்டவர் இங்கிலாந்தைக் கைப்பற்றியிருந்தனர். ஆங்கிலேயருக்கும் இவர்களுக்கும் உறவு எலியும் பூனையும் போலத்தான்! ஒரு நாள் சில ஆங்கிலத் தொழிலாளிகள் புதிய வீட்டுக்கு அஸ்திவாரம் தோண்டிய பொழுது பூமியில் பகைவன் ஒருவனின் மண்டை ஓடு கிடைத்தது. தங்கள் வெறுப்பைக் காட்டிக் கொள்வதற்காக அதைப் பல திசைகளில் காலால் உதைத்தனர். ஒரு சில இளைஞர்கள் இந்தக் காட்சியைக் கண்டு தாங்களும் அந்தப் பணியைச் செய்தனர். மண்டை ஓட்டை உதைப்பது காலில் வலி எடுக்கவே, ஒரு புத்திசாலி தோலில் பந்து செய்து காற்றடித்து உதைக்கத் தொடங்கினான்.

☐ டெவன்ஷயரில் உருளைக் கிழங்கை விதைப்பதற்கு முன்னால் அந்த இடத்தில் கால்பந்தை உதைத்து ஆடினால் உருளைக் கிழங்குப் பயிர் செழிக்கும் என்ற நம்பிக்கை வளர்ந்துள்ளது. ஸ்காட்லாந்தில் மணமானவர்கள் ஒரு கோஷ்டியாகவும் மணமாகாதவர்கள் ஒரு கோஷ்டியாகவுமிருந்து வருஷாந்தரக் கொண்டாட்டத்தில் ஆடுவார்கள். ஆலிவர் கிராம்வெல்லுக்குச் சங்கீதத்திலும் கால்பந்தாட்டத்திலும் அதிகப் பிரியம். பிரபல எழுத்தாளர் வால்டர் ஸ்காட்டுக்குக் கால்பந்தாட்டத்தில் ஒரே ஆசை.

☐ கால்பந்தாட்டத்தில் ஒருவகையான, கையினாலும் அடிக்கும் 'ரக்பி' பிரசித்தமான இங்கிலாந்து பள்ளிக்கூடம் ஒன்றின் பெயரைத் தாங்கியுள்ளது. பதினைந்து ஆட்டக்காரர்கள் ஆடுவார்கள். ஆட்டத்தில் அடிபட்ட ஆட்டக்காரர்களுக்குப் பதிலாகப் பிரதி ஆட்டக்காரர் அனுப்பும் வழக்கம் இதில் கிடையாது.

☐ ரக்பியில் முதலில் அமெச்சூர் ஆட்டக்காரர்களே இருந்தனர். பிறகு புரொபஷனல் ஆட்டக்காரர்கள் வந்தனர். இருவருக்குள்ளும் சர்ச்சை எழுந்தது. 1893ல் ரக்பி யூனியன் கூட்டம் போட்டு எல்லோரும் அமெச்சூர்களாகவே இருக்க வேண்டுமென்றது. விளைவு பிரிவினை. புரொபஷனல் ஆட்டக் கழகம் 'ரக்பி லீக்' என்ற பெயரில் தோன்றிவிட்டது! - குண்டுமணி



சாதாரண காப்பிகளுக்கு எதிரான புரட்சியில் சேருங்கள்!

வற்புறுத்தி
வாங்குங்கள்
ஒரு ஸ்பெஷல் காப்பி

புதியது!
'அதி-ஸ்ட்ராங்கான'

ரிக்கரி®


இன்ஸ்டன்ட்

இது விசேஷமானது!
நெஸ்கஃபே தயாரிப்பாளர்கள் அளிப்பது

இலவசம்!



விசேஷ சலுகை ஒவ்வொரு கண்ணாடி
ஜாடியினுள்ளும் வெள்ளி முலாம்
பூசப்பட்ட ஒரு காப்பி ஸ்பூன்



விசேஷ சுவை

நிறைவும் செறிவும் கூடியதாய்த் திருப்திதரும் ரிக்கரியின் சுவையைத் தோற்றுவிக்க தென்னகம் நெடுகிலுமுள்ள காப்பி அபிமானிகள் துணைபுரிந்திருக்கின்றனர். இன்றே ஒரு கோப்பை பருகிப் பாருங்கள். அதை நீங்கள் விரும்புவது உறுதி.

விசேஷச் சிக்கனம்

ஜாடியினுள் வைத்துள்ள ஸ்பூனை உபயோகித்து பாருங்கள். சிறிதளவே ரிக்கரி உங்களுக்கு மிகவும் திருப்தி தரும் காப்பியை அளிக்கிறது. அதன் விலையோ, உங்களுக்கு ஆச்சரியமளிக்குமளவு மலிவு.

விசேஷ பாக்கிங்

ரிக்கரி ஜாடி மற்றெந்த கண்ணாடி ஜாடிகளை விட நவீனமானது. எளிதாகத் திறக்கக் கூடிய சிவப்புப் பிளாஸ்டிக் மூடியும், ரிக்கரியின் மணத்தையும், புதுமைத் தன்மையையும் பேணிப்பாதுகாக்கும் உட்புற அடைப்பானும் கூடியது.

விலை
ரூ. 2.87
வரிகள் தனி

ACIL-R-625 (I) TAM


அன்பே அகிலா!
கதை: குமரன்
சித்திரம்: செல்லம்
2
நேரமாக ஆக, கிழவர்களில் ஒருவன் மன உறுதி இழந்து விட்டான். தனக்குத் தானே சவக்குழி தயாரித்துக் கொள்வதை அவனால் சகிக்க முடியவில்லை.
என்னை விட்டு விடுங்கள்! முக்தி வாஹினி படை ஒளிந்திருக்கும் இடத்தை நான் காட்டுகிறேன்.
அப்போது எதிரே தூரத்திலிருந்து டெலஸ்கோப் பொருத்தப்பட்ட துப்பாக்கி கிழவனைக் குறி பார்த்தது:
துரோகி! அவன் காலைப் பிடித்துக் கெஞ்சுகிறாயா?
அடுத்த கணம்.....
ஐயோ! செத்தேன்!
லெப்டினன்ட் சுலைமான் அதிர்ச்சியிலிருந்து விடுபட்டதும்.....
சிப்பாய்கள்! அந்தத் திசையிலிருந்துதான் குண்டு பாய்ந்து வந்தது. கொஞ்சம் குறி தப்பியிருந்தால் என்னையே தீர்த்துக் கட்டியிருக்கும்!
ஆனால் பாக் சிப்பாய்கள் துரத்திச் செல்வதற்கு முன்பாக, அடிபட்ட புலியாகச் சீறியவன் மாறுவேடம் மாறிப் பாய்ந்தோடி விட்டான்!
பாக் சிப்பாய்கள் கானகத்தில் தேடி அலைந்து ஏமாந்தார்கள்.



வேறு புறத்தில்.... முக்தி வாஹினி படையைச் சேர்ந்த சில இளைஞர்கள் பழி வாங்கத் தருணம் பார்த்துக் காட்டில் ஒரு குகையில் ஒளிந்திருந்தார்கள். அவர்களில் ஒருவன் உணவு சேகரிக்க அலைந்த போது....
ஏதோ அழுகுரல் கேட்கிறதே!
பாறைக்குப் பின்னால் அவன் எட்டிப் பார்க்க....
அகிலா! நீயா! இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? ஏன் அழுகிறாய்?
அவன் வற்புறுத்தவே அகிலா நடந்ததை விவரித்தாள்....
வசீம்! என் நிலைமையை என்னென்பது? பெற்ற தகப்பனை இந்தக் குரங்குகளால் சுட்டுக் கொன்ற பாவி நான்! எனக்கு மன்னிப்பு உண்டா?
நிச்சயம் உண்டு அகிலா! பெற்றவர்கள் கொலை செய்யப் படுவதையும் சகோதரிகள் மானபங்கம் படுத்தப் படுவதையும் நேரில் பார்த்துத் துன்புறும் துர்பாக்கியம் நம்மில் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் உன் தியாகம் இவர்களைக் காட்டிலும் மிகப் பெரிது! வங்கம் விடுதலை பெறுமுன் இன்னும் இது போன்ற எத்தனை வேதனைகளை நாம் அனுபவிக்க வேண்டுமோ?
அகிலா! கிராமத்திலிருந்து இளம் பெண்களையெல்லாம் ஒரு கோயிலில் நிலவறையில் மறைத்து வைக்கச் செய்திருக்கிறோம். அவர்களை விட்டு விட்டு நீ தனியே வந்திருப்பது சரியல்ல. அவர்களில் துப்பாக்கி பிடிக்கத் தெரிந்தவள் நீ ஒருத்தி தான். அவர்களுக்குப் பாதுகாப்பு தேவை, போ!
அண்ணன் துப்பாக்கி பிடிக்கக் கற்றுக் கொடுத்தான். அவன் இன்று நடந்ததை அறிந்தால் என்ன நினைப்பான்?
பெருமைப் படுவான் அகிலா! சந்தேகமே இல்லை!
ஆனால் அந்தப் பெண்களையும் அபாயம் நெருங்கிக் கொண்டிருந்தது.
தொடரும்...

டி ஐ ஐ ஸி

தி தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன் லிமிடெட்

தி தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பொரேஷன், தமிழ்நாடு அரசால் துவக்கப்பட்டு, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள எல்லாவகையான தொழில் திட்டங்களுக்கும் நிதியுதவி அளித்து வருகிறது. இந்த நிதியுதவி எல்லாத் தகுதிவாய்ந்த திட்டங்களுக்கும், பங்குதாரர்களுக்கும், கூட்டு - சேமிப்பு நிறுவனங்களுக்கும், வழங்கப்படுகிறது. தொழில் நுட்ப பயிற்சியாளர்கள், கிராமப்புற மருத்துவர்கள் மற்றும் மிருக வைத்திய பயிற்சியாளர்களுக்கு சிறப்புத் திட்டங்கள் மூலம் பிரத்தியேக நிதியுதவி அளிக்கப்படுகிறது. மேலும் போக்குவரத்து நிறுவனங்களுக்குத் தேவையான புதிய டிரக்குகள், லாரிகள், மற்றும் டாக்ஸிகள் வாங்க பிரத்தியேக தவணைகளில் திருப்பிச் செலுத்த, டி.ஐ.ஐ.ஸி. நிதியுதவி அளிக்கிறது. பின்தங்கிய மாவட்டங்களும், பிற்பட்ட பகுதிகளும் திருப்பிச் செலுத்தும் காலவரம்பில் தனிச் சலுகை அளிக்கப்படுகிறது.

நிதியுதவி பெறுவதற்கான காலவரம்பும் நிபந்தனைகளும்:

குறைந்த பட்சம் 1,00,000 (சிறு தொழில் நிறுவனங்களுக்கு) ரூ. 25,000

தொழில் நுட்ப பயிற்சியாளர்கள் மற்றும் கிராமப்புற மருத்துவ பயிற்சியாளர்கள். } ரூ. 10,000

அதிக பட்சம் ரூ 25,00,000 (தொழில் நுட்ப பயிற்சியாளர்களுக்கும், கிராமப்புற மருத்துவ பயிற்சியாளர்களுக்கும் முறையே ரூ 2 லட்சமும், 1 லட்சமும்.)

வட்டி விகிதம்:

9.75% விகிதம் முறையே பெரிய மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு.
7% விகிதம் பிற்பட்ட பகுதியிலுள்ள தொழில்நுட்ப பயிற்சியாளர்களுக்கும், கிராமப்புற மருத்துவர், மற்றும் மிருக வைத்திய பயிற்சியாளர்களுக்கும்.
8½% விகிதம் முறையே மற்ற சிறு தொழில் நிறுவனங்களுக்கு.

முதல்கட்ட திருப்பிச் செலுத்தும் விடுமுறை:—

சாதாரண சிறு தொழில் நிறுவனங்களுக்கு 2 வருடங்கள்.
பின் தங்கிய மாவட்ட திட்டங்களுக்கு 4 வருடங்கள்.

நீண்டகால தவணை முறை:

8 முதல் 10 வருடங்கள் வரை பிரத்தியேக சலுகை மூலம் திருப்பிச் செலுத்த சிறு தொழில் நிறுவனங்கள். தொழில் நுட்ப பயிற்சியாளர்கள் கிராமப்புற மருத்துவர் மற்றும் மிருக வைத்திய பயிற்சியாளர்களுக்கு வசதியளிக்கப்படுகிறது.

டி ஐ ஐ ஸி

இதயபூர்வமான நிதியுதவி

தேவிவான விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

தமிழ்நாடு இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்பபொரேஷன் லிமிடெட்

எல் எல். ஏ. கட்டிடம், 150–A, மவுண்ட் ரோடு, சென்னை – 2

கிளைகள்: 1231, தெற்கு மெயின் தெரு, தஞ்சாவூர். 247, நாயக்கர் புதுத் தெரு, மதுரை. 6,37, ரேஸ் கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் -18

அவரும் வந்தார்

கிருஷ்ணா





ரங்கநாதம் மாடி அறையில் சோபாவில் உட்கார்ந்து பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். கால் மெட்டிச் சத்தம் கேட்டதும் பேப்பரை மடித்து டீப்பாயின் மேல் வைத்து விட்டு நிமிர்ந்து பார்த்தார். ஜானகிதான் வந்து கொண்டிருந்தாள்.

''உன்னைத்தான் டாக்டர் மாடிப்படி ஏறக்கூடாது என்று சொல்லியிருக்கிறாரே....நீ ஏன் வருகிறாய்? அப்படி என்ன காரியம் தலை போகிறது?...'' என்று சற்றுக் கடிந்து கொண்டாற்போல் அன்பின் மிகுதியால் கேட்டார்.

ஜானகி சிரித்தவண்ணம் அவர் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். ''ராஜனும் சேகரும் அவனவன் மனைவியோடு சினிமாவுக்குப் போய் விட்டார்கள். உங்களோடு ஒரு முக்கியமான விஷயம் பேச இப்பொழுதுதான் சமயம் கிடைத்தது'' என்றாள் ஜானகி புன்சிரிப்பு மாறாமலேயே.

''அப்படி என்ன முக்கியமோ? இந்த வயதுக் காலத்தில் பிளட்பிரஷரும் அதுவுமாய் மாடி ஏறி வருகிறாற்போல.''

''இருக்கிறது...எல்லாம் நம்ம வீட்டு விஷயம்தான். சொன்னால் நீங்கள் கோபித்துக் கொள்ளுவீர்களோ என்றுதான்....''

''நீ பயப்படுகிறாயாக்கும்... அப்படியிருந்தால் நீ வந்திருக்கவே மாட்டாயே. உன்னை எனக்குத் தெரியாதா?...''

ஜானகி அவருடைய முகத்தை ஒரு தடவை பார்த்துவிட்டுச் சொன்னாள்: ''செல்லப்பாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. சாவித்திரிக்கு மாதம் ஆகி விட்டதாம். இந்த வாரத்துக்குள் ஆகிவிடும் என்று...''

ஜானகி சொல்லி முடிப்பதற்கு முன்பே ரங்கநாதம் சோபாவினின்றும் எழுந்து விட்டார். ஜானகியை ஒரு

தரம் முறைத்துவிட்டு, ''பிரசவம் பார்க்கப் போக வேண்டும் என்கிறாய், அவ்வளவுதானே விஷயம் ?'' என்றார் சிவந்த விழிகளுடன்.

ஜானகியும் எழுந்தாள். சாந்தமாகவே கேட்டாள். ''ஏன் இப்படிக் கோபம் வருகிறது உங்களுக்கு? செல்லப்பா நம் குழந்தை இல்லையா ?''

''ஆமாம்.... குழந்தை.... தொட்டிலில் போட்டுத் தாலாட்டு.... மார்போடு சேர்த்து அணைத்துப் பால் கொடு. பச்சைக் குழந்தை... என் பேச்சை மீறிக் கொண்டு போனவன் தானே அவன்...? உலகத்திலேயே அபூர்வமாய்ப் புதிதாகக் காதலித்து விட்டவன். அன்றைக்கு அந்தக் காதல் சனியன்தானே பெரிதாக இருந்தது. இன்றைக்கு மட்டும் அம்மாவும் அப்பாவும் வேண்டுமா ?'' என்று சீறிப் படபடத்தார் அவர்.

ஜானகி அமைதியாகவே இருந்தாள்.

''உங்களை நான் எதிர்த்துப் பேசுவதாக நினைக்கக் கூடாது.....'' என்று ஆரம்பித்தாள் அவள். ''செல்லப்பா இந்தக் காலத்துப் பையன். அதுவும் நம் கடைசிச் செல்வமாய் வளர்த்தோம். ஏதோ ஆசைப்பட்டான். சாவித்திரியை மணந்து கொண்டான்...''

'' என் பேச்சை மீறி.....''

''தப்புத்தான்.... அதை நீங்கள் மறந்து மன்னித்திருக்க வேண்டுமே...?''

''இதோ பார் ஜானகி. வீண் பேச்சு எதற்கு? எதையாவது பேசி என்னைக் குழப்பி விடுவாய் நீ. நான் உன்னை அந்த வீட்டுக்கு அனுப்பமாட்டேன். தரித்திரம் பிடித்த உன் மருமகளுக்கு நீ போய்ப் பிரஸவம் பார்க்க வேண்டாம். அதற்கு எத்தனையோ தர்ம ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன'' என்றார் ரங்கநாதம் கடுமையாக.

ஜானகி நகரவில்லை. இரண்டு நிமிடங்கள் அவர் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்துப் பேசாமல் இருந்துவிட்டு மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

'' நான் உங்களுடன் என் பதினைந்தாவது வயதில் வாழ வந்துவிட்டேன். இன்று எனக்கு ஐம்பத்தைந்து வயசாகிவிட்டது. நாற்பது வருஷங்களாயிற்று. நான் இங்கே வந்து....''

''இப்போ அதற்கென்ன...? இது நான் வரையிலும் உனக்கு ஏதாவது குறை வைத்தேனா? சொல்லு....''

''இல்லே, இல்லே. நான் அதைச் சொல்லவில்லை. உங்கள் மனம் கோணாமல் நான் நடந்து கொண்டிருக்கிறேனல்லவா? உங்களுக்கு என் மேல் ஏதாவது வருத்தமோ அதிருப்தியோ ஏற்படும்படியாக நான் நடந்து கொண்டிருக்கிறேனா ?''

''சேச்சே. உன்னால் நான் எவ்வளவோ மேன்மையல்லவா அடைந்திருக்கிறேன்.''

'' என்னால் நீங்கள் மேன்மையடைந்ததாகச் சொன்னீர்கள். கேட்பதற்குச் சந்தோஷமாகத்தான் இருக்கிறது. ஆனால்....''

'' என்ன ஆனால் ?''

'' நான் இப்போ என்ன சொல்லிவிட்டேன். தாயற்ற பெண்ணுக்கு நான் தாயாக இருக்கிறேன் என்றால், இந்த மாதிரி சமயத்தில் பழைய கதைகளை நினைக்கலாமா ? பெண்மையின் சிறப்பே தாய்மைதானே.... அதைத் தடுத்தால் அதுவே எனக்கு ஒரு குறையாகத் தோன்றிவிடுமோ என்றுதான் பயப்படுகிறேன்'' என்றாள் ஜானகி.

ரங்கநாதம் அவளுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். நல்ல அழகான முகம். மூப்பின் கலவடுகளை அண்ட விடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் அழகு. அதில் தாய்மையின் கனிவு தனியாக ஒரு லட்சணத்தை ஏற்படுத்தி யிருந்தது. அந்த முகத்திலிருந்து பார்வையை எடுக்கவே அவருக்கு மனம் வரவில்லை.

'' நீ கெட்டிக்காரி.... போய்விட்டு வா... இந்தச் சீராடல் எல்லாம் உன்னுடனேயே இருக்கட்டும். என்னையும் இழுக்காதே....என் கௌரவம் எனக்கு.....'' என்றார் ரங்கநாதம் புன்னகையுடன்.

* * *

கார் சத்தம் கேட்டு உள்ளேயிருந்தவாறு எட்டிப் பார்த்த சாவித்திரி பரபரப்படைந்தாளாயினும் முடியாத தள்ளாமையினால் சற்று மெதுவாகவே எழுந்து வாசலுக்கு வந்து தன் மாமியாரை வரவேற்றாள்.

'' வாருங்கள் அம்மா.... வாருங்கள்....''

ஜானகி புன்முறுவலுடன் உள்ளே நுழைந்தவாறே மருமகளைக் கவனித்தாள். நிறை கர்ப்பத்துடன் தளர்ந்து, இன்னும் இரண்டு நாட்களுக்குள்ளேயே பிரஸவம் ஆகிவிடும் போலிருந்தது.

'' என்னம்மா சாவித்திரி.... சௌக்கியமாய் இருக்கிறாயா ?'' என்று விசாரித்தாள்.

''இருக்கிறேன், அம்மா!'' என்ற சாவித்திரி நமஸ்கரித்து எழுந்தாள்.

''இதெல்லாம் எதற்கம்மா... உன்னைப் பார்த்தால் இப்பவோ சற்றைக்கெல்லாமோ குழந்தை பிறந்துவிடும்போல் இருக்கிறது'' என்றவாறே மருமகளின் கரங்களைப் பிடித்துக் கொண்டு, ''செல்லப்பா சௌக்கியமாயிருக்கிறானா ?'' என்றாள்.

''இருக்கிறார் அம்மா... அவர் வேலையிலிருந்து வர இன்னும் ஒரு மணி நேரம் ஆகும்... பஸ்ஸைப் பிடித்து வந்து சேர வேண்டாமா ?''

ஜானகியின் முன்பு ஒரு காட்சி விரிந்தது. 'சரியாய் ஐந்தேகாலுக்குத் தொழிற்சாலை விட்டதும் தன் சொந்த வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டு வரும் செல்லப்பா இப்பொழுது பஸ்ஸுக்குக் காத்து நிற்கிறானாம்.... இருக்கட்டும்.... இதெல்லாம் என்ன பிரமாதமா ? மனமொத்த அன்புக்கு முன் எந்தத் துன்பமும் பெரிதாகத் தோன்றாதுதான்....' என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள். பிறகு ''அவசரத்தில் உனக்குக் கொஞ்சம் திரட்டுப் பாலும் முறுக்கும் மட்டும் தான் கொண்டு வந்தேன்....'' என்ற ஜானகி, திரட்டுப் பாலில் கொஞ்சம் எடுத்துத் தன் மருமகள் கையில் கொடுத்தாள்.

சாவித்திரி சொன்னபடியே ஏழு மணிக்குள் செல்லப்பா வந்து சேர்ந்தான். அம்மாவைக் கண்டதும், ''வந்தாயா அம்மா?'' என்றவன் அப்படியே தாயை நமஸ்கரித்து எழுந்தான். ''அப்பா வரவில்லையா அம்மா?'' என்று அவன் கேட்டதற்கு, ''வருவார்... என்னை முன்னால் அனுப்பிவிட்டார்....'' என்

ருள். அது 'பொய்' என்பது அவளுடைய மனச்சாட்சிக்குத் தெரிந்தாலும், அந்தச் சந்தர்ப்பத்தில் அது ஒரு சமாதான வாக்கியமாகப் பொருந்திச் செல்லப்பாவின் உள்ளத்துக்கும் மகிழ்ச்சியைத் தந்தது.

''இரவுச் சமையலே நானே செய்துவிடட்டுமா, சாவித்திரி?'' என்று கேட்டாள் ஜானகி.

'' வேண்டாம், அம்மா.... ஒரு நொடியில் சமைத்துவிடுவேன். அவர் வெளியே போய்க் கறிகாய் எல்லாம் வாங்கி வருவார். என் சமையலே நீங்கள் சாப்பிட வேண்டாமா அம்மா ...... அது என் பாக்கியமல்லவா ?'' என்றாள் சாவித்திரி.

''இந்தத் தள்ளாமையோடு நீ ஒன்றும் எனக்காகச் சிரமப்படாதே, குழந்தாய்.... '' என்று ஜானகி சொல்லி முடிப்பதற்குள், ''நீ பேசாமலிரு அம்மா.... அவளுக்கு வேண்டிய ஒத்தாசைகளை நான் செய்து கொடுக்கிறேன். எல்லாம் விரைவில் ஆகிவிடும்..... நீ மாமியாராய் லட்சணமாய்ப் பேசாமல் இந்த நாற்காலியில் உட்கார்ந்து எல்லாவற்றையும் மேற்பார்வை பார்த்துக் கொண்டிரு....'' என்ற செல்லப்பா கையில் ஒரு பையுடன் கறிகாய் வாங்கி வரப் புறப்பட்டான்.

ஜானகிக்குப் பெருமையாகவே இருந்தது. சமையற்காரர்கள் அடுப்படியில் விதம் விதமாய்ச் சமைக்க, நாசூக்காய்ப் பெரிய மருமக்கள் இருவரும் வெள்ளிப் பாத்திரங்களில் கொண்டு வந்து மேஜையின் மீது பரிமாறும் பழக்கத்தையே பார்த்திருந்த அவளுக்குக் கணவன் கறிகாய் வாங்கி நறுக்கிக் கொடுப்பதும் மனைவி தன் கையாலேயே சமையல் செய்வதும் ஒரு பாக்கியமாகவே தோன்றியது. அந்தக் காலத்தில் அவளும் இப்படித்தானே இருந்தாள். ரங்கநாதம் பழைய காலத்தையே மறந்து போய் விட்டார் போலும்!

* * *


ஜானகி எதிர்பார்த்தாற்போலவே மறு நாளைக்குச் சாவித்திரிக்கு நோவு கண்டுவிட்டது. செல்லப்பா ஒரு டாக்ஸி கொண்டு வந்தான். அவன் தன்னுடைய இ.எஸ்.ஐ. கார்டு முதலியவைகளை எடுத்துக் கொள்வதைப் பார்த்த ஜானகி, ''ஏன் செல்லப்பா... நான் நம்முடைய குடும்ப டாக்டரின் நர்ஸிங் ஹோமுக்கே அழைத்துப் போகிறேனேடா'' என்று வேண்டினாள்.

'' ஏனம்மா.... ஐந்நூறும் ஆயிரமுமாய் ஆனால் நான் எப்படிக் கொடுப்பேன்.....அவ்வளவு பணம் செலவு செய்து ஒரு ஸ்பெஷல் மருத்துவம் பெறும் வசதியுள்ள நர்ஸிங் ஹோமைவிட, எங்களுக்கு உரிமையுள்ள தொழிலாளர் நல இன்ஷ்யூரன்ஸ் ஆஸ்பத்திரியில் — அதுவும் ஏராளமான பேர்கள் மருத்துவம் செய்து கொள்ளும் இடத்திலேயே சாவித்திரியும் குழந்தை பெறுவதுதான் அம்மா நல்லது.....'' என்று செல்லப்பா சொன்னதும் ஜானகிக்கு உள்ளூற வேதனையாக இருந்தாலும் அவளால் பதில் பேச முடியவில்லை.

* * *

சிருட்டையான தலைமயிருடனும் சிவந்த நிறத்துடனும் ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது சாவித்திரிக்கு.

மதுவிலக்கு ரத்தானதால் உயிர் பெற்ற ஜோக்!



ஒருவர் அவசரமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போன் செய்து, ''என் காரில் ஸ்டீயரிங், வைப்பர், சாவி, கியர் ஒன்றையும் காணோம். ஐந்தே நிமிடத்தில் நான் திரும்பி வருவதற்குள் திருட்டுப் போயிருக்கிறது சார்'' என்றார்.

போலீஸ் உடனே வந்து விசாரிப்பதாக வாக்களித்தார்கள். சற்றே நேரம் கழித்து அவர் மறுபடியும் 'போன்' செய்தார்.

''ஹலோ, போலீஸா? ரொம்ப ஸாரி சார்! நான் கொடுத்த 'கம்ப்ளெயின்'டை கான்ஸல் செய்து விடுங்கள்.''

''ஏன் ?''

''அவசரத்தில் தவறுதலாக நான் பின்ஸீட்டில் ஏறி உட்கார்ந்துவிட்டேன்!'' -- கோட்டா மோகன்

ஜானகி மனம் கொள்ளாத மகிழ்ச்சியில் பூரித்துப் போனாள். குழந்தை அசல் அவளுடைய தாத்தாவைப் போலவே இருந்தான். செல்லப்பாவும் முழுக்க முழுக்க அவளுடைய அப்பா சாயல்தானே !...

சாவித்திரியை வீட்டுக்கு அழைத்து வந்தாயிற்று. புண்யாகவசனம் சிறப்பாக நடக்க வேண்டும்.

'' அந்தச் சமயத்தில் அப்பாவும் வந்தால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமாக இருக்கும், அம்மா. அப்பாவை வரச் சொல்லி நீயே கடிதம் போடம்மா'' என்றான் செல்லப்பா தன் தாயிடம்.

''உன் திருப்திக்காக நான் போடுகிறேன், அப்பா...! ஆனால் அவர் வந்தாலும் வரலாம். வராமலிருந்தாலும் இருக்கலாம். நீ வருத்தப்படக் கூடாது...'' என்றாள்.

நான்கு நாட்கள் ஓடிவிட்டன. விடிந்தால் புண்யாகவசனம்.

* * *

பொழுதும் விடிந்தது.

உள்ளே வைதிகச் சடங்குகள் நடந்து கொண்டிருந்தன. மூன்றே அறைகள் கொண்ட அந்தச் சிறிய வீட்டின் சமையல் பகுதியில் இருந்து புகையுடன் நல்ல சமையலின் மணமும் கலந்து வெளியே வீசிற்று.

மந்திரங்களின் ஒலியும், சந்தனம், மலர்கள் ஊதுவத்திகளின் மணமும் நடுநடுவே சின்னஞ்சிறு குழந்தையின் அழுகுரலும் காதுக்கு மிகவும் ரம்மியமாக இருந்தன.

உள்ளே ஜானகிதான் சமைத்துக் கொண்டிருந்தாள். கணவரிடம் அனுமதி பெற்று அவள் புறப்பட்டு வரும்பொழுது அவள் அவசரத்தில் வேறு எதைப் பற்றியும் நினைக்கவில்லை. கொஞ்சம் பட்சணங்களை மட்டும் எடுத்துக்கொண்டு, உடுத்த புடவையுடன் வண்டியில் ஏறிவிட்டாள். வேண்டுமானால் பிறகு எடுத்து வரலாம் என்றும் அவள் எண்ணியிருக்கலாம்.

செல்லப்பா தன்னுடைய தந்தையின் கம்பெனியில் மானேஜிங் டைரக்டராகத்தான் இருந்தான். தன் கம்பெனியிலேயே ஊழியக்காய் இருந்த சாவித்திரியை அவன் காதலித்த குற்றத்தைவிட அவளை மணந்து கொள்ளப் பிடிவாதம் பிடித்து மணந்து கொண்டதானது ரங்கநாதத்துக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அது ஒரு பெரிய குற்றமாக, தம் மகன் தமக்குச் செய்துவிட்ட மாபெரும் துரோகமாக அவருக்குத் தோன்றிவிட்டதால் அவர் அவனை, பதவி நீக்கம் செய்து வீட்டை விட்டே துரத்திவிட்டார்.

"எனக்கு அவமானம் தேடித் தந்த நீ எனக்குப் பிள்ளையுமில்லை. நான் உனக்கு அப்பனுமில்லை....." என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

அவருடைய மகன்தானே அவனும்! அந்த ரோசம் அவனுக்கு இருக்காதா? முதலாளியாக இருந்த அவன் தொழிலாளியாக மாற அஞ்சவில்லை. தனக்கு ஒரு மோட்டார் தொழிற்சாலையில் வேலை வாங்கிக் கொண்டு தன்னுடைய முதல் சம்பளத்திலேயே தனிக் குடித்தனத்துக்கும் ஏற்பாடு செய்துகொண்டு விட்டான். இன்று தானே ஒரு தந்தையான பின்பு, தன் தந்தையும் வந்திருந்து தன்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்று அவன் உள்ளம் துடித்தது. இதன் பிரதிபலிப்பு ரங்கநாதத்திடம் ஏற்பட்டிருக்குமா?

*   *   *

ஜானகி உள்ளே சமைத்துக் கொண்டிருந்தாலும் அவளுடைய கவனம் எல்லாம் வீதியிலேயே இருந்தது. கார் ஹாரன் ஒலித்த போதெல்லாம் அது அவள் வீட்டுக் கார் மாதிரியே பிரமை தட்டியது.

சற்றைக்கெல்லாம் அவளுடைய பிரமை உண்மையாகிவிட்டது. அந்த வீட்டு வாசலில் 'ப்ளிமவுத்' கார் வெகு ஜாக்கிரதையுடன் ஓரமாக வந்து நின்றது. அதனின்றும் ரங்கநாதமும், அவருடைய மற்றப் பிள்ளைகளான ராஜனும் சேகரும் அவர்களுடைய மனைவிமார்களும் இறங்கினர்.

"வாருங்கள், அப்பா....! அண்ணா வாருங்கள்....." என்று மகிழ்ச்சியுடன் உணர்ச்சி பொங்க அழைத்த செல்லப்பா அவரை வணங்க முற்படுகையில் அவர் அப்படியே அவனை அணைத்துக்கொண்டு விட்டார்.

கணவரைக் கண்டதுமே சமையலறையிலிருந்து வெளிப்பட்ட ஜானகி, தந்தையும் மகனும் அணைத்து நிற்கும் காட்சியைக் கண்டதும் எல்லையில்லா ஆனந்தத்தில் மிதந்தாள். அருகில் வந்த மனைவியை ஏற இறங்கப் பார்த்தார் ரங்கநாதம்.

"எப்படியும் நீங்கள் வந்துவிடுவீர்கள் என்று எனக்குத் தெரியும்.... குழந்தையைப் பார்த்தீர்களா?" என்றாள் ஜானகி புன்னகையுடன்.

அவர் பதில் சொல்லாமல் அவளையே கவனித்தார்.

'புடவைக்காக நீ ஏன் அம்மா வீட்டுக்குப் போய் எடுத்து வரவேண்டும்? நான் வாங்கித் தரும் புடவையைக் கட்டிக் கொள். எனக்குத் திருப்தியாக இருக்கும்' என்ற செல்லப்பா ஜானகி வந்த அன்றைக்கு இரவே இரண்டு நூல் புடவைகள் ஒன்பது கெஜத்தில் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்துவிட்டான். அதில் ஒன்றைத்தான் ஜானகி அன்று உடுத்தியிருந்தாள். அத்தகைய எளிய, அன்பு நிறைந்த தோற்றத்துடன் அவள் புன்னகை செய்த பொழுது அவருடைய உள்ளத்தில் அந்தக் காலத்தில் இருபத்திரண்டு வயது ஜானகி, இதைவிட மோசமான ஒரு பழம் புடவையைக் கட்டிக் கொண்டு நின்ற ஜானகி, தோன்றினாள். அன்று அவனுக்கு ஒரு நல்ல புடவை எடுத்துக் கொடுக்கக் கூடச் சம்பளம் போதாமல்தான் இருந்தது அவருக்கு.

அன்று எப்படிச் சாத்விகமாகப் பணிவிடை புரிந்தாளோ, அதே சாந்தமும் பொறுமையும் மாறாமல் — ஏன்? அந்தப் புன்னகை கூட மாறாமல் ஜானகி இருக்கிறாளே...

நினைக்க நினைக்க ஜானகியின் மதிப்பு அவர் உள்ளத்தில் உயர்ந்து நின்றது.

பகல் சாப்பாடு முடிந்து மாலை காப்பியும் ஆகிவிட்டது. விளக்கு வைக்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

"வருகிறாயா, ஜானகி, புறப்படலாமா?" என்று கேட்டார் அவர்.

"என்னையா புறப்படச் சொல்லுகிறீர்கள்...? சாவித்திரியை இந்த நிலையில் விட்டு விட்டு நான் வர முடியுமா?"

"சரி, நான் வந்தது உனக்குத் திருப்திதானே?"

"உங்களுக்கும் திருப்தியும் சந்தோஷமும் இருக்கிறதென்று உங்கள் முகமே சொல்லுகிறதே...." என்றாள் ஜானகி.

"வாயாடியாகி விட்டாய் நீ" என்று மனம் விட்டுச் சிரித்தார் அவர்.


"நீங்கள் இப்படிச் சிரித்து எவ்வளவு நாட்களாகி விட்டன....." என்ற ஜானகி தொடர்ந்து, "கோயிலுக்குச் சிலர் காரில் போகிறார்கள். வைரங்களும் பட்டுக்களுமாய்ச் சாத்துகிறார்கள். ஓர் ஏழை இரண்டு வாழைப் பழங்களுடனும் ஒரு துண்டு கற்பூரத்துடனும் வெளியே காத்துக் கொண்டிருக்கிறான். தெய்வம் அதையும்தான் ஏற்றுக் கொள்கிறது. இதையும் ஏற்றுக் கொள்கிறது. வீதியில் புறப்பாடு வரும்பொழுது தம் மக்கள் அனைவரையும் ஒன்றுபோல் பாவித்துத் தரிசனம் தரவில்லையா.....?" என்றாள்.

ரங்கநாதம் ஜானகியின் முகத்தை உற்று நோக்கினார்.

"எனக்குப் புரிகிறது ஜானகி. மனைவியும் கணவனுமாக இருந்த நிலை போய், அன்னையும் பிதாவுமாக மாறி, இப்பொழுது அதையும் விட உயர்ந்த — உன்னதமான நிலைக்கு நாம் வந்துவிட்டோம். நம் மக்களை ஆசீர்வதிக்கும் நிலையில் இருக்கிறோம். அதுதானே.... சரி, சாவித்திரிக்கு உடம்பு தேறட்டும். செல்லப்பாவையும் அவளையும் வரவழைத்துவிடுகிறேன். நாம் எல்லோரும் ஒன்றாகவே இருப்போம். உனக்குத் திருப்திதானே?" என்றார் ரங்கநாதம்.

ஜானகி புன்னகை புரிந்தாள். அதில் அன்பின் வெற்றிப் பெருமிதத்தைவிட, அன்பை ஏற்றுக் கொண்ட நயமான எளிமையே அதிகம் தெரிந்தது.

மழலை முதல் மணிவிழா வரை



ஆயிரம் ஆயிரம் பள்ளிகளும், கல்லூரிகளும் போதிக்க முடியாத பல அரிய பண்புகளை அநாயாசமாக மக்களுக்கு எளிதில் உணர்த்துவது நாடகம்.

"கண்ணைச் செவியைக் கருத்தைக் கவர்ந்து நமக்(கு)
எண்ணரிய போதனைகள் ஈவதற்கு-நண்ணுமிந்த
நாடகச் சாலையொத்த நல்ல கலாசாலை யொன்று
நீடுலகில் உண்டோ நிகழ்த்து"

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களின் இந்தக் கவிதையைப் படித்ததும், நதியென்றால் கங்கை, மலையென்றால் இமயம், கவிதையென்றால் கம்பன் என்பதுபோல், நாடகம் என்றால் டி. கே. எஸ். சகோதரர்களின் நினைவுதான் வரும். இதிகாச, புராண, சமூக நாடகங்களை அரங்கேற்றித் தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் அரைநூற்றாண்டுக்கு மேல் புகழ்பெற்று விளங்கும் நாடகக் கலைஞர்கள் அவர்கள்.



அவர்களுள் திரு டி. கே. சண்முகம் அவர்கள் இவ்வாண்டு அறுபதாண்டு நிறைவை எய்தியிருக்கிறார். 26–4–72 அன்று அவருக்கு மணிவிழா நடைபெற விருக்கிறது. தமது ஆறு வது வயதிலிருந்து நாடக அரங்கில் ஏறி நடித்து நல்ல அநுபவம் பெற்றவர் அவர். தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் அவர்களை ஆசிரியராகக் கொண்ட மதுரை தத்துவமீனலோசனி வித்வ பால சபையில் சேர்ந்த திரு சண்முகம் அந்தச் சிறு வயதிலேயே நாரதர், அபிமன்யு, மனோகரன் முதலிய பல வேடங்களில் நடித்தார். 1925–ம் ஆண்டு சகோதரர்களின் சொந்த நாடகக் குழு தொடங்கியது. அது பிற்காலத்தில், டி. கே. எஸ். நாடக சபை என்னும் பெயருடன் மிகப் பிரசித்தியடைந்துவிட்டது.

இந்தக் குழுவினர் நாடகக் கலைக்குச் சேவை செய்தனர் என்று கூறுவதைவிட, நாடகக் கலையைச் செப்பனிட்டு அதற்குப் புத்துயிரும் புது வாழ்வும், அந்தஸ்தும் நல்கினர் என்று கூறுவது பொருத்தமானதாகும். டி.கே.எஸ். நாடகக் குழு "சம்பூர்ண ராமாயணம்", "மகாபாரதம்", "கந்தலீலா", "கிருஷ்ண லீலா", "வேலீலா" போன்ற இதிகாச, புராண நாடகங்களை அரங்கேற்றிப் பூரண ஞானம் பொலிந்த நன்னாடாகிய பாரதத்தின் பண்டைப் பெருமையை, கலாச்சாரத்தை மக்களிடையே விளக்கி வந்தது.

இடைக்காலத்தில் நாடகக் கலைக்கு ஏற்பட்டிருந்த இழிநிலையைப் போக்கி அந்தக் கலையை



1. "அவ்வையார்" நாடகத்தில்.

2. கல்கியின் "கள்வனின் காதலி" நாடகத்தில்.

3. "ராஜராஜ சோழன்" நாடகத்தில்.

அட்டைப்படத்தில்:
மேடையேறி மழலை பேசிய டி. கே. ஷண்முகமும் மணிவிழாக் காணும் டி. கே. ஷண்முகமும்.

அரியணையில் ஏற்றி வைத்த பெருமையில் டி. கே. எஸ். நாடகக் குழுவுக்கு என்றும் ஒரு தனிப் பங்கு உண்டு. இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில், இக்குழுவினர் நடத்திய சில நாடகங்கள் மக்களிடையே சுதந்திர உணர்ச்சியை எழுப்பி வீறுகொண்டு எழச் செய்தன. இந்நாடகங்களுக்கு அக்காலத்துப் பிரிட்டிஷ் அரசினிடமிருந்து பேராதரவு கிடைத்தது ! அதாவது, மேற்படி நாடகங்களுக்குத் தடை உத்தரவு போடப்பட்டது. அதுவே அந்நாடகங்களுக்கு நல்ல விளம்பரமாக அமைந்தது !

டி. கே. எஸ். நாடகக் குழுவினரின் தமிழ்த் தொண்டுக்கு மேலாக அவர்கள் தமிழ் எழுத்தாளர்களுக்குச் செய்திருக்கும் உதவி மேலானது. அவர்களுடைய புதுமையான பல நாடகங்களின் மூலமாகப் பல புது எழுத்தாளர்கள் நமக்கு அறிமுகமாகி யிருக்கின்றனர்.

தொடக்கத்திலிருந்தே திரு சண்முகம் தனியாகச் சுடர்விட்டுப் பிரகாசிக்கலானார். ''அந்தமான் கைதி'', ''முள்ளில் ரோஜா'', ''குமாஸ்தாவின் பெண்'', ''மனிதன்'', ''கள்வனின் காதலி'', ''உயிரோவியம்'', ''இரத்த பாசம்'', ''எது வாழ்வு?'' முதலிய சமுதாய முற்போக்கு நாடகங்களின் மூலம் தமிழ் மக்களின் இதயங்களில் அவர் இடம் பெற்றுவிட்டார். குழுவின் நாடகங்கள் எதிலும் அவர் பிரதான பங்கு ஏற்காத நாடகமே இல்லை. 1918ம் ஆண்டிலிருந்து ஓய்வு ஒழிவு இல்லாமல் நாடகங்களில் நடித்த திரு சண்முகம், ஐம்பத்துநாலு ஆண்டுகள் நாடகக் கலையின் வளர்ச்சிக்கும், வளமைக்காகவுமே வாழ்ந்து வந்திருக்கிறார். அவர் வாழ்வில் இது அரிய சாதனை என்பது மட்டும் அல்லாமல், நாடகக் கலையின் வாழ்விலும் மகத்தான சாதனைதான்.

இலங்கை, மலேசியா ஆகிய வெளிநாடுகளுக்கும், தில்லி, கல்கத்தா, பம்பாய், நாகபுரி போன்ற பிற மாநில நகரங்களுக்கும் திரு சண்முகம் தம் குழுவினருடன் சென்று தமிழ் நாடகக் கலையின் பெருமையையும், தமிழ் மொழியின் மாட்சியையும் வெளிப்படுத்தி வெற்றிக்கொடி நாட்டியுள்ளார்.

டி. கே. எஸ். நாடக நிறுவனத்தில் நூறு நடிகர்களைக் கொண்ட பெருங்குழு மட்டுமின்றி சீன் இழுப்பவர்கள், செட் அமைப்பவர்கள், டிக்கெட் விற்பனையாளர்கள், டிக்கட் பரிசோதகர்கள் ஆகியோரும் உண்டு.

திரு டி.கே. சங்கரன், திரு டி.கே. பகவதி ஆகியோரது நிர்வாகத்தின் கீழ் குழுவின் அங்கத்தினர்களான அனைவரும் பரிபூரண ஒத்துழைப்பு அளித்ததனால் எந்த நாடகக் குழுவுக்கும் இல்லாத மதிப்பும், கௌரவமும் இந்த நாடகக் குழுவுக்கு இருந்தன.

'' 'அவ்வையார்' நாடகத்தில் கதாநாயகி கிழவி; காதலுக்கு வழியில்லை ; கதாநாயகனுக்கும் இடமில்லை. நீங்கள் அதை அரங்கேற்ற முன்வந்தது மிகவும் துணிச்சலான செயல் என்றுதான் கூற வேண்டும்'' என்று திரு சண்முகத்திடம் கூறினேன்.

''அந்த நாடகம் ஆரம்பத்தில் பல முறை நடத்தியும் வசூல் ஆகவில்லை. பத்திரிகை விமரிசனங்கள் தான் அந்நாடகத்துக்குப் புத்துயிரும், புது வாழ்வும் தந்து ஒரு வெற்றி நாடகமாக்கி விட்டன. பத்திரிகையாளர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாகப் பேராசிரியர் கல்கி அவர்களின் அந்நாடகத்தைப் பற்றிய விமரிசனத்துக்கு என் நன்றி என்றும் உரியது '' என்றார் திரு தி. க. சண்முகம்.

பேராசிரியர் கல்கி அவர்கள் 'அவ்வையார்' நாடகத்தைப் பற்றி 3–6–45 'கல்கி' இதழில் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :

'' இந்த நாடகத்தைப் பார்த்து வந்த போதும் அதன் முடிவிலும் எனக்கு என்ன தோன்றியதென்றால், நம் கையில் மட்டும் அரசாங்க அதிகாரம் இருந்தால் இந்த நாடகக் கம்பெனியையும் இந்த 'அவ்வையார்' நாடகத்தையும் உடனே நாட்டின் பொதுவுடைமையாக்கிவிட வேண்டும். தமிழ் நாட்டில் உள்ள எல்லாக் குழந்தைகளும் இந்த நாடகத்தைப் பார்த்துவிட வேண்டும். ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை பார்த்துவிட வேண்டும். பள்ளிக்கூடத்தில் எத்தனை வருஷங்கள் படித்தாலும் அடைய முடியாத லாபத்தை நம் குழந்தைகள் அடைந்துவிடுவார்கள். பழந் தமிழ் நாட்டின் பண்பாடு எத்தகையது என்பதை அவர்கள் நன்கு அறிந்து கொண்டுவிடுவார்கள். இதைக் காட்டிலும் நமது குழந்தைகளுக்கு நாம் செய்யக்கூடிய நன்மை வேறு என்ன இருக்கிறது.....?''

'' 'அவ்வையார்' வெற்றி நாடகமாக அமைந்ததோடு அல்லாமல், உங்களுக்கு 'அவ்வை சண்முகம்' என்ற சிறப்புப் பெயரையும் பெற்றுத் தந்துவிட்டதே !'' என்றேன்.

'' உண்மைதான். 1944ல் நடைபெற்ற நாடகக் கலை மகாநாட்டின் சார்பில் ஸர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் அளித்த சிறப்புப் பட்டம் அது. ஆனால், அந்த நாடகத்தைத் தொடர்ந்து நடத்த முடியாமல் எனக்கு ஒரு சிரமம் ஏற்பட்டது. அவ்வையாராக நடிக்கும்போது சுமார் மூன்று மணி நேரம் கூன் முதுகோடு நடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்னைப் பாதித்துவிட்டது. தொடர்ந்து அந்த நாடகத்தை நடத்தவே எனக்கு முதுகில் வலி கண்டுவிட்டது. டாக்டரின் யோசனைப்படி அவ்வையாராக நடிப்பதை நிறுத்திக் கொள்ள நேர்ந்தது. இல்லையென்றால் அந்த நாடகம் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கும். அத்தனை ஆதரவு இருந்தது அந்நாடகத்துக்கு.....'' என்று திரு சண்முகம் பெருமிதத்துடன் கூறினார்.

முதன் முதலில் நாடகங்களுக்கு (சினிமாப் பாட்டுப் புத்தகம் மாதிரி) பாட்டுப் புத்தகம் வெளியிட்ட பெருமை டி. கே. எஸ். நாடக சபாவையே சாரும். அவர்கள் நடித்த நாடகங்களையும் புத்தகங்களாக வெளியிட்டிருக்கின்றனர்.

பேராசிரியர் கல்கி அவர்களின் 'கள்வனின் காதலி'யை மூலக் கதையின் சுவை சிறிதும் குன்றாமல் வெற்றிகரமாக அரங்கேற்றிய டி. கே. எஸ். நாடகக் குழு ''சிவகாமியின் சபதம்'', ''இராஜராஜசோழன்'', ''தமிழ்ச் செல்வம்'', ''இமயத்தில் நாம்'', ''முதல்

முழக்கம்'', ''தேசபக்தர் சிதம்பரனார்'', ''அமைச்சர் மதுரகவி'' முதலிய வரலாற்று நாடகங்களையும் நடத்தி வெற்றி வாகை சூடியது. வேறு எந்த நாடகக் குழுவினரும் முழுவதும் குழந்தை நடிகர்களைக் கொண்டு குழந்தைகளுக்காகவே நாடகம் நடத்தியதில்லை. டி. கே. எஸ். நாடக சபை பாரத நாட்டில் முதன்முறையாக வேறு எந்த மாநிலத்திலும் நடைபெற்றிராத முறையில் ''அப்பாவின் ஆசை'', ''பலாப் பழம்'' என்னும் குழந்தைகளுக்கான நாடகங்களை நடத்திப் பாராட்டைப் பெற்றுள்ளது.

1950ம் ஆண்டு பாலசண்முகானந்த சபா என்ற தங்கள் நாடகக் குழுவுக்கு மிகவும் சிறப்பான முறையில் டி. கே. எஸ். சகோதரர்கள் மூடுவிழா நடத்தினர். திறப்பு விழா என்று பெரிதாகச் செய்வதைத்தான் நாம் பார்த்திருக்கிறோம். ஏதாவது ஒரு நிறுவனத்தை மூடுவதா யிருந்தால், அதிகமாகப் 'பப்ளிசிடி' கொடுக்காமல் மூடுமந்திரமாகவே மூடி விடுவார்கள்! இந்த மூடு விழாவிலும் முதன்மையாக நின்றவர்கள் இவர்கள்தான். மூடுவிழாவுக்குக் காரணம், அதைக் கட்டிக் காக்க முடியாத நிலைதான். ஆனால், அதற்குப் பிறகும், பல ஸ்பெஷல் நாடகங்கள் அவ்வப்போது நடத்திக் கொண்டுதான் இருந்தனர்.

'' எத்தனையோ மேடைகளில் நாடகங்கள் நடத்தியதில் அநுபவங்கள் பல ஏற்பட்டிருக்குமே, உங்களுக்கு?'' என்று கேட்டேன்.

''ஆமாம். நிறைய ஏற்பட்டிருக்கின்றன. எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். ஒரு முறை ''வள்ளித் திருமணம்'' நாடகம் நடத்தினோம். காட்டில் வள்ளியைப் பயமுறுத்த யானையை அழைக்கும் கட்டம். வள்ளி தம்மை மணக்க இசைந்ததும் கிழவர் (முருகன்) அந்த யானையைப் போகச் சொல்கிறார். யானை போகவில்லை. காரணம் அதனால் போக முடியவில்லை. யானைக்குள்ளிருந்து இயக்கும் ஆட்கள் அதை அரங்கத்துள் கொண்டு வந்த போது ஒருவாறு ஒருவர்பின் ஒருவராக வந்து சமாளித்துவிட்டனர். ஆனால் அரங்கத்தை விட்டுப் பின்வாங்கிப் போகும் போது அப்படிப் போக முடியவில்லை. அது ஒரு ஹாஸ்யக் காட்சியாக மாறிவிட்டது '' என்று சிரித்துக்கொண்டே கூறினார்.

ஒரு சமயம் '' உயிரோவியம் '' நாடகம் நடத்திக் கொண்டிருந்த போது இவர்கள் குழுவைச் சேர்ந்த நடிகை எம்.எஸ். திரௌபதிக்கு ஒரு விபத்து நேர்ந்துவிட்டது. நாடகம் நடந்துகொண் டிருந்தபோது அந்த நடிகை அரங்கிலிருந்து உள்ளே வேகமாக ஓடிப்போகவேண்டிய கட்டம்; அவர் ஓடினார். அதே சமயம் அவர் வந்ததைக் கவனியாது எதிரே ஒரு நாற்காலியுடன் ஓர் ஊழியர் வந்தார். அந்த நாற்காலி திரௌபதியின் தலையில் பட்டுப் படுகாயம் உண்டாகிவிட்டது. ரத்தம் கொட்டக் கீழே சாய்ந்த அவரை சண்முகம் தாங்கிக் கொண்டார்; இந்நிலையில் தொடர்ந்து நாடகம் நடத்த முடியாது என்கிற விவரத்தை ரத்தக் கறை படிந்த உடையுடன் மேடையில் வந்து தெரிவித்தார். அதே டிக்கெட்டுடன் இன்னொரு நாள் நாடகத்துக்கு வரலாம் என்பதையும் சொன்னார். பெருங் கூட்டமாகக் கூடியிருந்த மக்கள் அவர் வார்த்தைக்குச் செவி சாய்த்து அமைதியாகக் கலைந்து சென்றனர். '' நம் ரசிகப் பெருமக்களின் பண்புள்ளம் என் நெஞ்சை நெகிழ்த்திவிட்டது.....'' என்றார் அச்சம்பவத்தை நினைவுகூர்ந்த திரு ஷண்முகம்.

'' எங்கள் நாடகங்கள் எல்லாமே நூறு நாட்களுக்கு மேல் நடத்தப்பட்டவைதாம். ஆனால் 'கவி காளமேகம்' நாடகம் மட்டும் அதற்கு விதிவிலக்கு. ஒரே ஒரு தடவைதான் நடந்தது'' என்று கூறிய பகவதி காரணத்தை விளக்கினார். ''அந்த நாடகத்தின் கடைசிக் காட்சியில், காளமேகப் புலவரின் சாபத்துக்கு ஏற்ப மண்மாரி பெய்யும் கட்டத்தில், ஓர் உத்தி கையாளப்பட்டது. மரத் தூள் மூட்டைகளை நாடக மேடைக்கு மேல் ஏற்றி, அங்கிருந்து மரத் தூளைத் தூவி மின்விசிறியின் உதவியினால் மண்மாரி போலப் பரப்ப வேண்டும் என ஏற்பாடு. ஆனால் மரத் தூள் மேடையில் மட்டுமின்றி ரசிகப் பெருமக்கள் கூட்டத்திலும் பரவி ஏககாலத்தில், இருமலையும், தும்மலையும் கிளப்பிவிட்டது. அதற்குப் பிறகு அந்த நாடகம் நடத்தப்படவில்லை....!'' என்றார் பகவதி.

திரு சண்முகத்தின் பெரும் முயற்சியால் நாடகக் கழகம் என்னும் நிறுவனம் 1950ல் தோற்றுவிக்கப்பட்டது . அதன் தலைவராக இரண்டாண்டுகள் இவர் பணிபுரிந்தார். திரு சண்முகம் தலைவராக இருந்த காலத்தில் தான் நாடகங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. திரு சண்முகம் தமிழ் நாடு சங்கீத நாடக சங்கம், மத்திய சங்கீத நாடக அகாடமி ஆகிய நிறுவனங்களின் செயற்குழுவில் உறுப்பினராக இருந்திருக்கிறார்.

கோலாலம்பூரில் நடந்த முதலாவது உலகத் தமிழ் மகாநாட்டில், தமிழ் நாடகக் கலைஞர்களின் பிரதிநிதியாக இவர் கலந்துகொண்டு தமிழ் நாடக வரலாற்றினைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரையை வழங்கினார்; 1968ல் தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

திரு சண்முகம் கலைப் பணி, பொதுப் பணி இரண்டிலும் பங்குபற்றித் தொண்டாற்றி வருபவர். தில்லி மத்திய சங்கீத நாடக அகாடமியின் சார்பாக முன்னாள் ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் 1962ல் தமிழ் நாட்டின் சிறந்த நாடக நடிகர் என்ற பட்டத்தைத் திரு சண்முகத்துக்கு வழங்கினார்; 1971 குடியரசு தினத்தில் ஜனாதிபதி வி. வி. கிரியிடம் ''பத்மஸ்ரீ'' என்னும் விருதைப் பெற்றிருக்கிறார்.

நட்புக்குகந்த நல்ல மனிதரான இவ்விரு சண்முகம் பண்பின் உறைவிடமாகத் திகழ்பவர்; பழகுவதற்கு மிகவும் இனியவர்; தன்னடக்கம் மிகுந்தவர்.

மழலை பேசும் மதலைப் பிராயத்தில் மேடையேறி நடித்த திரு சண்முகம் மணிவிழா நடைபெறும் இந்நாள் வரையில் நாடகக் கலைக்கு அயராது தொண்டாற்றி வந்திருக்கிறார். மணிவிழாவுக்குப் பாராட்டுத் தெரிவிப்பதோடு, இன்னும் இவர் பல்லாண்டு நோயற்ற வாழ்வு வாழ்ந்து நாட்டுக்கு உகந்த நல்ல பல தொண்டுகளைப் புரிய அருளுமாறு குன்றுதோறாடும் குமரப் பெருமானைப் பிரார்த்திப்போம்.

- கார்த்தன்



நகைச் சுவைக் கதை. 2

பைரவர் புராணம்

• நீலன் •

காலை மணி ஒன்பது நாற்பது. அவசர அவசரமாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே 'கேட்டை'த் திறந்துகொண்டு யாரோ வரும் சத்தம் கேட்கவே, என் தாயார் அடுப்படியை விட்டு வெளியே வந்தார்.

வாய்க்கு ருசியாய்ச் சாப்பிடும் வாய்ப்புக் கிட்டுவதே அரிது. அதுவும் இப்படி அபூர்வமாய் ரசித்துச் சாப்பிடும்போது வந்தது யாராயிருக்கும் என்று யோசிக்கும் வேளையிலே...

நடுக் கூடத்தில் நான் மட்டுமே அமரும் ஈஸிசேரில் 'தொப்' என்று நெல் மூட்டையைக் கீழே போட்டாற் போல் யாரோ உட்காரும் சத்தமும், ''என்ன ஓய்! பலமான சாப்பாடா?'' என்ற கொழ கொழவென்ற குரலும் கேட்கவே வந்த எரிச்சலை அடக்கிக் கொண்டு, ''யார் வைத்தி சாரா...? உட்காருங்கோ... இதோ வந்துட்டேன்'' என்று கூறிவிட்டுப் பாதிச் சாப்பாட்டில் எழுந்துவிட்டேன். அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று என் ஈஸிசேரில் நான் யாரையுமே அமர இடம் தருவதில்லை; இரண்டு என் கடிதங்களைப் பக்கத்து ஷெல்பில் வைத்திருப்பேன். என்னதான் இருந்தாலும் எனக்கு வந்த கடிதங்களையெல்லாம் பிறர் படிக்க அனுமதிப்பதில்லை.

ஆனால் இவ்விரண்டும் வைத்தி விஷயத்தில் என்னால் கடைப்பிடிக்க முடியாதது என் தோல்விதான்.

மனிதர் வருகிறாரே, கொஞ்சமாவது நாசூக்குத் தெரிகிறதா? வயதுதான் ஆகிறது எதற்கோ ஆவது போல. வருவதுதான் வருகிறார், மெல்ல ஈஸிசேரில் உட்காரக் கூடாதா? கடிதங்களைத்தான் படித்துத் தொலைக்கிறாரே, அதைப் பற்றி என்னிடம் மட்டுமல்லாமல் எல்லோரிடமும் விமரிசிக்கவேண்டுமா என்ன?

இருந்த அருமையான பத்து வேலி இருபோக நன்செய் நிலத்தைத் 'தருமர் விளையாடிய' விளையாட்டில் தீர்த்துக் கட்டிவிட்டார். மேஷ ராசிக்காரர் ஆதலால் கவுளிக் கணக்கில் தழை மேய்வது போல வெற்றிலைசீவல், கூடவே பிரம்ம பத்திரம். முன்னெல்லாம் அவர் வெற்றிலைபெட்டியைத் தூக்கிக் கொண்டு வர ஓர் அரை டிக்கட்டை வேலைக்கு வைத்திருந்தார். சதா வாய் அசை போடும். எதிரில் ஆள் அகப்பட்டு, அவர் பேச ஆரம்பித்தால் போச்சு. ஒன்று வெற்றிலை ஸ்டாக் தீர வேண்டும், இல்லை எதிராளியே தைரியமாய் நழுவிவிட வேண்டும். அப்படி மீண்டு வரும் ஆளைப் பார்த்தால் யாரையோ கொலை செய்துவிட்டு வரும் மருட்சி முகத்தில் காணப்படுவதுடன் சட்டையெல்லாம் ரத்தக் கறை போல வெற்றிலைக் கறைபட்ட கோலத்தையும் காணலாம்.

அதனால்தானோ என்னவோ வைத்தி பேச்சைக் கேட்டவர்கள், 'என்னமா சார் மனுஷன் கும்மா அருவி மாதிரி கொட்றார்!' என்கிறார்கள். போகட்டும், விஷயத்துக்கு வருகிறேன்.

இந்த வைத்தி சார் எனக்குத் தூரத்து உறவினர். இருந்தாலும் அவருக்கு உறவை விட நட்புத்தான் விசேஷம். வயதானவர் வேறு.

பல விஷயங்களைக் கதை போலக் கூறுவார். இப்படித் திடீர் திடீர் என நான் வேண்டிக் கொள்ளாமலே கடவுள் போலக் காட்சி தருவார். அல்லது அரசாங்கப் புதுப் புது வரி போலத் தோன்றுவார்!



கிராமத்திலே என்னிடம் உள்ள கொஞ்சம் நிலத்தை அவர்தான் மேற்பார்வையிட்டு வருகிறார். ஆகவே பாம்பின் வாய்த் தவளை போல அவருக்கு நான் கட்டுப்பட்டவன். வேறு வழியின்றிப் பக்கத்து வீட்டு நண்பரிடம் ஆபீசுக்கு லீவு எழுதிக் கொடுத்துவிட்டு அவர் முன் அமர்ந்தேன். நண்பர் கிண்டலாக ''லீவு இன்று மட்டுமா? இல்லை, ஒரு வாரம் லீவா?'' என்று கூறிக்கொண்டே சென்றுவிட்டார்.

குளியலறைப் பக்கம் சென்று அரை அண்டா தண்ணீரில் வாயைக் கொப்பளித்து, சுவரில் சிவப்புச் சாயம் பூசிவிட்டுப் பழையபடி, ஈஸிசேரில் வந்தமர்ந்து சாவதானமாய் வெற்றிலை பெட்டியைத் திறந்தார் வைத்தி. பிரபல கலைஞனின் நளினத்துடன் கச்சேரியை ஆரம்பித்தார். ஆம்!



வெற்றிலை, சுண்ணாம்பு, சீவல்... சிறிது இடைவெளி. புகையிலை... (பன்னீர் ஸ்பெஷல்.)

வாயில் கூடிய கலவையுடன் சற்றுக் கழுத்தைத் தூக்கிக் கொண்டு பேச ஆரம்பித்தார். எதற்கும் முன் எச்சரிக்கையாகப் பழைய துண்டை எடுத்துப் போர்த்திக் கொண்டேன்.

''என்ன ஓய்...! நம்ம குப்புசாமி (யின்) நாய் இருக்கிறதே...?'' (அதனுடைய புராணம்தான் இனித் தொடர்கிறது... இடை இடையே வெற்றிலை சீவல் தனி ஆவர்த்தனம்..... உங்களுடன் நானும் அவர் புராணத்தைக் கேட்கிறேன். சத்தம் போடாமல் கேளுங்கள். ஏனெனில் அவருக்குத் துளிச் சத்தமும் பிடிக்காது.)

குப்புசாமி வைத்தாவின் ஊரிலிருக்கும் புதிய காலனியில் உள்ள பிரபல அரசாங்க அதிகாரி...பெரிய சம்சாரி... கல்யாணத்துக்குத் தயாராயிருக்கும் மூன்று பெண்கள்; பள்ளியில் படிக்கும் இரண்டு பொடியன்கள்... நிறையச் சம்பளம். கவலையற்றவர். அந்தக் காலனியிலுள்ள ''நல் வாழ்வு சங்க''த்தின் தலைவர். வீட்டைப் பற்றிக் கவலைப் படாது சதா சுற்றிக் கொண்டிருக்கும் கவலையற்ற ஆத்மா. நல்லவர் தான்; ஆனால் மனிதர் சமய சந்தர்ப்பம் தெரியாமல் 'இரவு' நேரத்தில் பேச ஆரம்பித்தாரென்றால்.... போதும் சினிமா இரண்டாம் காட்சி முடிந்து, விடியற்காலை பால்காரன் வந்து மணி அடிக்கும் வரையில் ஓயமாட்டார்.

எல்லோர் வீட்டு அடுப்படிவரை உரிமையுடன் நுழைந்து ஆண் பெண் பேதமில்லாமல் மனிதர் பேச ஆரம்பித்து விட்டால் போச்சு. அறுத்துத் தள்ளிவிடுவார். 'டிம்பர் டிப்போ' வைத்து விடலாம். இதற்காகவே அவருக்கு ''ஆக்சா பிளேடு'' ''அறுவை மன்னன்'' எனப் பட்டங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. விஞ்ஞானம் முதல் மெய்ஞானம்வரை அவர் பேசி, அலசி, துவைத்துக் காயப் போடாத 'சப்ஜெக்டே' இல்லை. அப்படிப்பட்டவருக்கு இப்படிப்பட்ட ஆசை வர வேண்டாம். ஆனால் விதி யாரை விட்டது?



வேறு ஒன்றுமில்லை. அவருக்குச் சும்மா வெளியே சுற்றுவது பிடிக்கவில்லை. அவர் கூடத் தொடர்ந்து பேசிக் கொண்டே வர வேறு எந்த ஆளும் கிடைக்கவில்லை. அவரைப் பார்ப்பவர்கள்தான் 'மில்கா சிங்கை' விட வேகமாக ஓடுகிறார்களே! ஆகவே—

ஒரு நல்ல நாளில் பிரபல நாடி ஜோதிடரிடம் பலன் பார்த்துவிட்டு நல்ல முகூர்த்தத்தில் ஒரு நாய்க் குட்டியைக் கொண்டு வந்தார். அல்சேஷன், கோம்பை, ராஜபாளையம்...இத்தியாதி வகைகளில் சேராத ஒரு சாதாரணத் தெரு — குப்பைத் தொட்டி நாய்க்குட்டிதான் அது.

இதைக் கொண்டுவந்த அன்றைக்கு அவர் வீட்டில் தடபுடலாக, வடை பாயசத்துடன் சாப்பாடு. ஒரு மணி நேரம் தாமதமாய் அது வலகம் போய்ச் சேர்ந்தார். தினமுமே அவர் அப்படிச் செல்வதால் யாரும் விசேஷமாய்க் கவனிக்கவில்லை; கேட்கவில்லை.

அவருக்கு அன்று ஏக குஷி. ஆபீசை விட்டு மாலை மூன்று மணிக்கே டவுனுக்குக் கிளம்பி விட்டார்.

ஒவ்வொரு கடையாக நுழைந்து நல்ல செயின் ஒன்றும், மூன்று டின் ஜெம் பிஸ்கட்டும், இரண்டு சித்தால் சோப்பும் (அவருக்கல்ல; நாய்க்குத்தான்!) பழைய சாமான் கடைக்குச் சென்று இரண்டு 'டில்லி மோடா'வும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினார்.

வந்தவுடன் தாம் வாங்கிய செயினை அந்த நாய்க்குட்டியின் கழுத்தில் கட்டிவிட்டார். பிஸ்கட்டை எடுத்து நாயிடம் போட்டார். அது பாவம் முன்னே பின்னே பிஸ்கட்டை என்ன கண்டது? முகர்ந்து பார்த்து விட்டுப் பயந்தவாறு ''வள்.....வள்'' என்று கீச்சுக் குரலில் பலமாய்க் குரைத்துப் பின்வாங்கியது. வேறு வழியின்றி அதற்குப் போட்ட பிஸ்கட்டில் பாதியைத் தாமே தின்று காண்பித்தார். அதன் பிறகே அது சற்றுத் துணிச்சலுடன் அவர் கைப்பக்கம் தாவியது.

அதற்குப் பிறகு அவரையும் நாயையும் தனித் தனியே பார்க்கவே முடியவில்லை. நகமும் சதையும் போல ஆகிவிட்டனர். டில்லி மோடாவைத் திருப்பிப் போட்டு அதில் வீட்டிலுள்ள புடவை, தாவணி, வேட்டி எல்லாவற்றையும் ஒழுங்காய்த் திணித்து, மெத்தை போலச் செய்து, அதில்தான் நாயைப் படுக்க விடுவார். சில சமயம் தாலாட்டுக்கூடப் பாடுவார். இவர் பாட்டுக்குப் பயந்தே நாய் தூங்கிவிடும்! சில சமயம் இரவு முழுதும் கண் விழித்து அதற்கும் தம் வீட்டுக்கும் அவரே காவல் இருக்கலானார். வீட்டில் உள்ளவர்களும் அதனிடம் அவ்வளவு நேசம் வைத்தனர். அதனிடம் ஆங்கிலத்தில்தான் பேசுவார். பூஜை அறைவரை அதற்கு நுழைய அனுமதி உண்டு. ஏனெனில் அது 'பைரவர்' ஆயிற்றே!

இவர் போட்ட தீனியில் (எல்லாம் சைவம் தான்) அது காற்று அடித்த பலூன் மாதிரி ஒரு சுற்றுப் பருத்து விட்டது. அதற்குச் சோதிடரிடம் கேட்டுத்தான் 'கண்ணு' என்று பெயரிட்டார். இந்த நாமகரணம் — பெயர் சூட்டு விழாவுக்கு — அவரது காரியாலய நண்பர்கள் வேறு வந்திருந்தனர்.

கழுத்துப் பட்டை கட்டாமல் வெறும் சங்கிலியால் கட்டியதால் அந்த நாய்க்குக் கழுத்தெல்லாம் ரணமாகி விடவே, சங்கிலியைக் கழற்றித் தூர எறிந்து விட்டார். ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெய் வாங்கி அதன் கழுத்தில் அபிஷேகம் செய்தார். புண் ஆறவேண்டுமே, அதற்குத்தான்.

நாயைக் கட்டிப்போடாததால் திடீரென்று இரண்டு நாட்கள் அது எங்கோ ஓடிவிட்டது. குப்புசாமி பதறித் துடித்து விட்டார். ஊரில் ஆருடம் பார்ப்பவர்கள் ஒருவர்கூட விட்டு வைக்கப்படவில்லை. அத்தனை பேரும் இவர் கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்டு ஒவ்வொன்றைச் சொன்னார்கள். ''பணம் காணாமல் போயிருக்கும் சார்'', ''எருமை அல்லது பசு காணாமல் போயிருக்கும்... வடக்கே எட்டு மைல் தொலைவில் புல் மேய்ந்து கொண்டிருக்கிறது. (மாடு புல்லை அல்லாது வேறு எதை மேயும்?) வந்துவிடும்'', ''சங்கிலி காணாமல் போய்விட்டது. கிடைக்காது...'', ''வெந்நீர்த் தவலையைக் காக்காய் கொண்டு போயிருக்கும். கொண்டு வந்து இருந்த இடத்திலேயே வைத்து விடும்... கொஞ்சம் செலவாகும். ரொம்ப இல்லை... நூறு ரூபாய் ஹோமம் செய்து எலுமிச்சம் பழம் மந்திரித்தால் போதும்... அப்படியே கதறிக் கொண்டு வரும்...'' இப்படியெல்லாம் சொல்லவே, குப்புசாமிக்குச் சந்தேகம் வந்து விட்டது-தொலைந்தது எதுவென்று!

கிளைக் கதை

(புராணம் என்றால் கிளைக் கதை அவசியம் இருக்க வேண்டுமல்லவா?... வைத்தி இதையும் கூறினார்.)

எங்கள் கிராமத்தில் வைத்தியிடம் அவர் நண்பர் வெகு ஜம்பமாக மாடும் கன்றும் ஓட்டி வருவதாகக் கூறிவிட்டு ஒரு வெள்ளியன்று கிளம்பினாராம்.

சனிக்கிழமை அவர் வீட்டு வாசலில் பெரிய கும்பலே சேர்ந்து விட்டதாம். முதலில் அன்று விடியற்காலை அவர் வீட்டு வேலைக்காரி சாணம் தெளிக்க வந்தவள், வாசலில் ஏதோ கட்டியிருப்பதை அரை இருட்டில் பார்த்துவிட்டு 'ஐய்யோ முறையோ' என்று அலறியவாறு விழுந்தடித்துக்கொண்டு ஓடினாள். எல்லோர் வீட்டிலிருந்தும் ஒவ்வொருவராய் வெளியே வந்து விசாரிக்கத் தொடங்கினர். இதற்குள் பொழுது விடிந்து விட்டது. திருவிழாக் காலங்களில் கூடாரம் போட்டுத் திரை கட்டிக் காட்டும் அதிசயப் பிராணியைக் காணச் செல்லும் கூட்டம் போல ஊரே திரண்டு வந்து விட்டது.

வைத்திக்குச் சமாசாரம் காதில் எட்டவே விரைந்து ஓடிவந்து, 'அபிமன்யூ வியூகத்தைப் பிளந்தது'போல் கூட்டத்தைப் பிளந்து எட்டிப் பார்த்தார். முதலில் திகைத்துவிட்டுப் பிறகு, ஏதோ நினைவுக்கு வந்தவராய் முதல் நாள் அந்த வீட்டுக்காரர் சந்தைக்குச் சென்று மாட்டையும் கன்றையும் ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறார், அவைதாம் இவை என்று அடித்துச் சொன்னதும் கும்பல் சற்றுக் கலையலாமா வேண்டாமா என்று யோசித்தது.

பாறை போன்ற தசையுரம்

காப்பி சாப்பிடும் நேரத்திற்குள் கட்டுடல் அமைக்கட்டும் புல்ஒர்க்கர்: இரும்புக் கரங்கள், பரந்த தோள்கள், வலுவான கால்கள், ஆண்மை திகழும் அகன்ற மார்பு...உங்களுக்கே. உத்தரவாதமான பலன்கள், நிலைக் கண்ணாடியே புலப்படுத்தும்—இல்லையேல், பரிட்சை பார்த்திட்ட செலவு உமக்கில்லை.



கண்டுகொள்வீர்கள் செயலிலே.

தினமும் 5 நிமிடங்கள்தான் பயிற்சி, புல்ஒர்க்கர் உதவியோடு—அதிவிரைவில் நீங்களும் சம்பிடலாம் அதிக வலிமை, தாங்குதிறம், ஓங்கி உரமேறும் தசை வளர்ச்சி, தேய்வு தள்ளும் சக்தி. ஒரே வாரத்தில் 4 சதவிகிதம் தசைபலம் பெருகும்; 3 மாதங்களிலே அளவு மடங்கு அதிகரிக்கும். இரண்டே வாரங்களில்...கண்ணுக்குக் கண்டு அளவிட்டறியக்கூடிய பலன்கள்—சம்பூரணமாய் எந்தச் செலவும் உமக்கு இராது.

உலகத் தேர்வுகண்ட ஐஸோமெட்ரிக்-ஐஸோடோனிக் தத்துவங்கள்.

மேற்கு ஜெர்மனியிலுள்ள உலகுபுகழ் மாக்ஸ் ப்ளாங்க் இன்ஸ்டிட்யூட்டிலே நடந்த 10 ஆண்டுகால ஆராய்ச்சி, பரிசோதனைகளில் உருவான பயன்; கண்டிராத விந்தைக் கருவியாகிய புல்ஒர்க்கர். ஐஸோமெட்ரிக்-ஐஸோடோனிக் தத்துவங்கள் இரண்டும் இணைந்துள்ளது. எடுத்துச்செல்லத்தக்க இலேசான இந்த ஒற்றைக் கருவியிலே. ஒலிம்பிக் ஆட்டவீரர்களுக்கிணை உருப்பெற்ற இதன் உதவியால் எவருமே சக்தி செறிந்த கட்டுடலை அடைய முடியும்—ஆகாரத்திற்கு ஆவதைவிடக் குறைந்த நேரத்திலே.

எல்லா வயதினருக்குமே அற்புதப் பலன்கள்

"ஒரே மாதத்தில் அபாரமான முன்னேற்றம் கண்டேன். எடை 5.5 கிலோ ஏறியது. மார்பு 5.5 செமீ, மேல் கரங்களை 2.5 செமீ, தொடைகளை 5 செமீ, பின் கால்களை 3 செமீ பெருக்கினேன்". (எஸ்.ஏ., புது டெல்லி). "அபாரம்! இன்று நான் தெம்பும் திடமும் நிரம்பியவனாகத் திகழுகிறேன். புல்ஒர்க்கர் உபயோகிக்க நான் தீர்மானித்தது என் வாழ்விலேயே மிகச் சிறந்த செயல்". (ஜே. எம். ஆர்., செல்லம்). "எல்லாவற்றையும் பார்த்து விட்டேன், எதனிலும் சிறந்த பயிற்சிக் கருவி புல்ஒர்க்கர்". (கே. ஆர். வி., ஸ்வட்சாகர், ஆ.பி.). "என் வாழ்வில் தக்க தருணத்தில் உதவியதற்கு நன்றி. இன்று நீச்சல் குளத்திற்குப் போகும் வாய்ப்பு ஒன்றைக்கூட நான் விடுவதில்லை". (ஜே. என். தி., ஜலந்தர்.) "ஒரே மாதத்தில் மார்புக்கு 5.2 செமீ கூட்டிக்கொண்டு விட்டேன். புல்ஒர்க்கர் ஒரு அற்புதம்தான்". (டி.டி., கலிம்போங்).

இலவசப் புத்தகம்

நடைமுறைப் படங்களோடு படிப்படியாக விளக்கும் புல்ஒர்க்கர் பயிற்சிப் புத்தகம், சான்றேடுகள், முழு விவரங்கள் ஆகியவற்றை கட்டணமின்றி உடனடியாகப் பெற, இன்றே தபாலிடுங்கள் இக் கூப்பனை. இரண்டே வாரங்களில் அதிசய பலன்கள்.

இனாம்

இலவசப் புத்தகம் பெற இன்றே தபாலிடுக



பேஷாக, அன்றாட ஐந்தே நிமிடங்களில் கற்பாறை போன்ற தசை பலம் பெற வழி காட்டும் இலவசப் புத்தகத்தைச் சான்றேடுகள், விவரங்களோடு அனுப்புக.

KL 8

பெயர் ____________________

முகவரி ____________________

____________________ வயது ________

BULLWORKER SERVICE,
15 Mathew Road, Near Opera House, Bombay 4.
எமது முகவரியை ஆங்கிலத்தில் எழுதுக.

IND-61 1

கம்பெனி விலைக்கே ஸ்பென்ஸர் & கோ., லிமிடெட், 153, மவுண்ட் ரோடு, சென்னை-2ல் இப்பொழுது கிடைக்கிறது.

சட்டென்று வைத்தி தம் தோள் மீது இருந்த காசித் துண்டை எடுத்துக் கீழே போட்டு, அந்த வீட்டுக்காரரைப் பார்த்தார். உடனே "சாமி சத்தியமாய் இது நான் சந்தையில் நேற்று வாங்கிய மாடும் கன்றும்தான். வேறு பிராணி அல்ல... இது முருகன் மீது ஆணை" என்று சொல்லிக் கொண்டு ஆவேசம் வந்த கரக ஆட்டக்காரர்போல் அந்தத் துண்டின் இரு பக்கமும் மாறி மாறிக் குதிக்க ஆரம்பித்தார் வீட்டுக்காரர். கும்பல் இருந்த இடம் தெரியாது ஓடிவிட்டது. அவர் ஆட்டத்தின் லயத்தைப் பார்க்க வைத்திக்கே சுவாரசியமாய் இருந்தது.

இத்தனை ரகளையிலும் வெறும் சணல் கயிற்றினால் தூணில் பிடித்துக் கட்டிப் போட்டிருந்த அந்த இரு ஜீவன்களும் அறுத்துக் கொண்டு ஓடக்கூடத் தெம்பில்லாமல் நின்றன. பரிதாபப்பட்ட வைத்தி தம் வீட்டிலிருந்த இரண்டு கை வைக்கோலை அள்ளிக் கொண்டு வந்து அவைகளுக்கு முன் போட்டவுடன், உடனே அதன்மீது அவை ஜம்மென்று மெத்தை போலெண்ணிப் படுத்து விட்டன; உறங்கியும் விட்டன! பாவம், அவை வைக்கோலைப் பார்த்துப் பல ஆண்டுகள் ஆகி மறந்தே போய்விட்டன. சின்ன அல்சேஷன் போலிருந்த அந்தக் கன்றுக்குட்டி வைத்தியை மிகவும் கவர்ந்து விட்டது.

இந்த மாட்டு விவகாரத்தில் அதை வாங்கியவருக்கு உடனடியாக லாபம்! வேலைக்காரியை நிறுத்திவிட்டாராம். ஏனெனில் நடு வாசலில் கட்டிப் போடப்பட்ட மாடே சாணம் தெளித்துத் தினமும் மெழுகிவிடுகிறது! இரண்டாவது பார்க்கர் பேனா மூடி நிறைய பால் கறக்கிறது. இதை வைத்துக் கொண்டு அந்த ஊருக்கே பால் விநியோகம் செய்ய 'டிப்போ' திறக்கப்போவதாக அவர் சொல்லிக் கொண்டிருக்கிறாராம்!

இனிக் கதையை முடித்து மீண்டும் புராணக் கதையைத் தொடர்ந்தார் வைத்தி.

தொலைந்து போன நாய் இரண்டே நாட்களில் உருத் தெரியாமல் உருவமே மாறிப் போய்க் குப்புசாமியின் வீட்டு வாசலில் வந்து குரைத்தது. குரலை மாத்திரம் வைத்து இனம் கண்டு கொண்ட குப்புசாமி, சோகத் திரையைக் கிழித்தெறிந்து, ஆராய்ச்சி மணி கேட்டு ஓடிவந்த சோழ மன்னன் போல் வெளியே ஓடிவந்து அதை அப்படியே வாரி அணைத்து ஒரு சின்ன 'குச்சுப்புடி' நாட்டியமே ஆடிவிட்டார்.

வந்தது முதல் அந்த நாய் இரை எடுக்கவில்லை. சதா ஒரேயடியாய் ஊளையிட்டது. வால் தொங்கி, கண்களில் சிவப்புச் சாயம் ஏறித் தண்ணீரைக்கூடக் குடிக்கவில்லை. மெல்ல, மெல்ல யாரைப் பார்த்தாலும் தாவிக் குரைத்துக் கடிக்கப் போயிற்று.

பயந்துபோய்க் குப்புசாமி அதைத் தம் ஆபீஸ் அறையில் தள்ளி அடைத்து விட்டார்.

ஆபீஸிலும் அவருக்கு வேலை ஓடவில்லை. யாரைப் பார்த்தாலும் இதைப் பற்றியே விசாரிக்கலானார். ஆளுக்கு ஒன்றாய்க் கூறி அவரை மேலும் குழப்பி விட்டனர். பிறகு எல்லோரும் ஒரு முடிவாய் 'ஒருகால் நாய்க்கு வெறி பிடித்திருந்தாலும் இருக்கும். அதனால் தான் வால் தொங்கிப் போயிருக்கும்... தண்ணீர்கூடக் குடிப்பதில்லை' என்றனர். கடைசியாக அவ்வூர் மிருக வைத்தியரிடம் போய் யோசனை கேட்கவே அவர் "எதற்கும் நாயைக் கொண்டு வாருங்கள்... ஒருகால் ஏதாவது செத்த கழுதையைச் சாப்பிட்டிருக்கும். அதனால் வெறிபிடித்திருக்கலாம்" என்று சொல்லி விட்டார்.

அவரிடம் குப்புசாமி, "என் நாயைப் பார்க்காமலே எப்படி வெறி பிடித்திருக்கும் என்று சொல்லலாம்?" என்று சண்டைக்குப் போய் விடவே அவர் அமைதியாய் "நான் மிருகங்களுக்குத்தான் வைத்தியம் பார்க்க முடியும்! உங்களுக்கல்ல" என்று கூறிவிட்டுத் தம் வேலையைக் கவனிக்கலானார்.

கடைசியில் அந்த நாய் ஒன்றுமே சாப்பிடாமல் உண்ணாவிரதம் இருப்பதை அனுமதிக்க முடியாமலும், அதைப் பட்டினி போட்டுக் கொன்ற பாவம் தமக்குச் சேர வேண்டாம் என்று கருதியும் வேறு வழியின்றி நாய் பிடிப்பவனைக் கூப்பிட்டு அதனைக் கொண்டு போகச் சொல்லி விட்டார். அதற்காகப் பத்து ரூபாய் செலவு செய்தார்.

அவர் அன்று மாலை அலுவலகத்திலிருந்து வீடு திரும்பியதும் வீடே களையிழந்து காணப்பட்டது. பெரிய துக்க சம்பவம் நடந்தது போல வீட்டில் உள்ளவர்கள் தலை முழுகி விட்டு, வீட்டைக் கழுவிச் சுத்தம் செய்தனர். அந்த நாய் இருந்த அறையில் சிறிய அகல் விளக்கு ஏற்றிவிட்டு மூலைக்கு ஒருவராய்த் தலை குனிந்து உட்கார்ந்திருந்தனர். இதைக் காணச் சகியாமல் குப்புசாமி 'ஹோ' வெனக் கதறி அழுது விட்டார். யாருக்கு என்னவோ ஏதோ என அக்கம் பக்கத்திலுள்ள எல்லோரும் ஓடி வந்தனர்.

மறுநாள் அவர் காரியாலய மேல் அதிகாரி தம் காரிலேயே அவர் வீட்டுக்குத் தம் குடும்ப சமேதராய் வந்து துக்கம் விசாரித்துவிட்டு, அவர் இன்னும் பத்து நாட்கள் அலுவலகம் வரத் தேவையில்லை என்று கூறிச் சென்றார்.

அன்று மாலை நான்கு மணிக்கே நாய்க்கு மரியாதை தெரிவிப்பதுபோல அலுவலகத்தை விட்டு வெளியூர் போய்விட்டார் மேலதிகாரி. விவரம் புரியாத கீழதிகாரி காரியாலயத்தை மூடச் சொல்லி, "ஒரு மாமேதை இறந்து விட்டார். அவர்தம் சேவையைப் போற்றிப் பாராட்டுகிறேன். அவர் ஆத்மா சாந்தியடைய அலுவலகம் மூடப்பட்டது" என்று பிரசங்கம் செய்தார். அலுவலகச் சிப்பந்திகளுக்கு ஒன்றும் புரியவில்லை.... அவர் குறிப்பிட்ட மேதை போன வாரமே இறந்துவிட்டதாகச் செய்தி வந்து அலுவலகத்தை மூடியது அவர்களுக்கு நினைவு வந்தது. ஆயினும், "ஓஹோ... ஒருகால் அந்த மேதை இரண்டாம் முறை இறந்திருப்பார். யார் கண்டது?" என்று திருப்தியுடன் வீட்டுக்குக் கிளம்பினர்.

குப்புசாமி இரண்டு நாட்கள் சாதமே சாப்பிடவில்லை. போதும் போதாததற்கு அந்த நாய் பழுப்பு நிறமாய் வேறு இருந்ததால் காப்பி கூடக் குடிக்க முடியாது என்று குழந்தை போலப் பிடிவாதம் பிடித்தார். சாதத்துக்குப் பதில் சப்பாத்தி, பூரி, தோசை

இட்லி இத்யாதியும்] காப்பிக்குப் பதில் வெறும் பால், ஹார்லிக்ஸ் இப்படியாக வும் சாப்பிட்டார்.

தினசரிகளுக்கு நாயின் மறைவு குறித்துச் செய்தி அனுப்பி, பணமும் அனுப்பிப் போடச் சொன்னார். நாயின் புகைப்படம் அவரிடம் இல்லை என்பதால், அவர் அனுமதியுடன் வேறு ஒரு நாயின் புகைப்படத்தைச் செய்தி யுடன் பிரசுரித்தனர்.

அந்தக் காலனிவாழ் மக்கள் இரங் கல் கூட்டம் கூட்டினர். கூட்டத்துக்கு வந்த ஒவ்வொருவருக்கும் ஒரு 'துண்டு' கொடுக்கப்பட்டது. தலைமை வகித்த குப்பு சாமி பெரிய டர்க்கி டவலுடன் உட்கார்ந் திருந்தார். அடிக்கொரு முறை அந்த டவ லால் பெருகும் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளும் போதெல்லாம் ஒட்டுமொத்த மாய்க் கூட்டத்துக்கு வந்திருந்தவர் அனைவ ரும் தங்களுக்கு அளிக்கப்பட்ட துண்டு களால் கண்களைத் துடைத்துக் கொண்டனர்.

பேசத் தெரிந்த அனைவரும் பேசினர் — நாயைப் பற்றித்தான்.

பிறகு குப்புசாமி எழுந்தார். வெடித்து எழும் துக்கத்தைச் சமன்செய்தவாறே, ''என் அருமை உடன் பிறப்புகளே! என் துக்கம் பெரி தல்ல. உங்கள் துக்கம்தான் எனக்குப் பெரிது. நாய் — இது இரண்டு எழுத்து; பேய் — இது இரண்டு எழுத்து; காய் — இதுவும் இரண்டு எழுத்து. பணம், குணம், மணம் இவை மூன்றெழுத்துக்கள். அன்பு, பண்பு இவை களும் அப்படித்தான். ஜெர்மனியில் ஓர் அறிஞன் கூறினன், புறநானூற்றில் நாய் தான் தெய்வம் என்று! அரண்மனையில் வளர்ப் பார்களாம்! எல்லோரும் இதன் மீது சவாரி செய்ததாக எகிப்திய சரித்திரம் கூறுகிறது. விஞ்ஞான முறைப்படி இந்த நாயின் அறிவு மனிதர்களைவிடப் பெரிதாம். அதன் மூளைக் கும் வாலுக்கும் நேரடி சம்பந்தம் இருப்பதால் தான் அது வாலை ஆட்டுகிறது. அது விநாடிக்கு எட்டரைத் தடவை ஆடுகிறது. அந்த ஆட்டத்தின் வேகத்தில் பெரிய ஜெனரேட் டர் வைத்து மின்சாரம் உற்பத்தி செய்து நம் காலனி வாழ் மக்கள் மட்டுமல்ல, பட்டி தொட்டி அனைத்துக்கும் சப்ளை செய்யலாம். என் உயிரின் உயிரான நாய்க்கு... ஓ ஐ ஆம் ஸாரி.... கண்ணனுக்கு ஒரு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும்; அதுவும் என் வீட்டின் வலதுபுறம் அது ஓடியாடி விளையாடிய இடத் தில். அது மறைந்த நாளை மத்திய அரசாங்க விடுமுறை நாட்களில் ஒன்றாக ஆக்க வேண் டும். இதையே தீர்மானமாக நிறைவேற்று கிறேன்'' என்று கூறி முடித்தார். எல்லோ ரும் கைதட்டியே பழக்கப்பட்டதால் ஒரு கணம் தடுமாறிப் பிறகு கஷ்டப்பட்டு ஒரே குரலில் 'ஓ'வெனச் சிறிது நேரம் அழுது தீர்த்தனர்.

இதைப் பற்றிய செய்திகள் அயல் நாட்டுப் பத்திரிகைகளிலும் வந்து விட்டன. வெளி நாடுகளிலிருந்து வரும் 'கேபிள்'களின் எண் ணிக்கையைப் பார்த்த அரசாங்கம் குப்பு சாமியை டில்லிக்கு வரவழைத்து விசாரித் தது. அவசரம் அவசரமாய் மந்திரி சபை யைக் கூட்டி, இரங்கல் தீர்மானம் நிறை வேற்றியது. இது சம்பந்தமாய் ''நாய் நல் லெண்ணத் தூதுக் கோஷ்டி'' நிர்மாணிக்கப் பட்டு, அதன் தலைவராய்க் குப்புசாமி நியமிக் கப்பட்டார். அவர் வெளி நாடுகளில் இப் போது நாய் நல்லெண்ணத் தூதுகோஷ்டியின் சார்பாகப் பேசிப் பல டாக்டர் பட்டங்களைச் சுமக்க முடியாமல் பெற்றுக் கொண்டு, இன்ன மும் ஊர் திரும்பவில்லையாம்...

வைத்தி இதைக் கூறி முடிக்கவும் நான் வியப்புடன் ''இப்படியும் நடக்குமா?'' என்றேன்.

உடனே அவர் துளியும் கூசாமல் ''என்னை ஓய் இப்படிக் கேட்கிறீர்? அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனே சைனாவுக்குச் சென்று சீன அதி பரைக் கட்டித் தழுவிக் கொண்டபோது இதெல்லாம் அதிசயமா?'' என்றார். பிறகு ''பத்து ரூபாய் இருந்தால் கொடு'' என்றார்.

கொஞ்சம் படிப்பதை நிறுத்திவிட்டு நான் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் யாரிட மாவது பத்து ரூபாய் இருந்தால் உடனே அனுப்புங்கள். வைத்தி எனக்குத் திருப்பித் தந்ததும் உங்களுக்கு அனுப்பிவிடுகிறேன்.... ....என்ன இப்படி வெகு அவசரமாய் அடுத்த பக்கக்கத்துக்குப் போகிறீர்களே!



சீனர்கள் பேசும் ஆங்கிலம்!

ஹாங்காங் ரேடியோ சீனர்களுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறது. ஆனால் ரேடியோவில் வரும் பாடங்களைக் கேட்கும் போது, ஒரு சீனனும், ஓர் ஆங்கிலேயனும் சந்தித்துக் கொண் டால், அவர்கள் பின் வருமாறுதான் பேசிக் கொள் வார்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறது :

ஆங்கிலேயன்: ஹலோ, என்னுடைய பெயர் ஜான் ஸ்மித். நான் சொல்ல விரும்புவது என்ன வென்றால்....

சீனன்: எங்கள் தலைவர் சேர்மன் மா சே துங். அவர் சொல்வதை நாங்கள் கேட்க வேண்டும்.

ஆங்கிலேயன்: ஆமாம், நான் சொல்ல வந்தது என்ன வென்றால் ...

சீனன்: மா சே துங்க் வாழ்க, மா சே துங்க் வாழ்க !

ஆங்கிலேயன்: அவர் வாழட்டும். ஆனால் நான் சொல்ல வந்தது என்னவென்றால்...

சீனன்: உலகத்திலேயே எங்கள் நாடு தான் உயர்ந்தது, எங்கள் மக்கள் தான் உயர்ந்தவர்கள்.

ஆங்கிலேயன்: ஆமாம், ஆனால் நான் சொல்ல வந்தது என்னவென்றால்....

சீனன்: எங்கள் தலைவர் மா சே துங்க் என்ன சொல்கிறாரோ, அதைத் தான் நாங்கள் கேட்க வேண்டும்.

ஆங்கிலேயன்: கேட்க வேண்டியதுதான். ஆனால் நான் சொல்ல வந்தது என்னவென்றால்....

சீனன்: மா சே துங்க் வாழ்க!, மா சே துங்க் வாழ்க !

ஆங்கிலேயன்: சரி, நான் இன்னொரு சமயம் உங்களைச் சந்திக்கிறேன்.

உதவி : நாடோடி

ஆதாரம்: 'கார்டியன்'

ராஜாஜி கதைகள் —

புதுமைப்பித்தன் கண்ட புதுமைகள்



எனக்கு ஒரு சப்-ரெஜிஸ்தராரைக் கண்டால் எப்பொழுதும் பயம். அவருக்கு வயதும் அனுபவ முதிர்ச்சியின் எல்லையைக் காண்பிப்பது. அவர் 'காம்பு' செய்யும் இடங்களில் எல்லாம் தமது ரெஜிஸ்திரார் உத்தியோகத்தின் செல்வாக்கை உபயோகித்து, கம்பராமாயணப் பிரசங்கம் செய்து வருவார். அந்த நண்பரின் பிரசங்கங்களைக் கேட்டிருக்கும் அனுபவம் எனக்கு உண்டு. அதிலிருந்து தான் எப்பொழுதும் இந்தப் பயம்.

அதிலிருந்து குறிப்பிட்ட ஒரு துறையில் பிரபலமோ அதிகாரமோ பெற்றிருக்கும் ஒருவர் வேறு ஒன்றில் ஈடுபட்டு தமது மதிப்பைப் பெற வேண்டும் என்று முயன்றால், அவரைவிட்டு ஒரு காத வழி விலகிச் செல்வதே எனது பழக்கம்.

அதற்கு ஒரு விதிவிலக்கு ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார்.

ராஜாஜியின் கதைகளைப் பொறுத்தவரையில் அவை யாவும் பிரசாரக் கதைகள் என்று ஒரேயடியாய்ச் சொல்லிவிடலாம். ஆனால் பிரசாரப் போக்கினால் அவற்றின் நயம் ஒரு சிறிதும் குறைந்து விடவில்லை. நான் சொல்லுவதற்கு விதிவிலக்காக இரண்டொரு உதாரணங்களும் இருக்கின்றன. ஆனால் பொதுவாக அவரது கதை நயம் பிரசாரத்தினால் சுவை குறைந்துவிடவில்லை.

1. தேவானை

கதை அமைப்பு ரொம்ப நயமாக விழுந்திருக்கிறது.

''அம்மா ! தருமம் கொடுங்கள்! பச்சைக் குழந்தையைப் பார், அம்மா !'' இம்மாதிரி பிச்சை கேட்டுத் திரியும் ஸ்திரீகளுள் எத்தனை தேவானைகள் ஒளிந்து கிடக்கிறார்களோ !

இவ்வொலி கடைசி வரை கதையில் கேட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் அவள் எங்கு சென்றாளோ ?

தேவானையின் குண வருணனை எவ்வளவு குற்றமில்லாமல் விழுந்திருக்கிறதோ, அவ்வளவு அழகாக சீதாலக்ஷ்மியின் மனநிலையும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

சீதாலக்ஷ்மி மனப்பூர்வமாகக் கெட்ட குணமுள்ளவளல்ல. தேவானையும் அவளது ஸ்தானத்தில் இருந்திருந்தால் அவ்வாறுதான் நடந்திருப்பாள்.

பிரசாரத்துக்குச் சந்தர்ப்ப விசேஷத்தை வலியுறுத்துவதுதான் முக்கியம். அந்த விஷயத்தில் கதாபாத்திரங்களைப் பற்றிச் சிறிதும் குறை கூற இயலாது.

தேவானை ஓர் இலட்சியச் சிறுகதை என்று சொல்ல வேண்டும்.

2. அன்னையும் பிதாவும்

இது ஒரு பிரசாரக்கதை அல்ல. ஏனெனில் இது சந்தர்ப்ப விசேஷம் எப்படி மனிதனை அடிமைப்படுத்துகிறது என்பதற்குப் பதிலாக மனிதனின் உள்ளத்தின் போக்கைத் துருவ முயற்சி செய்கிறது.

அர்த்தநாரி ஹரிஜன வாலிபன் மட்டுமல்ல, மனச்சாட்சி என்ற குறுகுறுப்பும் ஆசை என்ற பலவீனமும் கொண்டவன். கடைசியில் அவன் மாரியம்மன் கோயில் முன்பு பாடசாலை நடத்துவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

ஆனால் இப்படிப்பட்டவர்கள் பங்கஜங்களைக் கல்யாணம் செய்து கொள்வதும் இயற்கை. ஆகையால்தான் அர்த்தநாரி 'கதை'யில் இடம் பெறக் கூடிய ஒரு விதிவிலக்கு.

3. திக்கற்ற பார்வதி

சந்தர்ப்ப] விசேஷங்கள், நடைமுறை உலகத்தில் இவ்வளவு தூரம் அசுரத் தன்மை பொருந்தியவைகளா, பார்வதியைப் போன்றவர்கள் மலை உச்சியிலிருந்து குதிக்கும் வரை இவ்வளவு கொடூர வேகத்துடன் துரத்திச் செல்லுமா என்று பலர் கேட்கலாம்.

பார்வதியைப் போன்ற மனம் படைத்தவர்கள் இந்த உலகத்தில் மட்டுமல்ல, எந்த உலகத்திலும் விதிவிலக்காகச் சமூகச் சக்கரத்தின் பற்களில் சிதைபட்டே வருவார்கள். ஏனெனில், தவறை மன்னிக்கக் கூடியவன் மனிதன்; சமூகமோ சட்டமோ அல்ல.

4. முருந்தன் பறையனான கதை

முருந்தன் என்று பெயரைக் குறுக்குவதைவிட, அதற்கு முதலில் கொடுக்கப்பட்ட மேற்கண்ட பெயரே அதன் தன்மையை நன்றாக எடுத்துக் காட்டுகிறது.

இது சிறுகதையல்ல, நாவலும் அல்ல. இரண்டின் தன்மையையும் பெற்ற ஒரு கதம்பம்.

இதில் ஆசிரியர் ஒரு நடைமுறை உண்மையின் அசந்தர்ப்பத்தை, விபரீதத்தை எடுத்துக் காண்பிக்க, புத்த ஜாதகக் கதையின் சூட்சமத்தை எடுத்தாண்டிருக்கிறார்.

அதனால்தான் இக்கதையில் சிறுகதை இலட்சணத்தை மிஞ்சிய ஒரு தனி அழகு காணப்படுகிறது.

மணிக்கொடி, சென்னை 15-8-1937

(புதுமைப்பித்தன் பிறந்த நாள்: 25-4-1906)

நன்றி : குமரிமலர்

2. உங்களை நம்புகிறோம்

1. நீங்கள் சினிமா பார்ப்பதற்காக 'க்யூ'வில் நிற்கிறீர்கள். பாம்புபோல் 'க்யூ' வளைந்து நீண்டுகொண்டிருக்கிறது. படம் ஆரம்பிக்க இன்னும் வெகு நேரம் இருக்கிறது. நின்று நின்று உங்களுக்குக் கால் கடுத்துப் போகிறது. வலதுபுறம் சிறிது நேரம், இடதுபுறம் சிறிது நேரம் என்று மாறி மாறிச் சாய்ந்து நின்று அஜந்தாச் சிற்பம் போல் 'போஸ்' கொடுத்து அலுத்துப் போகிறீர்கள். அப்போது ஒரு யுவதி உங்களிடம் வந்து மிகவும் இனிமையான குரலில், ''ஸார்! இந்தாருங்கள், இந்தப் பத்திரிகையை வைத்துக் கொண்டு படித்துக்கொண்டே 'க்யூ'வில் நின்றால் பொழுது போவது தெரியாது!'' என்று கூறிவிட்டுச் செல்கிறாள்.

நீங்கள் அந்தப் பத்திரிகையைப் பிரிக்கிறீர்கள். ''உங்களுடைய பொழுதை நல்ல முறையில் செலவிட 'யூத் சர்வீஸ்' உங்களுக்கு உதவியாயிருக்கிறது. இந்தப் பழம் பத்திரிகை ஏற்கனவே படிக்காதவர்களுக்கு என்றுமே புதிதுதான். தயவுசெய்து நீங்கள் படித்ததும் உங்களுக்குப் பிரியமானவர்களுக்கும் கொடுத்து, பலபேர் படித்துப் பலனடைய உதவுங்கள். இப்படிக் கை மாறுவதைத் தொடரச் செய்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்'' என்று அந்தப் பத்திரிகையில் உள்ள துண்டுக் கடிதத்தில் டைப் செய்யப்-பட்டிருக்கிறது.

2. ஒரு பெரிய மனிதர் வீட்டுக் கல்யாணம் தடபுடல் படுகிறது. கல்யாண மண்டபத்தின் வாசலில் போலீசார் நின்றுகொண்டு பொங்கி வரும் ஜன நெரிசலை உள்ளே போக விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படியிருந்தும் மண்டபத்தினுள்ளே ஏகக் கூட்டம். கல்யாண விருந்து சாப்பிட்டவர்களை விடச் சாப்பிடாதவர்களே அதிகம். இருந்தும் வாசலில் கொண்டு வந்து கொட்டப்படும் எச்சில் இலைகளில் உபயோகப்படுத்தப் படாத உணவுப் பண்டங்கள் ஏராளமாகக் குவிந்து விடுகின்றன. எத்தனையோ மக்கள் அரை வயிற்றை நிரப்பவும் வழியின்றிப் பட்டினி கிடக்கும் நம் நாட்டில் எவ்வளவு பெரிய கொடுமை என்று யாருமே சிந்தித்துப் பார்க்க வேண்டிய உண்மை இது.

இந்தக் கல்யாண வீட்டு முகூர்த்தத்துக்கும் முன்னதாகவே சில இளைஞர்கள் முன்னறிவிப்புக் கொடுத்து விட்டு வருகிறார்கள். உணவுப் பண்டங்களை வீணாக்காமல் கணக்காகச் செலவிடுமாறு வேண்டிக் கொள்ளுகிறார்கள். எஞ்சியிருக்கும் உணவுப் பண்டங்கள், சமைக்கப்பட்டதாயினும் சமைக்கப்படாததாயினும் அந்த இளைஞர்கள் சேகரித்துக் கொண்டு போய் அநாதைக் குழந்தைகளுக்கும், தொழு நோயாளிகளுக்கும், பிச்சைக்காரர் விடுதியில் உள்ளவர்களுக்கும் விநியோகம் செய்துவிடுகிறார்கள். அவர்கள் குறிக்கோள் கல்யாணத்தில் நிறையப் பேர் சாப்பிடக் கூடாதென்பதல்ல. எத்தனை பேர் வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஆனால் எந்தப் பண்டமும் வீணாகக் கூடாது.

சென்னை, நேப்பாக்கம், யூத் ஸர்வீஸ்[இளைஞர்கள்தான் இத்தகைய அரிய தொண்டுகளைச் செய்து வருகின்றனர். தொடங்கி நான்கு



இளைஞர்



மாதங்களுக்குள் ஐம்பது அங்கத்தினர்கள் சேர்ந்திருக்கின்றனர்.

பல டாக்டர்களை நேரில் சந்தித்துத் தயாரிப்பாளர்களிடமிருந்து அவர்களுக்கு வரும் 'சாம்பிள்' மருந்துகளையெல்லாம் சேகரித்துப் பல ஏழை மக்களுக்குப் பயன்படுத்தும் தொண்டையும் புரிகிறார்கள்.

இம்மூன்று நற்பணிகளையும் செய்யும் பிரிவுகளுக்கு முறையே We trust you commission, Waste not commission, Medical help commission என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

படிக்கப் பத்திரிகை கொடுக்கும் தொகுதியில் மிஸ் சுலோசனா, மிஸ் யூ. ஹரிணி, மிஸ் எச். ஆர். சந்தியா, மிஸ் கே. ஆர். பரிமளா, மிஸ் பி. சீதா, மிஸ் டி. சூரியம் ஆகிய பெண்மணிகள் பல ஆண்மணிகளுடன் தொண்டாற்றுகிறார்கள்.

''பெரிய மனிதர் வீட்டுக்குக் கல்யாணத்துக்குப் போய், உங்களுடைய ''வீணாக்காதீர்கள்'' (Waste not) என்ற சீர்திருத்தத் தொண்டைச்செய்ய முற்படும்போது அவர்கள் முகம் கோணாமல் ஒத்துழைக்கிறார்களா?''

''ஆகா! சென்ற மாதம் ராயப்பேட்டையிலுள்ள ''நல்வாழ்வு'' கல்யாண மண்டபத்தில் ஒரு பெரிய கல்யாணம் நடந்தது. அங்கு முன்னதாகத் தகவல் கொடுத்து விட்டுச் சென்று, உணவுப் பண்டங்கள் வீணாவதைத் தடுத்து அவற்றை ஏழை மக்களுக்குப் பயன்படுத்தினோம். அந்தக் கல்யாண வீட்டுக்



சமுதாயம்



காரர்கள் மிகவும் பெருந்தன்மையோடு எங்களுடன் ஒத்துழைத்ததை மறக்க முடியாது.''

''நீங்கள் சேகரிக்கும் உணவுப் பொருள்களை நீங்களே விநியோகிப்பது சிரமமாக இல்லையா?''

''அந்தச் சிரமத்தை, பால விஹாரும் ஏற்றுக்கொள்வதால் சிரமமாகத் தெரியவில்லை.''

''இன்னும் வேறு என்ன தொண்டு செய்கிறது யூத் சர்வீஸ்?''

''குழந்தைகளுக்கு உபயோகப்படும்படியான பழைய சட்டை, டிராயர் முதலிய துணிகளைப் பலரிடமிருந்து சேகரித்து ஏழை அநாதைகளுக்கு விநியோகம் செய்கிறோம்.''

''கசங்கியும் கிழிந்தும் போயிருக்கும் மேற்படி உடுப்புக்களை உபயோகித்தால் எப்படி....?

நான் இப்படிக் கேட்டதும் அருகிலிருந்த குமாரி கலோசனாவுக்குக் கோபமே வந்துவிட்டது! ''என்ன ஸார் அப்படிக் கேட்டு விட்டீர்கள்? நாங்கள் அவற்றை விநியோகிக்கும் போது ஏறத்தாழப் புதுசு மாதிரியே இருக்கும்'' என்றார் படபடப்புடன். ''சேகரித்துத் தரும் உடுப்புக்களை வாஷ் பண்ணி, பழுது பார்த்துத் தைத்து அதன் பிறகே விநியோகிக்கிறோம்'' என்றார். அவர் துடிப்பான சுபாவம் கொண்ட பள்ளி உபாத்தியாயினி.

''வீணாக்காதீர்கள்'' தொகுதிக்கு (waste not commission) மிஸ் எச். ஆர். கமலா பொறுப்பாளர். இப் பெண்மணி ஓர் உபாத்தியாயினி. இவருக்குத் துணையாக மிஸ் ஓய். பரிமளா, மிஸ் சோபனு கேட்டி, மிஸ் சகிலா ஆனந்த் போன்ற பெண்மணிகளும் இன்னும் பல ஆண்மணிகளும் இருக்கின்றனர்.

''நீங்கள் சேகரிக்கும் மருந்துகளை எப்படி ஏழைகளுக்குப் பயன்படுத்துகிறீர்கள்?''

''ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் எங்களிடமிருந்து மருந்துகளைப் பெற்றுக் கொண்டு அந்தச் சேவையைச் செய்கிறது'' என்றார் மிஸ் கீதா. இப்பணி அவர் பொறுப்பில்தான் நடக்கிறது.

கீழ்ப்பாக்கத்தில் அழகான பங்களாவில் இந்தச் சங்கம் மாதம் ஒரு முறை கூடுகிறது. அது ஒரு 'சோஷியல் கெட் - டுகெதர்.' இந்த இளைஞர் சங்கத்தில் பெண்கள் பலர் அங்கத்தினரா யிருப்பதுடன், சமூக சேவையில் சிரமம் பாராமல் பங்கெடுத்துக் கொள்ளவும் செய்கிறார்கள். சங்கத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் நல்ல உத்தியோகங்களில் இருப்பவர்கள். சமூக நற்பணிகளை ஓய்வு நேர வேலையாகவே மேற்கொள்கின்றனர்.

(யூத் ஸர்வீஸின் தொண்டுகளில் பெண்மணிகளின் பெயர்களை மட்டும் குறிப்பிட்டிருப்பதற்கு ஆண்மணிகள் என்னை மன்னிப்பார்களாக! கட்டுரை கவர்ச்சியாக இருக்க வேண்டும் என்று ஆசிரியர் கூறியதால் கவர்ச்சிப் பெயர்களாகச் சேர்த்திருக்கிறேன். இது ஆண்மணிகளை எந்த விதத்திலும் குறைத்து மதிப்பிடுவதாகாது.)

நான்காவதாக ஒரு தொகுதி Friendship commission. அயல் நாடுகளிலிருந்து இங்கு வந்து படிக்கும் மாணவர்களின் நலன்களை நட்புரிமையோடு கவனித்து ஆவன செய்தல். இதற்கு மைக்கேல் கிட்டிங் என்ற அமெரிக்க மாணவரே பொறுப்பு வகிக்கிறார்.

இந்தச் சங்கத்தில் ஒரு சிறப்பு அம்சம். தலைவர், உபதலைவர், செயலாளர் என்றெல்லாம் யாரும் கிடையாது. ஆனால் அவர்களுக்குப் பதில் Patrons, co-ordinaters, Skippers என்று பலர் இருக்கிறார்கள். இவர்களை முறையே ஆதரவாளர்கள், இணைப்பாளர்கள், ஆட்டத் தலைவர்கள் என்று கூறலாம். தலைவன் தொண்டன் என்ற எண்ணம் வளராமல் சமத்துவ உணர்ச்சியுடன் பணியாற்ற இந்த ஏற்பாடு. மூன்று மாதங்களுக்கு ஒருவர் இணைப்பாளராக இருப்பார். 'ஸ்கிப்பர்' பதவியும் மூன்று மாத காலத்துக்குத்தான். விளையாட்டுக்களின் போது கட்சித் தலைவனை ஸ்கிப்பர் என்று அழைப்பது வழக்கமல்லவா? அந்த மாதிரிதான் இவரும்.

இவர்கள் தொண்டு வளர்ச்சியடைவது பொதுமக்களின் ஆதரவைப் பொறுத்தது. விளம்பரத்தைச் சிறிதும் விரும்பாத சேவை மனப்பான்மை கொண்ட யூத் சர்வீஸை உங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பதில் பெருமைப் படுகிறேன்.

— ஸோமாஸ்



திருமதி மரீனு ஏ. கள்ளிவயலில்.

ரெக்ஸ் பேகிங் பவுடர் உபயோகித்துத் தயாரிக்கப்பட்ட கேக்குகள் சுவைமிக்கவை; தேநீருடன் உண்ணச் சிறந்தவை"


என்கிறுர், கொச்சி-3, வெல்லிங்டன் தீவைச் சேர்ந்த திருமதி மரீனு ஏ. கள்ளிவயலில்.

கார்ன் ப்ராடக்ட்ஸ் தேர்ந்தெடுத்த பரிசு-பெற்ற பக்குவ முறை

ஆரஞ்சு டீ கேக்

தயாரிக்க உதவுவது

ரெக்ஸ் பேகிங் பவுடர்



அம்மா

ரா. கணபதி

29. கண்ணன் பிறந்த மண்ணிலே!

> கணவன் இறந்தவுடன் தன் உயிரையும் விடும் பத்தினி தன்னையும் கணவனையும் கரையேற்றுவாள்! ஆனால் குழந்தைகள் உள்ள ஒரு பெண், கணவன் மரணத்துக்குப்பின் மனோ வாக்குக் காயங்களின் தூய்மையைக் காத்து அநுஷ்டான நியமங்களுடன் விளங்கினால் தன்னையும் கணவனையும் கரையேற்றுவதோடு தன் புத்திரர்களையும் கரையேற்றுவாள்.
>
> (மகாபாரதம், ஆதிபர்வம்

காளி மாதாவுக்கு சாரதாதேவி எந்த அபசாரமும் செய்யவில்லை. காளி மாதாவுக்கு மட்டும் என்ன? இந்தப் பிறவி எடுத்த நாளாக சாரதா தேவி ஈ எறும்புக்குக்கூடத் தீங்கு நினைத்த தில்லை. இந்தப் பிறவிக்கு முன் கர்ம வசப்பட்ட பூர்வ ஜன்மமோ அவளுக்குக் கிடையாது. அப்படியாயின் பாவமே அற்ற அந்தப் பரிசுத்த ஜீவனைக் காளி ஏன் முப்பத்திரண்டாம் வயதில், தெய்வக் கணவனைப் பலி கொடுத்த கைம் பெண்ணாக நிறுத்தினாள்?

காலக்கிரமத்தில்தான் சாரதா மணியே இதற்கு விடையைப் புரிந்து கொண்டாள். மூளையால் புரிந்துகொண்டாளோ, இல்லையோ, இதன் விடையைப் பிரதி சுவாசத்திலும் வாழ்ந்து காட்டினாள். காளி மாதா தனது அம்சமாகவே ராமகிருஷ்ணரை அனுப்பி ஆத்மிக உன்னதங்களை வாழ்ந்து காட்டினாள். அந்த உன்னதம் எங்கோ எட்டாக் கையில் இல்லை என்று காட்டுவதற்காக ராமகிருஷ்ணரை எளிமையின் பக்கத்திலேயே வைத்து வாழச் செய்தாள். அதே சமயத்தில் எளிமையை உலகுக்கு உணர்த்த சாரதை என்கிற உருவையும் தன் அம்சமாகவே அனுப்பி வைக்க வழி ஏற்படுத்திக் கொண்டாள். உடல் துறவை விடப் பெரியதான மனத் துறவின் மகிமையைக் காட்டவே ராமகிருஷ்ணரை மனைவியுடன் வாழ்ந்த மகா புருஷனாக வாழ வைத்தாள் பராசக்தி. அதன் உட்கிடையாக இன்னொரு பெண்ணும் அதே போன்ற தூய மண வாழ்க்கை வாழ்ந்து காட்டச் செய்தாள். அவர் உன்னதமாகப் பெற்ற துறவை, அவரது மனையாள் எளிதாகப் பெற்று வாழச் செய்தாள் காளி மாதா.

உன்னதத்துக்குச் சரணாகதி செய்து வாழ்ந்தது எளிமை. அந்த உன்னதம் உலகில் உள்ள மட்டும் இந்த எளிமையின் பெருமை தனித்துத் தெரிய முடியாது என்றாகிவிட்டது. எனவேதான் உன்னதம் முதலில் போய்விட வேண்டும், பிறகு எளிமை மட்டும் வாழ வேண்டும் என்று காளி சங்கற்பித்தாள்.

எங்கே போயிற்று அந்த உன்னதம்? எளிமையின் அந்தராத்மாவுக்குள்ளேயே போய்க் குடிகொண்டது. இந்த எளிமை எப்படி ஒளிந்து வாழ்ந்ததோ, அப்படியே அந்த உன்னதம் இந்த எளிமைக்குங்கூடத் தெரியாதபடி, அதனுள்ளேயே வந்து ஒளிந்து கொண்டது. ஆனால் காலக்கிரமத்தில் எளிமை உணர்ந்துவிட்டது: 'உன்னதம் எங்கும் போய்விடவில்லை. தன்னுள்ளேயே வந்து உறைந்து விட்டது' என்று.

ஆனால் இப்போது, பொன் மேனியிலிருந்து புண்ணிய மூச்சு வெளிப் போய் விட்ட இப்போது, அவளுக்கு அவர் போயே போய்விட்டார் என்றுதான் தோன்றியது. பிரபஞ்சமே அவளுக்குச் சர்வசூனியமாகி விட்டது.

மறு நாள் மாலை. சுதாயியாகவும், கதாதர பட்டாசாரியராகவும், ராமகிருஷ்ணராகவும், பரமஹம்ஸராகவும், குரு மஹாராஜாவாகவும், பகவானாகவும் பல பெயர்களில் உலவி வந்த தங்கத் தேகம் நேற்று நள்ளிரவு வரையில் எந்தக் கட்டிலில் சயனித்திருந்ததோ, அதே கட்டிலில் இப்போது ஒரு தாமிரக் குடம் ஆரோகணித்திருந்தது. தங்கத் தேகம் சாம்பலாக மாறி அந்தக் குடத்துள் நிறைந்திருந்தது. ஐம்பது ஆண்டுகள் நிகழ்த்திய அற்புத லீலா விபூதி மறைந்துவிட்டது — பஸ்ம விபூதிதான் நிற்கிறது! சாரதா தேவி தவியாகத் தவித்தாள். பதி மறைந்தபின் துக்க நாட்கள் கழியும் வரையில் மங்கலச் சின்னங்களுடன் இருக்கலாமாயினும், தேவியால் இப்போது அணிபணிகளைத் தாங்க முடியவில்லை. இதுவரை அவற்றை அணிந்திருக்கிறோம் என்ற நினைவும் மறந்திருந்தாள். நினைப்பு வந்தவுடன் அவற்றை ஒவ்வொன்றாகக் களையலானாள். ராவணனால் அபகரிக்கப்பட்ட சீதாதேவி கழற்றி எறிந்த திருவாபரணம் ஒவ்வொன்றும் ராமபிரா

னுக்கு ஒரு கதை சொன்னதுபோல், இந்த ஆபரணங்களுக்கும் கதை உண்டு. அன்று இன்பக் கதைகளாக இருந்தவை இன்று துன்பக் கதைகளாகிவிட்டன. ராமகிருஷ்ணர் தமது மூக்கைச் சுற்றி அபிநயித்துக் காட்டினரே, அந்த நத்தும் திவ்விய மாதாவின் நாசியிலிருந்து இறங்கிவிட்டது. இதோ, அவர் ஆசை ஆசையாகச் செய்து போட்ட பொற்காப்புக்களையும் கடைசியில் அம்மா கழற்றத் தொடங்கினள்.

தனது வலக் கையால் இடக் கையை உருவி ஒரு காப்பைக் கழற்றத் தொடங்கியபோது, குபீரென தேவிக்கு ரோமாஞ்சனம் ஏற்பட்டது. இவள் ஒரு கையால் இன்னெரு கையைப் பிடித்திருக்கிறள். இவளது இரு கைகளையும் வேறு இரண்டு மலர்க் கைகள் அழுந்தப் பற்றியிருக்கின்றன!

பற்றிய கைகள், ஆம், சாட்சாத் ராமகிருஷ்ணருடையவை தாம்!

சாரதா தேவி ஆனந்த பரவசத்தில் திக்குமுக்காடினள்.

'இழந்த புதையலைப் பெற்ற ஏழையின் ஆனந்தம்' என்பது போன்ற எந்த உவமையைக் கூறினலும் அது தேவி அடைந்த பேரானந்தத்துக்கு உறை போடக் காணது. எவரது அஸ்தி அதோ கும்பத்தில் இருக்கிறதோ அவரே! அல்லவா இங்கு வந்து இவளது கையைப் பற்றியிருக்கிருர்!

இது சொப்பனமில்லை. தான் உணருவது அவரது சூக்ஷ்ம சரீரத்தையும் அல்ல. ஸ்தூலமான கரங்



களின் அழுத்தம் கைகளில் படிந்திருக்கின்றன !

தேவி கண்களை உயர்த்திப் பார்த்தாள். கரங்கள் மட்டுமல்ல. பூரண உருவத்துடன் நோயில் விழுந்ததற்கு முன்பிருந்த ஆரோக்கிய சரீரத்தில் மலர்ந்து நிற்கிறார்.

அவளது கைகளைப் பற்றிக் கொண்டு, ''சுமங்கலிச் சின்னங்களைக் கையிலேருந்து கழட்டறியே ! நான் செத்துப் போயிட்டேனு, என்ன?'' என்கிறார்.

ஸ்படிகம் போன்ற அந்த வார்த்தைகள் பரம ஸ்பஷ்டமாக அவளது காதுகளில் விழுகின்றன.

ஆனந்த அதிசயத்தில் ஆழ்ந்து கண்களை மூடிக் கொள்கிறாள். கையைவிட்டுச் சந்தன ஸ்பரிசம் நீங்குகிறது.

கண்களைத் திறக்கிறாள். அவர் இல்லை. 'நான் இல்லாமல் போய்விட்டேனு' என்று கேட்டவர் இல்லைதான்.

இல்லைதானு ?

பொற்காப்பை அவள் கழற்றவில்லை.

அந்தக் காலத்தில் ஒரு கைம் பெண்—அதுவும் நம் அம்மாவைப் போல் சமூகத்துக்கு அடங்கி, ஒடுங்கி, நடுங்கி வாழ்ந்தவள் — கங்கணத்தைக் கழற்ருமலிருந்தால் அது புரட்சியாகவே தோன்றும். ஆனல் புரட்சி எண்ணமே இன்றி, நம் அம்மா கைம்மைக்குப் பிறகும் கங்கணம் தரித்தே விளங்கினள். ஏனெனில் ராமகிருஷ்ணர் அவள் முன் தோன்றியதும் பேசியதும் அப்பேர்ப்பட்ட உறுதியான உண்மை !

ஆதியில் அவளது அஞ்சாம் வயசிலே பாணிக்கிரகணம் செய்துவிட்டு அவளைத் துறவியாகவே வைத்திருந்தார். இப்போது அவள் துறவுக் கோலம் பூண இருந்தபோது மீண்டும் பாணிக்கிரகணம் செய்து கொண்டு 'தீர்க்கசுமங்கலி பவ' என்கிறார் ! விசித்திரமான டாகூர்தான்! திருமணத்தின் போதே தமது கங்கணச் சாட்டை எரித்துக் கொண்டார்; தாம் உடலை உகுத்த பின்பும் அவளது கங்கணத்தைக் கழற்ற வொட்டாமல் செய்கிறார் ! விசித்திரக் கணவரின் மனைவி இப்போது ஒரு விசித்திரம் செய்தாள். நேற்று வரையில் அவரது புஜத்தில் மின்னிய தாயத்தை எடுத்துத் தனது தோளில் கட்டிக் கொண்டாள்.

அகலமான சிவப்புக் கரை போட்ட சேலைகளை உடுத்தி வந்த அம்மாவுக்குப் பலராம் பாபு, கரை போடாத வெள்ளைப் புடவை வாங்கி வந்தார். நீர்த் திரையிட்ட கண்களுடன் அதை கோலாப்—மாவிடம் கொடுத்து விட்டுப் பேசாமல் நின்றார். ''ஹே, ஈசுவரா ! எங்க அம்மாகிட்ட இதை யார் கொண்டு போய்த் தர முடியும் ?'' என்று கூவிவிட்டாள் கோலாப்.

பிறகு அவள் அம்மா ஒடுங்கிக் கிடந்த மூலைக்குச் சென்றாள். அம்மாவே தன் புடவையின் அகலமான சிவப்புக் கரையில் ஒரு விரலளவு போக, மீதத்தைக் கிழித்தெறிந்திருந்தாள்.

அற்புதக் கணவர் உயிர் வாழ்ந்த வரையில் தனது அற்புதங்களை ஒளித்தே வாழ்ந்த அம்மா இப்போது அவர் போனவுடன் நிகழ்ந்த அற்புதத்தை வெளியிட்டாக வேண்டியிருந்தது. இல்லாவிடில் அவள் கங்கணம் அணிவதையும் மெல்லிய சிவப்புக் கரையிட்ட சேலை உடுத்துவதையும் உலகு ஒப்பாதே! இங்கேயும்கூட அம்மாவின் அடக்கத்தைப் பாருங்கள். அகலக் கரைச் சேலைகளைக்கூட அவள் அணிந்திருக்கலாம். ஏற்கெனவே கழற்றிய நகைகளை மீண்டும் அணிந்து, திலகமும் தீற்றிக்கொண்டு, கொண்டையும் முடித்திருக்கலாம் ! ஆனல் தொண்ணூறு சதவிகிதம் உலக நீதிக்கு ஒப்பவே நடந்து, பத்து சதம் தான் கணவர் ஆணையை நிறைவேற்றினள் !

ராமகிருஷ்ணர் அமரத்வம் பெற்றவர் என்பதைக் கண்கூடாகக் கண்ட தேவியே மற்றச் சீடர்களுக்கும் இப்போது பெரிய ஆறுதலாக இருந்தாள்.

'அவர் இருந்தால் மட்டும் போதுமா? கண்ணுக்குத் தெரியவில்லையே! அவர் குரல் காதில் கேட்கவில்லையே! அவருக்குத்தான் எந்தப் பணிவிடையும் செய்ய முடியவில்லையே!' — மீண்டும் தேவியை சர்வ சூனிய உணர்ச்சி பற்றிக் கொண்டது.

வெளியே நடக்கிற பேச்சுக்கள் அவளுக்கு நாராசமாக இருந்தன.


பிரம்மசாரி சீடர்களுக்கும் கிருஹஸ்த சீடர்களுக்கு மிடையே கருத்து வேற்றுமைகள் தலைகாட்டுகின்றன! அந்த நிலைமையில் அம்மாவை இடம் பெயரச் சொல்ல வேண்டாம் என்பதால் காசிப்பூர் வீட்டை இப்போதைக்குக் காலி செய்ய வேண்டாம் என்று நரேன் முதலிய பிரம்மசாரிச் சீடர்கள் சொல்கிறார்கள். ஆனல் குடக்கூலி கொடுக்க அந்த ஆண்டிப் பிள்ளைகளுக்கு ஏது வசதி? காசிப்பூர் வீட்டு வாடகையை ஏற்க கிருஹஸ்த சீடர்களுக்கு மனமில்லை என்பது அவர்களது பேச்சிலிருந்து நன்ருகத் தெரிகிறது.

உள்ளே அம்மா கோலாப்பிடம் ''நான் துக்கப்பட்டுட்டேன் என்கிறதால் அந்தக் குழந்தைகளும் எனக்காகத் துக்கப்படணுமா? நான் இந்த வீட்டை

வயிற்றுக் கோளாறு?

வாயுவா?
அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?





2 ரென்னி மாத்திரைகளை
மெல்லுங்கள்...
விரைவிலேயே
நிவாரணம் பெற

mcm/ni/4 tam

விட்டுப் போறதுக்கு எப்பவும் தயார்னு சொல்லுங்கோ'' என்றாள்.

அவள் எங்கே போவாள்? அவள் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் எங்கே இருந்தார்கள், அவளை வைத்துப் பராமரிக்க? அவள் வயிற்றிலே பிறவாமலே பிள்ளைகளாகி விட்ட குழந்தைகளோ தங்கள் வயிற்றுப்பாட்டுக்கே வகை தெரியாத ஆண்டிகளாக இருக்கிறார்கள். **அவர்** 'காமார்புகுரில் போய் இரு' என்று அவளுக்குக் கூறியிருந்தார். காமார்புகுரில் மைத்துனரும் போயாயிற்று. மைத்துனர் மக்களுக்கு இவளிடம் பரிவு போதாது. கணவரைப் பறிகொடுத்த கையோடு இவள் அங்கு போயிருப்பது இயலாத காரியம். புண் சிறிதே ஆறிய பிறகே அங்கு செல்லலாம். ஜயராம்பாடியில் தம்பிகள் தலையெடுத்து விட்டார்கள். ஆனாலும் எல்லாரும் வக்கிரமாகவே இருந்தார்கள். அவர்களது பெண்சாதிகளுக்கு வேறு இவள் பதில் சொல்ல வேண்டும். இப்போதைக்கு அந்த அவஸ்தையையும் ஏற்பதற்கில்லை. அநாதையாக நின்றாள் லோக மாதா. ஆனால் அவள் அதைப் பற்றி யோசித்துக் கலங்கவில்லை.

விஷயமறிந்த அத்யந்த சீடர் பலராம் பாபு அம்மாவைத் தம் இல்லத்திலேயே வந்திருக்குமாறு வேண்டினார். அவளது ஒப்புதலைப் பெற்றார்.

பிரமசாரிச் சீடர்களுக்கும பெரியவர்களுக்குமிடையே இன்னொர் உரசல் ஏற்பட்டது: வீட்டைக் காலி செய்யுமுன், அஸ்தியை காங்குர்காச்சித் தோப்பில் புதைத்து விடலாம் என்று கிருஹஸ்த சீடர்கள் கூறினர். ராம்பாபுவுக்குச் சொந்தமான இந்தத் தோப்புக்கு ராமகிருஷ்ணர் விஜயம் செய்திருக்கிறார். ஆனால் பிரமசாரிச் சீடர்களோ, கங்கைக் கரையில் சொந்தமாக ஓரிடம் வாங்கி அங்கே அஸ்தி கலசத்தை வைத்து நினைவுக் கோயில் எழுப்ப வேண்டும் என்றனர். முன்பே கண்டது போல் இந்த ஆசையை நிறைவேற்றப் பரதேசிக் குழந்தைகளுக்கு ஏது பொருள் வசதி? அபிப்பிராய பேதம் வலுத்தது. அஸ்தியில் ஒரு பகுதியை இந்த இளம் பிள்ளைகள் தங்களுக்கென்று பிரித்துக் கொண்டு வேறொரு பாத்திரத்திலிட்டுப் பலராம் பாபுவின் வீட்டுக்கு அனுப்பினர்.

அம்மா நெடுமூச்சு விட்டுக் கோலாப்பிடம் சொன்னாள்: ''கோலாப்! அல்ப விஷயத்தில் எத்தனை பூசல் செய்யறா பாருங்கோ! எந்தப் பரம புருஷனுக்கு எடைக்கு எடை தங்கம் கொடுத்தாக் கூடப் போறாதோ, அப்படிப்பட்ட பிரபு போயாச்சு: இவா சாம்பலுக்காகச் சண்டை போட்டுண்டிருக்கா!''

> தாயகட்ட விளையாட்டில் ஒரு காய் 'பழக் கோட்டு'க்கு வந்துவிட்டால் அப்புறம் அது மற்றக் காய்களால் வெட்டுப்படாது. பகவானிடம் நீங்காத நினைவு வந்துவிட்டால் உலக மாயங்கள் ஒருவனைத் துன்புறுத்த முடியாது. இந்த நினைவுக்கு - பழக்கோட்டுக்கு - வருமுன் பல கட்டங்களில் சுற்றிவரத்தான் வேண்டும். அப்போதும் ஒரு காய் தனியாக வராமல் இன்னொரு காயுடன் சேர்ந்து இரட்டையாக வந்தால் அது வெட்டுப்படாது. பகவானிடம் செல்வதற்காக நீ சேரவேண்டிய இந்த இன்னொரு காய் குரு என்பவரே.
>
> - பரமஹம்ஸ ராமகிருஷ்ணர்

மற்றவர் யாவரும் உணர்ச்சி வசப்பட்ட சமயத்தில், அவர்களைவிட ராமகிருஷ்ணருக்கு நெருக்கமான அம்மா எந்தக் கட்சியிலும் சேராமல், இப்படி பூரண விவேகத்துடன் பேசியதில் எத்துணை மாண்பு தெரிகிறது!

'பசங்கள்' அஸ்தியில் பாகப் பிரிவினை செய்து கொண்ட பின் சமரசம் ஏற்பட்டது. ஸ்ரீ கிருஷ்ணஜயந்தியான ஆகஸ்ட் 23ந் தேதியன்று மீதமுள்ள அஸ்தி காங்குர்காச்சியில் அடக்கம் செய்யப்பட்டபோது பசங்களும் அதில் மனப்பூர்வமாகக் கலந்து கொண்டனர்.

இதற்கு இரண்டு நாட்கள் முன்பே சாரதாமணி தாற்காலிகமாகப் பலராம பாபுவின் வீட்டுக்குப் பெயர்ந்தாள்.

ஒவ்வொரு விநாடியும் **அவருக்காக** என்றே வாழ்ந்த தேவியால், இப்போது அவருக்கென ஏதும் செய்யாமல் உயிர் தரிக்க முடியவில்லை. இப்போது 'இருக்கிற' அவருக்கு அவளது பணி ஏதுமே தேவையில்லையே! மற்றவர்களுக்காகவே வாழ்ந்த அவள் இன்று அவர்களுக்குப் பாரமாகி விட்டிருக்கிறாள். 'போதும் போதும் வாழ்ந்தது. போய்விட வேண்டியதுதான். ஆமாம், நிச்சயமாக!' — அம்மா உயிரை விடுவதென்று உறுதியாகச் சங்கற்பித்து விட்டாள்!

உடனே கேட்டது அந்தக் குரல். **அவர்**தான் பேசுகிறார்: ''நீ உயிரை விடறதாவது? கூடவே கூடாது. இருந்துண்டே இரு. செஞ்சாக வேண்டிய காரியம் ரொம்பப் பாக்கி இருக்கு.''

''பழுது ஒழிந்து எழுந்திருந்தான் பல்லமரர் குழாத்து உளான்..... 'இருந்தைக்க' எனப் போனான்''

அமரரிடை இடம் பெற்ற கோவலன் மரணம் என்ற உவத்தை ஒழித்து மீண்டும் எழுந்து வந்து, 'நீ இங்கிரு' என்று கண்ணகியிடம் கூறி 'மறைந்தானாம்! ராமகிருஷ்ணரும் ''நீ இங்கிரு'' என்று சொல்லிப் போனார் — இவள்

ளருக்கெல்லாம் அமுத மழை பொழிய வேண்டுமென்றே!

'அநாதை விதவையான நான் என்ன செய்யப் போறேன், எப்படிச் செய்யப் போறேன்? இப்படி உத்தரவு போடுகிறாரே!' அம்மா குழம்பினாள். ஆனாலும் அந்தப் பதிவிரதையால் பதியின் உத்தரவை மீறமுடியவில்லை. தன் குழந்தைகளின் பொருட்டு உயிர் வாழத்தான் வேண்டும் என்று அவர் சொல்வதை அன்பு அம்மா எப்படி மீறுவாள்! உயிரை விடுகிற உறுதியைக் கைவிட்டாள். வாழ முடியவில்லை; சாகவும் அநுமதி இல்லை. தத்தளித்தாள்.

அம்மா படும்பாட்டைக் கண்ட சிஷ்ய கோடிகள், அவளது மனத்தை மாற்றுவதற்காக அவளைப் பிருந்தாவனத்துக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தனர்.

ராமகிருஷ்ணர் தேகம் துறந்த பதினாறாவது நாளன்று சாரதா தேவி பிருந்தாவனத்துக்குப் புறப்பட்டாள். கோலாப் அம்மை, லக்ஷ்மி, ராமகிருஷ்ணரின் மொழியமுதத்தை அப்படியே எழுதி வைத்து உலகுக்கு ஈந்துள்ள மகேந்திரநாத் குப்தா என்பவரின் மனைவி, பிரமசாரிகளான யோகின், காளி, லாடு ஆகியோர் அம்மாவுடன் சென்றனர்.

முதலில் வைத்யநாத தேவக்ருஹத்தில் ('தியோகர்' என்பார்கள்) வழிபாடு செலுத்திவிட்டு வாரணாசியாகிய காசியை அடைந்தனர். அங்கு பத்துத் தினங்கள் தங்கியிருந்து விசுவேசுவரனையும், அன்னபூரணியையும் வழிபட்டாள் அம்மா. அன்னபூரணியான நம் அன்னை இன்று பூரணத்தைப் பறி கொடுத்து விட்டு இங்கு வந்து நின்றாள்.

அன்னபூரணியிடம் அவள் பதியையே பிட்சை கேட்டாளோ? அப்படித்தான் இருக்க வேண்டும். அவள் விசுவநாதனைத் தரிசித்துத் திரும்புகையில் திம் திம் என்று வேகமாக அடியெடுத்து வைத்து நடந்தது மற்றவர்களுக்கு விந்தையாக இருந்தது. பிறகு, ''என்னம்மா, வழக்கத்துக்கு விரோதமா அப்படி நடந்தேள்?'' என்று பக்தர்கள் கேட்டபோது, ''நானா நடந்தேன்? **அவர்** தான் என்னைப் பிடிச்சு இழுத்துண்டு வந்தார்'' என்றாள் தேவி.

காசியில் பாஸ்கரானந்தர் என்ற அவதூத சந்நியாசியைக் கண்டு உருகி நின்றாள் தேவி. ''மகாத்மா! சமநிலையிலேயே இருக்கிற மனசு வாய்ந்தவர். வெயிலோ, குளிரோ இப்படி அவதூதமாவே இருக்கார், ஆஹா'' என்று வியந்தாள். சுக துக்கங்களில் தான் அல்லல்படுவதை எண்ணிச் சொன்னாள்!

காசியில் ஒவ்வொரு மண்ணும் ஒரு சிவலிங்கம் என்பதால் அந்தப் புனிதப் பதியைக் கண் கொண்ட மட்டும் காண விரும்பினாள் தேவி. வேணி மாதவர் உப்பரிகை உச்சிக்குச் சென்று கண்ணுக்கெட்டும் வரையில் காசியைத் தரிசித்துக் கொண்டாள்.

ஸ்ரீ ராமச்சந்திரன் அவதரித்த அயோத்திக்கும் சென்று அதன்பின் பிருந்தாவனத்துக்குப் புறப்பட்டனர். ராமகிருஷ்ண சதி, ராமனைக் கண்டபின் கிருஷ்ணனைக் காணக் கிளம்பினாள்.

பிருந்தாவனத்தை நோக்கி ரயில் சென்று கொண்டிருந்தது. சன்னல் ஓரத்தில் அமர்ந்து பதியையே ஸ்மரித்துக் கொண்டிருந்தாள் சாரதை. ஓடுகிற ரயிலின் வெளியே இருந்து சன்னலுக்குள் திருமுகத்தை நீட்டினார் பதி. ''தாயத்தைத் தாரை வார்த்திடப் போறே! அது உங்கிட்டயே இருக்கணும். கவனமாயிரு'' என்று சொல்லி மறைந்தார்.


சன்னல்புறமாக இருந்த கரத்தில் தான் தேவி அவரது தாயத்தை அணிந்திருந்தாள். இவள் அயர்ந்து மறந்து உறங்கி விட்டால் வெளியே யிருந்து எவரேனும் அதைப் பறித்துக் கொண்டு போய்விடலாம்! அந்த ரகசிய மூலம் அவளை ரக்ஷித்து வந்த நாயகர் சமயத்தில் வந்து உணர்த்தி விட்டார்!


சாரதை அவசர அவசரமாகத் தனது தகர டப்பாவைத் திறந்தாள். அதிலே அவள் நீண்ட காலமாகத் தெய்வ உருவங்களோடு வைத்து வழிபட்ட ராமகிருஷ்ணரின் புகைப்படம் இருந்தது. ஒரு சிறு குடுவையில் குரு மகாராஜின் அஸ்தியும் இருந்தது. இவளது உடம்புக்கே அவர் பூஜை புரிந்ததுண்டு. அவரது உடல் நீற்றுப் போன பின் அதன் துகளை வைத்து இவள் பூஜித்தாள். இப்போது தாயத்தைக் கையிலிருந்து அவிழ்த்து அந்தப் படத்தோடும், அஸ்தியோடும் சேர்த்து வைத்தாள் அம்மா. அன்றிலிருந்து அத்தாயத்து அவள் கையில் ஏறாமல், அவள் கை குவிக்கும் வழிபாட்டுச் சின்னமாயிற்று.

பிருந்தாவனத்தில் எல்லோரும் ரயிலிலிருந்து இறங்கினர். ரயில் பெட்டியின் ஒரு மூலையில் கிடந்த லாடுவின் புகைக் குழாயை எடுத்து வந்த கோலாப் அதை அம்மாவிடம் கொடுத்தாள்.

அம்மா அதை வாங்கிக் கொண்டவுடன் லக்ஷ்மி, ''சித்தி, இப்பவே புகைக் குழாயையெடுத்துண்டுட்டியா?'' என்றாள்.

அம்மா திகைத்திட்டு நின்றாள். பழைய நினைவு அலைமோதிக் கொண்டு வந்தது: ஒருநாள் ராமகிருஷ்ணர், தாம் மீண்டும் அவதரிக்கப் போவதாகவும்,











அப்போது தாம் ஒரு பாவுலாக இருக்கப் போவதாகவும் கூறினார். 'பாவுல்' என்பது 'வாதூல' என்பதன் திரிபு. 'வாதூல' என்றால் 'வெறி பிடித்தவர்' என்று பொருள். வங்கச் சீமையில் சடை முடியும், கிழிசல் உடையுமாக, 'ஏக்தரா' எனப்படும் ஒற்றைத் தந்தித் தம்புராவை மீட்டிக் கொண்டு பக்திப் போதையில் பரவசமாக ஆடிப் பாடித் திரிகிற ஒரு சாராரை 'பாவுல்' என்பார்கள்.

பாவுல் அவதாரத்திலும் இப்போது தம்முடன் இருப்பவர்கள் உடன் வருவர் என்றும் ராமகிருஷ்ணர் கூறினார்.

''ஐயோ அம்மாடி! நான் மறுபடி வரமாட்டேன் சித்தப்பா! என்னைப் புகையிலையை வைச்சு நறுக்கற மாதிரி நறுக்கினாக்கூட புனர் ஜன்மா எடுக்க மாட்டேன்'' என்றாள் லக்ஷ்மி. வெளிப் பார்வைக்கு உற்சாகமாக இருந்தாலும் சிறு வயதில் பதியை இழந்து உள்ளே அடிபட்டிருந்த பெண் நெஞ்சு அப்படிப் பேசியது.

''வரலேன்னா உன்னை யார் விட்டாடி பெண்ணே! அதுவும் இல்லாம, நானே கீழே மறுபடி வந்தவிட்டு, நீ அங்கே எப்படி இருப்பே! அங்கேயும் உனக்குப் பிடிக்காமப் போயிடும். ஜலத்திலே வளருகிற கல்மிக் கொடி பார்த்திருக்கியோ? அது கொத்துக் கொத்தாக வளரும். எங்கேயானும் ஏதாவது ஓர் இழையைப் பிடித்து இழுத்தாலும் அத்தனை கொடியும் சேர்ந்துதான் வரும். அந்த மாதிரி நான் வந்தேன்னா நீங்க இத்தனை பேரும் சேர்ந்து வரத்தான் வரணும்'' என்ற ராமகிருஷ்ணர் சாரதையைப் பார்த்து, ''நான் பாவுலாக் கொட்டம் அடிக்கறச்சே நீயும் மறுபடி வருவே! புகைக் குழாயை நீதான் வச்சிண்டிருப்பே!'' என்றார். பாவுல்கள் ஓயாமல் புகைப்பர்.

லாடுவின் புகைக் குழாயை அம்மா வாங்கிக் கொண்டதும் இதைத்தான் நினைவுகூர்ந்தாள் சாரதை.

அன்று லக்ஷ்மி இருந்த அதே மனோபாவத்தில்தான் இன்று சாரதை இருந்தாள். அவர் எத்தனைதான் தரிசனம் தந்தாலும், அசரீரியாகப் பேசினாலும் பழைய ஆனந்த வாழ்க்கை கொள்ளை போனதாகவே உணர்ந்தாள் தேவி. இந்த ஜன்மாவே போதும் என்றிருந்தது. இன்னும் ஒரு ஜன்மம் வேறு?

சாரதையின் நயனங்கள் நனைந்தன. தழுதழுக்கிற குரலில், ''பிரபோ! என் பிரபோ! புகைக் குழாயை வைச்சுக்கணும் என்கிற உத்தரவையும் இதோ நிறைவேற்றி விட்டேன். இதோடு தீர்ந்து போனதா இருக்கட்டும்'' என்று அரற்றினாள். கையிலிருந்த குழாயைத் தடாலென்று கீழே எறிந்தாள் — ஒரு பிறவியையே சுழற்றி எறிகிற தீவிர உணர்வுடன்.

பரமபதநாதன் ஆயப் பிள்ளையாக வந்து சப்த பிரம்மத்தை மூங்கில் குழல் மூலம் வாரிப் பொழிந்து புண்ணியம் கூட்டிய பிருந்தாவனத்துக்கு வந்து சேர்ந்தாள் தேவி.

புரட்டாசித் தொடக்கம். புரட்டிக் கொண்டு ஓடினாள் யமுனை நதி. பிருந்தாவனத்திலே மரம் கொடி புதர்கள் எல்லாம் பச்சை மண்டிக் கிடந்தன. காற்றிலே பூக்களின் மணம் கரைந்து கிடந்தது. மயில்களின் 'ஷட்ஜ' ஆலாபனையும், மாடுகளின் கம்பீரமான 'ரிஷப' கோஷமும் எங்கும் நிறைந்திருந்தன.. மானிடர்களின் காலடி கேட்டு மான்கள் பெயர்ந்தோடுவதும் இனிய காட்சியாக இருந்தது. சாரதைக்கு மட்டும் இனிமை தெரியவில்லை. தனிமையே தெரிந்தது. கிருஷ்ணனைக் காண வந்தாள். ஆனால் கண்ணனை வடமதுரைக்கு அனுப்பி விட்டுத் தவித்த கோபியரை மட்டுமே பிருந்தாவனத்தில் பார்ப்பது போலிருந்தது அவளுக்கு. ஈரமான யமுனைக் கரை முழுவதும் ராதையின் கண்ணீரில் நனைந்ததாகவே அவளுக்குத் தோன்றியது. அதை அம்மா அன்பு நினைவால் மேலும் நனைத்தாள். **(தொடரும்)**

உங்கள் வாய்க்கு பூரண பாது
காப்பு அளிக்கும் டூத் பேஸ்ட் இதுவே—**நீம்**

நீம் டூத் பேஸ்ட் உங்கள் பற்களை சுத்தம் செய்வதுடன் வேறு பல நன்மைகளையும் தருகின்றன. அதிலுள்ள சுகாதாரத்திற்கேற்ற அரிய பொருள்கள் உங்கள் பற்களை பலப்படுத்தி, ஈறுகளில் விஷக் கிருமிகள் தொத்திக் கொள்ளாமல் தடுத்து. கெட்ட சுவாசத்தை அறவே அகற்றி வாயை தூய்மை படுத்துகிறது.



இது ஒரு கல்கத்தா
கெமிகல் தயாரிப்பு.

NTP/2-70 Tam

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான
ஹெடன்ஸா
களிம்பு
உபயோகித்து
நிவாரணம்
அடையுங்கள்;
—ரண
சிகிச்சையையும்
தடுங்கள்

Bensons-2141 TAM

ஆஸ்துமா நிவாரண மூலிகை

ராஜஸ்தான் பிரபல அரசியல் சமூகத் தலைவர் காலஞ்சென்ற ஸ்ரீ சம்புநாத் அவர்களின் பேரன் ஸ்ரீ கேசவ் மோஹன்லால் ஏழைகளுக்கு ஆஸ்துமா நிவாரண மூலிகை வினியோகிக்கிறார். ஸ்ரீ சம்புநாத் அவர்களுக்கு இந்த மூலிகை ஒரு சந்நியாசியால் கொடுக்கப்பட்டு கடந்த 40 ஆண்டுகளாக இலவசமாக வினியோகிக்கப்பட்டது. இத்தன்னலமற்ற சேவைக்கு அரசாங்கம் உபகாரச் சம்பளம் அளித்தது. ஆனால் இந்த நற்பணியை அவர் தன் பேரனிடம் ஒப்படைத்து விட்டு துறவியானார். தற்பொழுது இப் பணியை பேரன் நடத்துவதோடு இதற்கும் பண உதவி செய்யுமாறு தனவந்தர்களைக் கேட்டுக் கொள்கிறார். மூன்று டோஸ் மருந்து சாப்பிட்டதுமே ஆஸ்துமாவினால் அவதிப்புறும் பலர் நிவாரண மடைந்துள்ளனர். ஆஸ்துமாவினால் அவதிப்புறுபவர்கள் மூலிகைக்கு நேர்க்கண்ட விலாசத்திற்கு ஆங்கிலத்தில் எழுதவும்.

SRI KESHAV MOHAN LAL
P. B. No. 11463
CALCUTTA-6

மேற்கு வங்காள சங்கங்கள் ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் 1961 கீழ் நிறுவப்பட்ட பாபா ஸ்ரீ சம்புநாத் சேவா கேந்திராவினால் வியாதியஸ்தர்கள், டாக்டர்கள், மருத்துவர்கள் அளிக்கும் நன்கொடையின் மூலம் ஆஸ்துமாவினால் அவதிப்புறுபவர்களின் நலனுக்காக வெளியிடப்பட்டது.

NAA/E/72



ஒவ்வொருவரின்
மேனிக்கும்
பாதுகாப்பு தேவை
CINTHOL
DEODORANT
LUXURY
TOILET POWDER
WITH G-11
BY
வியர்வை துர்நாற்றத்-
திலிருந்தும், அதனால்
நுண்ணிய கிருமிகளிட
மிருந்தும் உங்களுக்கும்,
மற்றவர்களுக்கும் ஏற்படும்
சங்கடத்திலிருந்தும் பாது
காப் பளிக்கிறது.
ஜி-11 கலந்த
சிந்தால் டாய்லெட் பவுடர்
இந்தப் பாதுகாப்பைத்
தருகிறது. அதோடு...
அன்றலர்ந்த மலரின்
நறுமணத்தையும் தருகிறது.
சிந்தால்—
துர்நாற்றத்தை அறவே
போக்கிப் பாதுகாப்பளிக்
கும் டாய்லெட் பவுடர்.
Interpub/GSP-4/72 R Tam

மிதக்கும் சர்வகலாசாலை



''உங்கள் சர்வகலாசாலை மாணவர்களிடையே ஸ்டிரைக், மாணவர் தகராறு ஏதேனும் உண்டா?'' — சென்னை பத்திரிகை புகைப்பட நிருபர் கேட்டார். ''கிடையவே கிடையாது'' என்று பதில் கிடைத்தது.

இதென்னடா அதிசயம் என்று நினைக்கிறீர்களா? இது ஒரு பாதி அதிசயம்தான்; மறுபாதி என்னவென்றால் இந்தச் சர்வ கலாசாலை ஒரு கப்பலில் அமைந்திருக்கிறது. மிதக்கும் சர்வகலாசாலை இது!

அமெரிக்கா, கலிபோர்னியா மாநிலத்தில் ஆரஞ்சு நகரில் சாப்மன் கல்லூரி இருக்கிறது. இந்தக் கல்லூரியின் ஆதரவில் இந்த 'மிதக்கும் சர்வ கலாசாலை' பல நாட்டுக் கலைகளை நேரிடை அனுபவமாக மாணவர்களுக்குப் பெற்றுத் தர அவ்வப்போது புறப்படுகிறது. ஒவ்வொரு பயணமும் நாலு மாதங்கள் நீடிக்கும். உலகிலேயே இது ஒன்றுதான் மிதக்கும் சர்வகலாசாலை. இதில் 252 மாணவிகளும் 163 மாணவர்களும் 63 ஆசிரிய ஆசிரியைகளும் உள்ளனர். இவர்கள் இருநூறு அமெரிக்கக் கல்லூரிகளையும் சர்வ கலாசாலைகளையும் சேர்ந்தவர்கள். 86 துறைகளில் பயிற்சியைத் தொடர இக்கப்பலில் வாய்ப்புண்டு.

மாணவர் தலைவர் ரால்ப் பேர்கிஸன் மிதக்கும் சர்வகலாசாலைக் கப்பலைச் சுற்றிப் பார்க்கப் பத்திரிகை நிருபர்களை அழைத்துச் சென்றார். கப்பலுக்குள் அழகான நூலகம். எண்ணாயிரம் புத்தகங்கள் மாணவர்களுக்கு அறிவூட்டக் காத்திருக்கின்றன. வகுப்பு அறைகள் பிரம்மாண்டமாகச் சகல வசதிகளுடன் காட்சியளிக்கின்றன.

''விளையாட்டுக் கலைகளிலும் ஈடுபட இந்தக் கப்பலில் வசதி உண்டா?''

''ஓ! இதோ பாருங்கள் நீச்சல் குளம். அங்கே கப்பலின் ஒரு மூலையில் பந்து நீரில் விழுந்துவிடாமலிருக்கச் சுவர் எழுப்பினாற் போல் வலை பின்னி வைத்துக் கூடைப் பந்தும் வாலிபாலும் விளையாடுகிறோம்.''

மாணவர்கள், பேராசிரியர்களுக்கான அறைகளைக் கடந்து சென்று பார்பர் ஷாப், பியூட்டி ஷாப் ஆகியவற்றைப் பார்த்த பிறகு பிரம்மாண்டமான தியேட்டருக்குள் நுழைந்தோம்.

''எங்களுக்கு இது சினிமாத் தியேட்டர் மட்டுமல்ல; வகுப்பு அறை கூட. இங்கே கல்வி விளக்கப் படங்களும் கலை உணர்வூட்டும் படங்களும் காட்டப்படுகின்றன. பொழுது போக்குப் படங்களும் எங்களுக்குப் போட்டுக் காட்டுகிறார்கள். ஆங்கில, சிங்கள, ஜப்பானிய, சீனப் படங்களும் பார்க்கிறோம். சமீபத்தில் இந்திய கல்வித் துறைப் படம் ஒன்றைப் பார்த்தோம்!'' என்றார் மாணவர் தலைவர்.

சாப்மன் மிதக்கும் சர்வ கலாசாலை மாணவர் டேவிட் குரோபரைச் சந்தித்தோம். நாடகக் கலைக்கான புத்தகத்தைப் படிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். ஹிப்பி பாணியில் உடை அணிந்திருக்கும் இம்மாணவரைச் சில கேள்விகள் கேட்டோம்.

''பட்டம் பெற நான்கு வருஷங்கள் ஒரு கல்லூரியில் பயில வேண்டும். இந்த நான்கு மாதங்கள் மிதக்கும் சர்வ கலாசாலையில் விசேஷப் பயிற்சி பெற வந்திருக்கிறேன். எனது பாடங்கள் டெலிவிஷன், நாடகத் துறை, சினிமாத் துறை ஆகியவை. மிதக்கும் சர்வகலாசாலையில் நானே ஓரங்க நாடகங்களை எழுதித் தயாரித்து டைரக்டும் செய்திருக்கிறேன். இதுவரை இரண்டு நாடகங்களைக் கப்பலில் என் நாடகத் துறை மாணவர்களோடு சேர்ந்து அரங்கேற்றி யிருக்கிறேன்'' என்றார் திரு டேவிட் குரோபர்.

பாம் என்ற மாணவி சங்கீதத்தை முணுமுணுத்துக் கொண்டே வந்தார்.

''இவர் சங்கீதப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார். இவருக்குப் புல்லாங்குழல், பியானோ ஆகியவை நன்றாக வாசிக்கத் தெரியும். மேற்கத்திய இசையைப் பற்றிப் படித்து வரும் இம்மாணவி கர்நாடக இசையைப் பற்றி அறியத் தமிழகத்துக்கு வந்திருக்கிறார்'' என்று அறிமுகம் செய்துவைத்தார் திரு டேவிட் குரோபர்.

''நல்ல இசைக் கச்சேரிகளைக் கேட்க ஆசை. உங்கள் இசையை முற்றிலும் இந்தக் குறுகிய காலத்தில் கற்றுக் கொண்டு சென்றுவிட முடியாது. ஆனால் நல்ல சங்கீதத்தைக் கேட்ட திருப்தியுடன் திரும்புவேன்'' என்றாள் மாணவி பாம்.

''இன்று எங்களுக்காக ஸ்ரீமதி கமலாவின் நடனம் நடக்கப் போகிறது. பரத நாட்டியத்தைப் பார்த்துவிட்டு நடனத் துறையில் ஈடுபட்ட மாணவிகள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் தயாரித்தளிக்க வேண்டும்!'' என்றார் டேவிட் குரோபர்.

டாக்டர் எட்வின் ஜி. ஆல்டர்ஸன் பி.எச்டி. அவர்கள் தலைமையில் ஒரு பேராசிரியர் குழு மாணவர்களைக் கவனித்துக் கொள்கிறது.

சாப்மன் கல்லூரி இந்த ஒரு கப்பல் தவிர பிரசித்தி பெற்ற குவீன் எலிசபெத் என்ற கப்பலையும் திரு ஸி. ஓய். டங் என்பாருடைய ஆதரவுடன் விலைக்கு வாங்கி யிருந்தது. பல்கலைக் கழகமாக அதனை உருமாற்ற வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது திடீரென நெருப்புப் பிடித்துக் கொள்ளவே, அந்தக் கப்பலை இழக்கும்படியாகி விட்டது. நற்பணிக்கு ஏற்பட்ட இடையூற்றையும் ஏராளமான பொருள் நஷ்டத்தையும் பொருட்படுத்தாமல் தற்போது இந்த ஓர் அலை கடல் பல்கலைக் கழகத்தை மட்டும் நடத்தி வருகிறார்கள்.

— பி. எஸ். மணி

ஏக்கங்கள், எதிர்ப்புகள்; முயற்சிகள், வெற்றிகள்!

3

வரவேற்புக்கு ஒரு வனிதை

குமாரி எஸ். சவிதா பி. ஏ.

எஸ். ஐ. இ. டி. கல்லூரியில் சரித்திரப் பாடத்தை எடுத்துப் படித்துப் பட்டம் வாங்கிய குமாரி சவிதாவிடம் கேட்கிறோம்:

''மிஸ், சவிதா! இன்று நம் பெண்மணிகளிடையே ஆடை அலங்காரங்களைப் பொறுத்த நாகரிக வளர்ச்சியைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?''

''நமக்காகத்தான் நாகரிகமே தவிர நாகரிகத்தின் தேவைகளுக்காக நாம் வாழவில்லை என்ற கொள்கை எனக்கு. கல்லூரி நாட்களிலே கொஞ்சம் 'ஓவராகவே' கரெண்ட்



ஃபாஷனைப் பின்பற்றத் தோன்றும். நான் கூட விதிவிலக்கு இல்லை. இப்போது பொறுப்பாக, இந்த 'ஏஷியன் டிராவல்ஸ்' நிறுவனத்தில் வரவேற்பாளராகப் பணியாற்றுகிறேன். என்னை இன்னும் ஒரு ஸ்டூடண்ட் மாதிரியே நினைத்துக் கொண்டு கண்டபடி டிரஸ் செய்து கொள்ள நினைக்கக் கூடாது. இங்கெல்லாம் டிரஸ் 'மாடஸ்ட்' ஆகவும் இருக்க வேண்டும்; 'மாடர்ன்'ஆகவும் இருக்க வேண்டும். இங்கே பல பிரதேசங்களைச் சேர்ந்த பலதரப்பட்டவர்கள் வருகிறார்கள். அவர்கள் மனத்தில் கண்ணியத்தைத் தோற்றுவிக்க வேண்டும். ஃபாஷனாக இருக்கலாம்! ஆனால் பார்க்கிறவர்கள் 'சீப்'பாக நினைத்துவிடக் கூடாது!''

''வெரிகுட்! ஒரு லெக்சரே அடிச்சுட்டீங்க! இந்த ரிசப்ஷனிஸ்ட் வேலை பார்க்க வேண்டும் என்பதுதான் உங்கள் கல்லூரி நாள் ஆசையா?''

''இல்லை! லைப்ரரி சயன்ஸ் படிக்க வேண்டும் என்று திட்டம். ஆனால் அதற்குமுன் இந்த வேலை கிடைத்தது. முதல் நாள் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போல் இருந்தது. எல்லாம் புது முகங்கள். பத்து நாட்களில் வேலை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டேன்! இதில் பொதுஜனத் தொடர்பு இருக்கு. சுவாரசியமான வேலை!''



ஓட்டல் கலை நிபுணர்

திரு ராம்ஜீ

இளைஞர் ராம்ஜீ இன்றைய இளைஞர் சமுதாயத்தின் ஒரு சரியான பிரதிநிதி. சட்டென்று பார்க்கும்போது ஆங்கிலேய சரித்திரப் புத்தகத்திலிருந்து லார்ட் க்ளைவோ, காரன்வாலிஸோ இறங்கி வந்த மாதிரி இருக்கும். 'சைட் பர்ன்ஸ்' என்று செல்லமாகக் கூறப்படும் கிருதாவை அவ்வளவு சிரத்தையாகச் சரித்திர பாணியில் போற்றி வளர்த்து வருபவர் ராம்ஜீ!

''இதோ பாருங்க! இதெல்லாம் நாகரிகம் என்பதோடு சேர்ந்ததில்லை. இது ஒரு Trend அதாவது... என்னசொல்றது... ஒரு போக்கு, ஒரு மாற்றம் அவ்வளவுதான்! இப்போ நாங்கள் எல்லோரும் இப்படி இருக்கிறோம். இன்னும் இரண்டு வருஷங்களிலே ஒரு புது மாறுதல் வந்தாலும் வரலாம்! அப்போ நாங்கள் எல்லோருமே யூல் பிரின்னர் மாதிரி பளபளன்னு தலையை மொட்டை அடித்துக் கொண்டாலும் கொள்வோம்! இந்த மாறுதல்கள் போக்குகள் எல்லாம் ஆராய்ச்சி செய்யப்பட வேண்டிய விஷயங்கள் இல்லை. எங்களைப் பார்த்து வயதானவர்களும் கிருதா வைத்துக் கொள்கிறார்களே! அதற்கு என்ன சொல்கிறீர்கள்?'' என்கிறார் ராம்ஜீ.

காட்டரிங் டெக்னலஜி படித்து விட்டு ஹோட்டல் அப்போலோவில் ஒரு நிர்வாகியாக இருக்கும் ராம்ஜீக்குப் பொழுதுபோக்கு

மேற்கத்திய இசையை ரசிப்பது. இவர், தம் நண்பர்களைக் கொண்டு ஒரு குழுவே அமைத்திருக்கிறார். அதற்குப் பெயர் என்ன தெரியுமா? Frustrations Amalgamated! தமிழில் குறிப்பிட்டால் ''ஏமாற்றங்களின் சம்மேளனம்'' என்று சொல்லலாம். ஆனால் இந்தக் குழு ராக் மியூசிக் கேட்க வந்தவர்களை ஏமாற்றத்துக்குள்ளாக்குவதில்லை.



ஏதோ நினைத்து எப்படியோ முடிந்தது!

வி. கே. ராகவன், பி. எஸ்ஸி.

''மிஸ்டர், ராகவன்! உங்க காலேஜ் நாட்களிலே பிற்கால வாழ்க்கை எப்படி அமையணும்னு எதிர்பார்த்தீங்க ? உங்க ஆசைக்கு வெற்றியா ? தோல்வியா ?''

''பள்ளிக்கூட நாட்களிலே இஞ்சினீயராக ஆகணும்னு ஆசைப்பட்டது உண்டு. பி.யூ.சி. பாஸ் பண்ணிட்டு முயற்சி செய்தபோது இஞ்சினீயரிங் கல்லூரியிலே 'சீட்' கிடைக்கல்லே! ஆகவே, இந்த இஞ்சினீயராகும் ஆசையைக் கட்டி வைத்துவிட்டுப் பிரசிடென்சி கல்லூரியிலே பௌதிகத்தைப் பாடமாக எடுத்துக் கொண்டு பி. எஸ்ஸி.யை முடித்தேன். அப்புறம் கம்ப்யூட்டர் மெஷின் சம்பந்தமான கோர்ஸ் படித்து மூன்று மாதங்கள் இங்கே வேலை பார்த்தேன். சென்னைக்கு வெளியே போனால்தான் அத்துறையில் தொடர்ந்து வேலை பார்க்க முடியும் என்ற நிலை ஏற்பட்டபோது நான் ஒதுங்கிவிட்டேன். வீட்டுக்கு ஒரு பிள்ளை. என் பெற்றோர்கள் அனுமதிக்கவில்லை. அதனாலே சேல்ஸ் ரெப்ரசென்டேடிவ் ஆயிட்டேன்! சிட்டியிலேதான் டியூட்டி !''

'' நீங்க இந்த மாறுதல்களை ஓர் ஏமாற்றம் என்று நினைக்கல்லே! அப்படித்தானே?''


''செர்ட்டன்லி! நான் ஓர் ஆப்டிமிஸ்ட் ! வாழ்க்கையில் பிரகாசமான அம்சங்கள்தான் அதிகம் என்று நினைப்பவன்! Life is for living என்ற கொள்கை உடையவன்.''

எழுதினார் : ஆனால் எடுபடவில்லை!

திரு வி. தங்கமணி

மெட்ரிகுலேஷன் வரை படித்த தங்கமணிக்கு உள்ளூரிலேயே பெருந்தனக்காரர் வீடு ஒன்றில் கணக்கு வழக்கு எழுதி உத்தியோகம் பார்க்கும் வாய்ப்பு இருந்தது. ஆனால் இவருக்கு இந்த வேலையில் மனம் லயிக்கவில்லை. ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் இவர்.

பள்ளி நாட்களில் வருடாந்தர விழாக்களுக்காக நாடகங்கள் எழுதி சக மாணவர்களை நடிக்க வைத்த அனுபவம் உண்டு. அந்த அனுபவத்தின் அடிப்படையில் ஓர் எழுத்தாளனாக வேண்டும் என்ற ஆர்வம் தலைதூக்கியது. சென்னைக்கு வந்தால்தான் அந்த எண்ணம் கைகூடும் என்று யாரோ சொன்னார்கள். ஆகவே, ஏதாவது உத்தி



யோகம் பார்த்தால் அது சென்னையில்தான் அமைய வேண்டும் என்று கிளம்பி வந்துவிட்டார்.

பல இடங்களில் வேலை தேடிப் படி ஏறி இறங்கினார். ''நோ வேகன்ஸி'' என்ற பலகைகளும் பதில்களும் இவரைத் தொடர்ந்து பயமுறுத்தின. கடைசியில் ஒரு ஹோட்டல் அதிபர் இவருக்கு வேலை கொடுத்து அபயமளித்தார்.

ஓய்வு நேரங்களில் கதைகள் எழுத ஆரம்பித்தார். பத்திரிகைக் காரியாலயங்களுக்குப் போய் அவை திரும்பி வர ஆரம்பித்தன. தங்கமணி மனம் சலித்தார். இப்போது எழுதுவதில்லை.

சில சக தொழிலாளிகளைப் போல், திரைப்படம், நாடகங்களில் நடிக்க வேண்டும் என்ற ஆசை இவருக்குக் கிடையாது. வரவுக்குள் செலவு என்ற கொள்கை உடையவர்.



வர்ணங்களிடையில் வாழ்பவர் — இரு ஸ். துரைசாமி

'நிர்வாண தேசத்திலே கோவணம் கட்டினவன் பைத்தியக்காரன்' என்று வசனம் சொல்லுவாங்களே? ஞாபகம் இருக்கா? இந்த 'லாங் ஹேர் -- தொங்கு மீசை' சகாப்தத்திலே 'க்ளோஸ் — க்ராப்' வைச்சுக்கிடறவன் லூஸ்! சமீபத்திலே திருப்பதிக்குப் போய்விட்டு வந்தேன்! இல்லாதபோனால் எனக்குப் பாகவதர் கிராப்பும், பக்கவாட்டுக் கோவும் படுத்துத் தூங்கும் மீசையும் இப்போதிருப்பதைவிட இன்னும் அதிகமாகவே இருக்கும். இரண்டு மாதங்கள் கழித்தால் முழுமையாக அந்தக் கோலத்தைப் பெற்று விடுவேன்.

இப்பேர் இளைஞனுக்கு அடையாளம் அதுதானே? அந்த முத்திரையைப் பதித்துக் கொள்வதில் என் அம்மாவுக்கு ஆட்சேபணை உண்டு. 'நாசமாய்ப் போக' என்று திட்டுவாள். ஆனால் அவள் சாபம் ஒன்றும் இந்த விஷயத்தில் பலிக்காது. எங்க மாமாதான் ஒரு தடவை ஒரு பொட்டலத்திலே ரிப்பனை மடக்கி வைத்துக் கொடுத்தார். கொஞ்சம் இண்டல் பேர்வழி. ''வைத்துக் கொள் துரை! கொஞ்ச நாட்களிலே உன் தலைக்குத் தேவைப்படும்'' என்றார். அவருக்குத் தெரியுமா 'லாங்ஹேர்' பெருமை!

ஹாய்யாக நாலைந்து நண்பர்களுடன் சைக்கிளில் உலகப் பிரயாணம் செய்ய வேண்டும் என்பது என் ஆசை. நாலு வருடங்களுக்கு முன் தீவிரமாக முயற்சி செய்தேன். அந்நியச் செலாவணி அது இது என்று சொல்லி என்னைப் பயமுறுத்திட்டாங்க! திட்டம் அவுட்! ஆனாலும் அந்த ஆசை ஒரு நாள் நிறைவேறாமலா போகப் போகிறது?

ஒரு மோட்டார் வியாபார நிறுவனத்தில் நான் 'பெயிண்டர்'. அங்கே கார்களுக்கு வர்ணம் பூசினாலும், தனிப்பட்ட முறையில் நான் ஒரு 'லாண்ட்ஸ்கேப்' பெயிண்டர்! அப்பப்போ, ஒரு குளத்தங்கரை, நாலு தென்னை மரங்கள், குடம் சுமக்கும் ஒரு பெண் என்று போடுவேன். அதை மதித்துப் போற்ற யாரும் முன்வரவில்லையே? ஒரு நாளைக்குக் கோபத்திலே அத்தனை பெயிண்டு டப்பாக்களையும் மொத்தமாகக் கரைத்துக் கொட்டப் போகிறேன். அதை ஒருவேளை 'மாடர்ன் ஆர்ட்' என்று புகழுவார்களோ, என்னவோ?

காப்பி அடிப்பதிலும் கருத்து வேண்டும்

என். சந்திரமௌளி
பி. காம். ஏ. ஸி. ஏ.

பள்ளிக்கூடம் கல்லூரி இவைகளில் படிக்கும்போதே, என் பிற்கால வாழ்க்கையைப் பற்றி ஒரு திட்டம் போட்டுக் கொண்டேன். அது நிறைவேறியது. என் பெற்றோர்களும் அதற்கு ஆட்சேபணை எழுப்பவில்லை. இப்போது தனியார் வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் பணியாற்றி வருகிறேன். என்னுடைய துறையில் சொந்தமாகவும் தொழில் செய்யலாம். அதுதான் ஆடிட்டர் துறை! ஸ்தாபனங்களில் சேர்ந்தும் பணியாற்றலாம். இப்போதைக்கு இரண்டாவதைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.

எனக்கு இப்போதைய ஃபாஷன் மாதிரி நீளமாகத் தலையை வளர்த்துக் கொள்வது, தொங்கு மீசை வைத்துக் கொள்வது என்பதெல்லாம் பிடிக்காது. 'ஐரோப்பாவிலே இளைஞர்கள் இப்படி வைத்துக் கொள்ளவில்லையா? அமெரிக்காவில் இல்லையா?' என்று கேள்விகளை வீசுகிறார்கள். காப்பியடிக்கிறதிலும் ஓர் அர்த்தம் இருக்கணும்! உழைப்பிலேயும், பொருளாதார முன்னேற்றத்திலேயும் காப்பியடிக்கட்டுமே! இதெல்லாம் சுத்தபாஷ்!



மாடர்ன் கேர்ள்ஸ்!... பாவமா இருக்கு பார்த்தா! 'லோ—ஹிப்' ஃபாஷனும்! ஒரு குழந்தை கால்பட்டு மிதித்தால்கூடப் புடவை நழுவிவிடுமோ என்று பார்ப்பவர்கள் பயப்படும் நிலை! இதெல்லாம் ரொம்ப அவசியமா?

பேட்டிகள்: **கோமதி ஸ்வாமிநாதன்**

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)